


# ஆதவன் சிறுகதைகள்


சிறுகதை மஞ்சரியின் சிறப்பிதழ்

ஆசிரியர்: மு. தயாளன்

40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்




மு.தயாளன்



மு.தயாளன்




மு.தயாளன்




மு.தயாளன்



மு.தயாளன்




மு.தயாளன்




மு.தயாளன்



மு.தயாளன்




மு.தயாளன்



மு.தயாளன்



மு.தயாளன்



மு.தயாளன்




மு.தயாளன்




மு.தயாளன்




மு.தயாளன்



சு. ஆர்த்திகா



அலெக்ஸ்
பரந்தாமன்



சியாமளா



பிரமி




M.Thayalan




M.Thayalan




M.Thayalan




M.Thayalan



மு.தயாளன்

எனது எல்லாப்புத்தகங்களும் சிறுகதை மஞ்சரிகளும்
**Amazon Kindle** இல் உள்ளன.
**www.amazon.co.uk/ebooks** இல்
**Type M.Thayalan**

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை luxmi2128@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதோடு பேசுவோம்....

இவ் இதழ் ஆதவனின் பத்துக் கதைகளுடன் வருகிறது. இரண்டு வருடங்களாக இலக்கிய உலகில் தன்னை அடையாளம் காட்டிவரும் இளம் எழுத்தாளரான ஆதவனின் மஞ்சரியில் வாராத பத்துக்கதைகளை உங்கள் முன் கொண்டு வந்திருக்கிறோம். தான் வாழும் இடத்தை அங்கு தோற்றும் பிரச்சினைகளை தன் கதைகளில் இயல்பாகக் கொண்டு வந்திருக்கிறார். சமூகத்தை பூதக் கண்ணாடி கொண்டு பார்த்திருக்கிறார். நீங்களும் அவர் கதைகளை பூதக் கண்ணாடி கொண்டு பார்க்க வேண்டுமென்பது எனது அவா. சிறுகதை மஞ்சரி 40 இதழ்களை இதுவரை உங்களுக்குத் தந்துள்ளது. ஒவ்வொரு நான்கு இதழ்களுக்கொரு தடவை ஒரே எழுத்தாளரின் கதைகளை வெளியிடுவதாக தீர்மானித்து இது இரண்டாவது தொகுப்பாக வெளிவருகிறது.

தொடர்ச்சியாக சிறுகதை மஞ்சரியின் வருகைக்கு ஆதரவுக்கரம் நீட்டும் உங்களுக்கு எமது நன்றிகள். தொடர்ந்து புதியவர்கள் எம்மை நோக்கி வரவேண்டுமென அன்போடு வேண்டுகின்றேன்.

உங்கள் நண்பன்

**மு.தயாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


ஆதவன்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 1 |
| உள்ளடக்கம் | 2 |
| ஆதவன் இதயத்திலிருந்து | 3 |
| இரண்டு மணித்தியாலங்கள் | 4 |
| கள்ளியின் கதை | 11 |
| கமுகு. | 18 |
| சிறுகதை மஞ்சரி வாசகர் வட்டம் | 29 |
| குடைச்சல் | 30 |
| ஒரு மாமரத்தின் கதை | 36 |
| பெட்டிக்கடை | 41 |
| பிப்பிலி. | 46 |
| சிரிப்பு. | 51 |
| தாலாட்டு | 56 |
| வெப்பவலயம் | 63 |
| சிறுகதை பற்றி | 70 |
| மஞ்சரி 39 ஒரு பார்வை | 72 |



**விநியோகம்:**

யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் ,+94 773788795

மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் +94 774338878

திருகோணமலை: த. சரண்யா, +94765554649

வெண்பா புத்தகசாலை, யாழ்ப்பாணம் + 94 212 225 090

**சந்தா விபரம்:**

**Srilanka:**1000Rs/Year
Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year **Den/Swiss/Ger:** 80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan, Barclays, Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307
SWIFTBIC BUKBGB22

**முதன்மை ஆசிரியர்**

மு. தயாளன்

**உதவி ஆசிரியர்கள்**

வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்

**ஒப்பு நோக்காளர்கள்:**

திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்

**ஆலோசகர்கள்**

Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா



**தொடர்பு முகவரி:**

**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811

**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649



**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் , T. சௌந்தர்

தனிப்பிரதி : 200ரூபா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதவன் இதயத்திலிருந்து........

இலக்கியம் என்றால் என்னவென்ற புரிதலும் உசாத்துணையும் இல்லாத புள்ளியில் இருந்து ஏதோ ஒரு உந்துதலால் 2021 இன் கடைசிப் பகுதியில் கதைகள் எழுத ஆரம்பித்தேன். இந்த இரண்டு வருடங்களில் பல்வேறு இதழ்களில் வெளியான பத்துக் கதைகளை தொகுத்து சிறுகதை மஞ்சரிக்கு அனுப்பியிருந்தேன். சிறுகதை மஞ்சரி 40ல் எனது கதைகள் மட்டும் உள்வாங்கிய தொகுப்பாக வெளிவருகிறது என்று மஞ்சரியின் ஆசிரியர் அறிவித்தது மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. இது எனது முதல் தொகுப்பு. இந்த வாய்ப்பை எனக்கு நல்கிய மஞ்சரிக்கும் அதன் ஆசிரியர் நற்குணதயாளன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

அனுபவங்கள், நிகழ்வுகளின் சாரம்தான் கதைகளின் ஊடுபொருள். என்னைச் சுற்றி நிகழ்ந்தவை, நான் வாழ்ந்த நிலங்களில் கிடைத்த அனுபவங்கள் மற்றும் அவதானிப்புகளே இந்தப் புனைவுகளை உயிர்ப்புடன் வைத்திருப்பதாக நம்புகிறேன். போரின் வடுக்கள், மாயவாதம், தனிமனித உளச்சிக்கல் என்ற கருது கோள்களை உள்வாங்கும் முயற்சியே. எனக்கு பரிச்சயமான இலங்கை, கட்டார், சிங்கப்பூர் களங்களை தெரிவு செய்தேன்.

இந்தவேளையில் எனது கதைகளை வெளியிட உதவிய இதழ்களான தமிழ்வெளி, உள்ளம், சிறுகதை மஞ்சரி, கனலி மற்றும் பத்திரிகைகளான தீம்புனல், தமிழ்முரசு, காலைக்கதிர் என்பவற்றிக்கும் நன்றிசொல்ல கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் இதுவரை கதைகளை வாசித்து தமது பின்னூட்டுக்களை நேரடியாகவும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் தந்து என்னை உற்சாகப்படுத்தும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக.

கன்னி முயற்சியாக வெளிவரும் தொகுப்பு என்பதால் பரந்த வாசகப்பரப்பில் கிடைக்கும் நேர் எதிர் கருத்துக்கள் எனது எழுத்துப் பணியை இன்னும் மெருகேற்றும் என்று தீர்க்கமாக நம்புகிறேன்.

நன்றி

ஆதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டு மணித்தியாலங்கள்

அளவுக்கு மீறிய அமைதி அந்த குளிரூட்டப்பட்ட அறையை விழுங்கி இருந்தது. நான்கு பேரின் முகங்களும் எந்த சலனமும் இல்லாமல் ஆளுக்கொரு திசையில் மற்றவர்களைப் பார்ப்பதை தவிர்த்திருந்தன. அறையில் கண்காணிப்பு கேமரா மெல்லிய சிவப்பு லைட்டை விட்டு விட்டு மின் னியது. அதனூடாக எங்கோ இருந்து இவர்களை அவதானித்து கொண்டிருக்கிறார்கள். அறைக்கு வெளியில் காவல்துறை அதிகாரி ஒருவர் நிற்கிறார். இடுப்பு பட்டியில் தொங்கும் கருமைநிற கைத்துப்பாக்கி அதனுடன் இன்னும் சில தற்காப்பு ஆயுதங்கள் என்று அவரை எடுப்பாக காட்டியது.

அறையின் உள்ளே இருப்பவர்கள் சாதாரணமாக பேசினாலே அவருக்கு கேட்கும். ஆனால் உள்ளிருப்பவர்களின் வலுவிழந்த பேச்சொலி வெளியே கேட்கவில்லை. அங்கும் இங்குமாக கூடத்தில் நடந்து போகும் சக அதிகாரிகளுக்கு புன்ன கையை மட்டும் உதிர்த்துக் கொண்டி ருந்தார். கட்டடத்தின் ஓரம் சிறிய மரங்களில் இருந்து குருவிகளின் கீச்சொலிகள் அடிக்கடி கேட்பது இந்த அமைதியை தொந்தரவு செய்வதாக உணர்கிறார்.

நால்வரின் முகங்களிலும் பலநாட்கள் அழுது கழித்த சோர்வு. இனி அழுது எதுவும் ஆகுவதற்கு இடமில்லை என்ற மெல்லிய தெளிவும் கையறு நிலையும் அவர்கள் மனங்களில் பதிந்திருந்தது அப்பட்டமாக தெரிந்தது. ஆனால் அவனின் முகத்தில் சற்று அதிகமாகவே தெளிவு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சிறையில் இருந்த கடந்த நான்கு ஆண்டுகளில் சாந்தன் ஒரு சுற்று பெருத்து விட்டான். வேலை என்று பெரிதாக இல்லை. ஒரு பூந்தோட்டம் பத்தடி அகலம் நாற்பது அடி நீளத்தில் இருந்தது. அதற்கு அருகில் சமாந்தரமாக அகலம் சற்று கூடுதலாக ஒரு காய்கறித்தோட்டம். காலை சாப்பாடு முடிந்து சிறிய மண்வெட்டியோடு தோட்டத்தில் இறங்கினால் மதியம் சாப்பாட்டுக்கு அழைக்கும் மட்டும் தான் வேலை. யாரும் மேற்பார்வையாளர்கள் என்று கழுத்தறுக்க மாட்டார்கள். வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்ட சுதந்திரம். கட்டுப்பாடான சுதந்திரம். இப்படி ஏதோ ஒன்று அவனுக்கு இருந்தது. ஒருவேளை அவன் மீது கரிசனை வந்திருக்கலாம். அவன் கரிசனையை எதிர்பார்க்காமல் தினம் தினம் காலையில் உழைத்தான். ஆனால் அந்த உழைப்பு உடல் பெருக்கத்தை தடுக்கவில்லை. அவனை அறியாமல் உடல் வளர்ந்ததுதான் மிச்சம். மற்ற நேரங்களில் ஓவியம் வரைவதும் நூல்கள் வாசிப்பதுமாக நேரம் கழிந்தது. முன்பெல்லாம் இந்த பழக்கங்கள் கொஞ்சம் கூட அவனுக்கு இல்லை. சின்னனில் படிப்பும் ஏறவில்லை. ஏதோ வாசிக்க புரிந்து கொள்ள தெரியும் என்பதோடு சரி. வழக்கு நடந்து கொண்டிருந்த சமயம் நீதிமன்றுக்கு அழைத்து வரப்படும் நாட்களில் மட்டும் அவனுக்கு வெளியுலகை பார்க்கும் சந்தர்ப்பம் அமைந்தது.

மலேசியாவில் சாதாரண ஷாப்பிங் மாலில் காவலாளி வேலையும் சாதாரண வாழ்க்கைக்கு ஏற்ற வருமானம் கிடைத்தது. இருபத்தியிரண்டு வயதில் இருந்து சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம். இன்னும் அறுபது வயதில் சிறிய வேலைக்கு போகும் தகப்பன் மூர்த்தி அவரின் சம்பாத்தியத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட வீடு. குடும்பத்தில் வறுமை என்று இல்லை. மனிதர்கள் தானே. அதனால் வரும் பேராசை இருப்பதற்கு மேல் ஆசைப்படும் சாதாரண மனம் உள்ளவர்கள். கடனில் கார், TV என்று வாங்கிப் போட்டிருக்கும் நடுத்தர வர்க்கம்.

அடிக்கடி மாறும் காலநிலைபோல சந்தர்ப்பமும் சூழலும் அவன் கட்டுப்பாட்டில் இல்லாமல் மாறத்தொடங்கியதை சட்டை செய்யாமலே இருந்தான்.

சாந்தனுக்கு காவலாளி தொழிலில் எதிர்பார்க்காத முன்பின் தெரியாத பலருடன் பழக்கம் ஏற்பட்டது. அதிலும் ஒருவன் சீனர் மற்றவன் தமிழர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவருக்கும் ஒத்த வயது என்பதால் பரஸ்பரம் இளவயது பேச்சுக்கள் நாளாந்தம் வேலை ஓய்வு நேரத்திலும் மாலையில் வேலை முடிந்து வீடு போகும் போதும் இருக்கும். இந்தப் பழக்கம் அவனுக்கு மேலும் பலரை அறிமுகப்படுத்தியது. ஜெகனை ஒரு கிளப்பில் மற்ற இருவருடனும் போன நேரம் சந்தித்தான். ஜெகன் நல்ல நெடுவல் சிவலை. முடி வளர்த்து பின்னால் சேர்த்து கட்டியிருந்தான். கைகளில் பச்சை குத்தி கையில்லாத T சேர்ட் போட்டு காதுகளில் கடுக்கன்கள் கழுத்தில் சின்னிவிரல் மொத்த வெள்ளி சங்கிலி என்று நவநாகரீக இளைஞனாக அறிமுகமானான். சாந்தனும் தமிழ் பேசும் கலகலப்பான ஆள் நல்லா பேசிறான் என்பதால் ஜெகனுடன் பழக்கம் நீண்டது. ஜெகன் அந்த பகுதியில் இருந்த பெரிய கிளப்புகளில் மெம்பராக இருந்தான். அவனுடன் போகும் போது சாந்தனுக்கும் நல்ல கவனிப்பு கிடைத்தது. கொஞ்சம் கொஞ்சமாக தானும் குடித்து பழகியது ஒரு கட்டத்தில் பெண்கள் சகவாசமும் வந்தது. சாந்தனுக்கு பல பெண்களை அறிமுகப்படுத்தி வைத்தான் ஜெகன். அது மட்டும் இல்லாமல் சாமான்கள் டெலிவரி செய்யும் நிறுவனம் ஒன்றிலும் நல்ல சம்பளத்தில் வேலை கிடைக்க செய்தான். மலேசியாவில் இருந்து வாரம் ஒரு தடவை சிங்கப்பூருக்கு போகும் லாரி மரக்கறி வகைகளை ஏற்றி செல்லும். சில சமயங்களில் ராதிகாவும் அந்த லாரியில் வருவாள். அவள் பேசும் போது முகம் முழுக்க சிரிப்பு இருக்கும். சாதாரண அழகுதான் என்றாலும் கவரக்கூடிய முகம். சாந்தனுக்கு தொடக்கத்தில் ஒரு சந்தேகம் இருந்தது. அவள் ஜெகனின் காதலியாக இருக்கலாம் என்று. ஏனெனில் இரண்டு மூன்று தடவைகள்தான் கிளப்புக்கு வந்திருப்பாள். ஆனால் ஒதுக்காக இருந்த பிரத்யேக இருக்கையில் ஜெகனுடன் இரகசியம் பேசுவதிலே அதிக நேரம் கழிப்பாள். சாந்தனையும் ஜெகனின் மற்ற நண்பர்களையும் பார்த்து புன்முறுவலுடன் கடப்பது ஒன்றுதான் வேறு பேச்சு இல்லை. ராதிகாவின் தனிமைப்படுத்தல் சாந்தன் மாதிரி கொஞ்சம் இறுக்கமான தமிழர் கலாச்சாரம் தெரிந்த நண்பர்களுக்கும் இந்த சந்தேகம் வந்ததில் ஆச்சரியம் இல்லைதான். தனது காதலி மற்றவர்களுடன் அதிகம் நெருங்குவதை விரும்பாத கடைசி தலைமுறையாக கூட இருக்கலாம். கட்டுப்பாடுகளை உடைக்கும் மேலைத்தேய கலாச்சாரம் இன்னும் வீரியமாக ஊடறுக்காத சமூகப் பின்புலம் சாந்தனுக்கு அமைந்தது. அப்பா மூர்த்தி அம்மா பாக்கியம் தங்கை சுகந்தி என்று அவனுடன் சேர்ந்து நான்கு பேர் கொண்ட குடும்பம். வருமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைக்கு செலவு செய்ய கூடிய வகையில் இருந்தாலும் பெரிய செலவுகளுக்கு வங்கி கடனை நாடவேண்டும்.

வாரம் ஒரு தடவை போகும் சிங்கப்பூர் பயணத்தில் ராதிகாவுடன் பேசும் நீண்ட பொழுதுகள் சாந்தனுக்கு அமைந்தது. தானும் சாந்தனை போல ஜெகனால் அதே நிறுவனத்தில் வேலை பெற்றதையும் சொன்னவள் என்ன வேலை என்ற விபரத்தை நீண்ட நாட்கள் சொல்லாமல் தவிர்த்தாள்.

"உங்களுக்கு எவ்வளவு சம்பளம் ஒரு ரிப்புக்கு?" முதல் தடவை சாந்தனின் சம்பளம் பற்றி விசாரித்தாள்.

"ஆண்களிடம் சம்பளத்தையும் பெண்களிடம் வாயசையும் கேட்கக்கூடாது" என்று பெரிய ஜோக் சொன்னவன் மாதிரி சிரித்தான்.

"அதுக்கு இல்லை. நீங்கள் பாவிக்கும் வாட்ச், போன் எல்லாம் பழைய மாடல் வசதி குறைவாக இருக்கும் போல?" என்றாள் மெல்லிய சிரிப்புடன். அவள் கைகளில் புது வரவு ஆப்பிள் ஐபோன் இருந்தது. மணிக்கட்டில் கருப்பு நிற ஐ வாட்ச்சும் பளபளத்தது.

சாந்தனும் "மாதம் ஆயிரம் ரிங்கிட் வரும் மட்டு மட்டுதான் செலவுக்கு" என்றான் சலிப்புடன்.

"நான் ஒரு தடவை மாதம் வந்து போக எனக்கு பத்தாயிரம் ரிங்கிட் சம்பளம் தெரியுமா?"

இடுப்பில் மறைத்து வைத்திருந்த பொட்டலம் ஒன்றை T சேர்ட்டை விலத்தி காட்டினாள்.

சாந்தனுக்கு விளங்கிவிட்டது. "இதெல்லாம் சட்டவிரோதம் நீங்கள் தப்பான தொழில் செய்வது போல தெரிகிறது" புரிந்திருந்தாலும் அதைப்பற்றி விலாவாரியாக அவளுடன் பேச விரும்பாமலும் பதட்டத்தை வெளிக் காட்டாமல் மீண்டும் மெலிதாக சிரித்தான்.

"எந்த தொழிலில் ஆபத்தில்லை? நான் நல்ல வசதியா இருக்கிறேன் உங்களுக்கு விரும்பினால் ஜெகனிடம் பேசி இணைத்துக்கொள்ள வைக்கிறேன். என்னைமாதிரி பலர் இந்த தொழிலில் இருக்கிறார்கள் எல்லாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுவதில்லை தானே?" என்று சற்று அடங்கிய தொனியில் சாந்தனின் மண்டையை கழுவினாள்.

ஒரு கட்டத்தில் அவனும் பரிச்சாத்தமா அந்த வேலையை செய்ய முற்பட்டான். சந்தர்ப்பத்தை பயன்படுத்து என்று உள்மனம் உந்தித்தள்ளியது. பிறகு கைநிறைய பணம் அவனை தொடர்ந்து தப்பு செய்ய தூண்டியது. அதிஷ்டம் எப்போதும் நிரந்தரமாக இருப்பதில்லை என்பதை ஒருநாள் உணர்ந்து கொண்டான்.

என்ன பேசுவது என்று தெரியாமல் மற்ற மூவரும் இருந்தார்கள். அவன் மட்டும் ஏதேதோ பேச்சுக்கொடுத்து மூவரின் அமைதியை தொந்தரவு செய்துகொண்டிருந்தான். இந்த இரண்டு மணித்தியாலங்கள் உறவினருடன் பேச அனுமதி அளிக்கப்பட்டது. கருநீலத்தில் புது டெனிம் கை இறுக்கமான கருப்பு வெள்ளை குறுக்கு கோடுகளுடன் புது T சேர்ட் தந்தையார் வாங்கி வந்திருந்தார். வேலைக்கு போகத்தொடங்கிய பிறகு முதன் முதல் அப்பா வாங்கித்தந்த உடுப்புகள் என்று அவன் நினைவில் பொறி தட்டியது. அளவு சரியாகத்தான் இருந்தது. சாந்தன் அதை அணிந்து கொள்ள நாலைந்து படங்களை தங்கை போனில் எடுத்தாள். தாய் தகப்பனுடன் சேர்ந்தும் ஒருபடம். தங்கையுடன் ஒருபடம். படம் எடுக்கும் போதும் யாரும் யாரையும் சிரிக்க சொல்லவில்லை. ஆனால் அவன் சிரித்தான். வலுக்கட்டாயமாக வரவழைத்த சிரிப்பு என்றாலும் சிரித்தான். தாயார் வீட்டில் இருந்து சமைத்து எடுத்து வந்த கோழி சாப்பாட்டை பரிமாறினார். வழமை போல சுவையாக இருந்த சாப்பாடு. அவன் அதை இரசித்து உண்டான். இருக்கும் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்ற தவிப்பு அவனில் எஞ்சியிருந்தது. அவனை பார்க்கும் போது மற்ற மூவரும் உடைந்து கொண்டிருந்தனர். அவர்களின் கைகள் நடுக்கத்திலும் முக வாட்டத்திலும் கலங்கிய கண்களிலும் அது தெரிந்தது.

அவனோ இயன்றவரை அவர்களை தனது செயலால் தேற்ற முயல்கிறான். அந்த இரண்டு மணித்தியாலம் முடியும் வரை அவன் அழவில்லை. அழுதும் பயனில்லை என்பது நால்வருக்கும் தெரியும். பிரிவு துயர் மூவருக்கும் ஏனெனில் அவர்கள் இன்னும் வாழப்போகிறார்கள். துயரை சுமந்துகொண்டு வாழ்வார்கள். மகனின் வாழ்நாள் நினைவுகளில், முற்றுப்பெறாத நினைவுகளில் தாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையும் அண்ணனை நினைத்து தங்கையும் இருப்பார்கள். குளிரூட்டப்பட்ட அறையிலும் முத்துக்களாக வியர்வை பூத்திருந்த முகங்கள்.

"அம்மா இதுவரைக்கும் உங்களின் பாங்கில் போட்டிருக்கும் பணம் எவ்வளவு வெள்ளி வந்திருக்கும்?" சிங்கப்பூருக்கு மரக்கறி ஏற்றியிறக்கும் தொழிலுக்கு பிறகு மேலதிகமான காசை தாய் தந்தைக்கு கூட்டுக்கணக்கில் வைப்பிலிட்டிருந்தான்.

"அது இருந்துதான் என்ன செய்யுறது?" வேண்டா வெறுப்பான தாயின் வார்த்தைகள்.

"இல்லை அம்மா சில தெரிந்த நண்பர்கள் இருக்கிறான்கள் தேவைப்பட்டால் உதவி செய்வாங்க"

"வேண்டாம்டா உன்ர நண்பர்களின் சகவாசம். இப்படியொரு இக்கட்டான நிலைக்கு கொண்டு வந்திவிடுவாங்கள் எண்டு நான் கனவிலும் நினக்கேல்ல. நாங்கள் எங்களை பார்த்துக்கொள்ளுறம்"

"இல்லை அம்மா சுகந்தியும் தொடர்ந்து படிக்கவேணும் அப்பாக்கும் ஏலாது அதுதான்..." என்று இழுத்தான்.

தாய் ஏதோ சொல்ல முயல தந்தை அவரை தடுத்தார். "அவனுக்கு எது விருப்பமோ அதை நாங்கள் செய்வம். தம்பி நீ ஒண்டும் யோசிக்காத" அதுவரை தன்னுடன் இயல்பாகவோ சினேகமாகவோ பேசாத அவரின் பரிவான வார்த்தைகள் அவனை ஏதோ செய்தது. அவரும் எதிர்காலம் பற்றிய பேச்சுக்களை தவிர்க்கவே விரும்பினார்.

சட்டென்று திரும்பி "சுகந்தி படிப்பு எப்படி போகுது?" இறுக்கமாக அவனையே பார்த்துக்கொண்டிருந்தவளை கேட்டான். இதுதான் முதல் தடவையாக சிங்கப்பூர் வந்திருக்கிறாள். வழக்கு நடக்கும் சமயத்தில் தாயும் தந்தையும் மட்டுமே வந்து போனார்கள்.

"படிக்கிறன்" சோபை இழந்த ஒற்றை வார்த்தையில் பதிலுறுத்தாள்.

"சிங்கப்பூர் எப்படியிருக்கு?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பதில் அவளிடம் இல்லை. எதுக்கெடுத்தாலும் அவனுடன் சண்டைக்கு வருபவள். கலகலப்பானவளுக்கு இந்த அச்சம் நிறைந்த சூழல் எதிர்பாராதவொன்று.

"அண்ணா இதுவரைக்கும் உன்னோட ஒழுங்கா பேசக்கூட இல்லையே" அவனும் ஆமோதிப்பது போல தலையை அசைத்தான்.

"இன்னும் அரை மணித்தியாலம் இருக்கு தாராளமாக பேசு. நான் போனாப் பிறகு கவலைப்பட வேண்டாம்" என்றவனை தந்தை பின்னால் வந்து தலையை வாஞ்சையாக தடவினார்.

மீண்டும் அமைதி குடிகொண்ட அறை குளிரூட்டியின் சத்தத்தால் மட்டும் நிரவியிருந்தது. மௌனமாகவே வார்த்தைகள் பரிமாறப் பட்டுக்கொண்டிருந்தன.

அவனுக்கு இந்த மணித்தியாலங்கள் மட்டுமே எஞ்சியிருக்கிறது. குடும்பத்தினரை சந்தித்து பேச இரண்டு மணித்தியாலங்கள் வழங்கப்பட்டிருந்தது. தந்தையும் தாயும் இறுக கட்டியணைத்த கடைசி நொடி அவர்களின் இதயத்துடிப்பை உணர்ந்தான். கதவு திறக்கப்பட வெளியே இருந்து சூடான காற்று உள்ளே வந்து குளிரூட்டிய அறையை விழுங்க தொடங்கியது. தங்கை திரும்பி அவனின் கையை நடுக்கத்துடன் பற்றினாள். வார்த்தைகள் இல்லாத அனுதாபம் மட்டுமே பரிமாறப்பட்டன. உள்ளே வந்த காவல் அதிகாரி அவனின் கைகளின் விலங்கை மாட்டினார். இன்னொரு காவல் அதிகாரி சாந்தனின் உடைமைகள் சிலவற்றை பிளாத்திக்கு பையில் வைத்துக் கொடுத்தார். "இதில் உங்கள் மகனின் ஆயிரம் சிங்கப்பூர் வெள்ளி மட்டில் இருக்கிறது" என்று பேர்சை தனியாக கொடுத்தார். மூவரையும் அழைத்துக்கொண்டு வெளியேறினார்.

"அரை மணித்தியாலத்தில் பின் கதவு வழியாக பெட்டியில் வைத்து தருவோம். நீங்கள் அந்தப்பக்கம் வந்து காத்திருங்கள்" என்று சொன்னது சாந்தனின் காதில் பட்டும் படாமல் விழுந்தது தான் தாமதம் அதுவரை அடக்கி வைத்திருந்த ஒரு சொட்டு கண்ணீர் கன்னத்தின் ஓரம் நழுவியது.

**தமிழ் முரசு, சிங்கப்பூர், 14 வைகாசி 2023**

**(முத்தமிழ் விழா 2023 இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளியின் கதை

ஐந்து இலைகள் தள்ளிய இரண்டங்குல உயர கள்ளி. கடைசி இலைகள் இரண்டும் அவளின் பார்வையிலே பிரசவித்தது. எல்லா பிரசவங்களும் மகிழ்வான தருணங்களே எனக்கு நடந்தது போல.

மெல்லிய புகை மூட்டம் என்னைச் சுற்றி படர்ந்திருக்கும். அதிலே ரோசாவின் நறுமணம் கலந்து கரைந்து யாரையும் இழுக்கும் சுகந்தம். அவளைப் போலவே. நீராவியை உமிழும் குடுவை அவளின் முகம் பார்க்க மடிக்கணினிக்கு பக்கத்தில் இருந்து கசிந்துருகியது. பாய்ந்து வரும் நீராவி அழகிய முகத்தை அடையாமலே ஆவியாகிறது. அந்த ஏக்கம் எனக்கு இருந்தாலும் விரல்களின் வருடல் எப்போதாவது கிடைப்பது கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறது.

ஆவியின் போராட்டத்தை அமைதியாக நானும் ரசிக்கிறேன். மனிதன் ஆசைப்பட்டது கிடைக்காமல் இறந்து ஆவியாவதும் இப்படித்தான் போலும்.



ஆம் அவளுக்கு முன்னால்தான் எனது இருப்பு.

எனக்கு அருகில் அவளின் குடும்ப படம். அவர்களின் முகங்களில் சிரிப்புடன் சிறிய அளவில் பிரேம் போட்டு சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. நடுவில் ஒரு வயசான அம்மா. முகத்தில் சில கருப்பான மறுக்கள். அவை வெண்மையும் மஞ்சளும் கலந்த வதனத்தில் தெரிந்தது. சீனருக்கே உரிய தட்டையான மூக்குடன் இருந்தவரின் சாயல் அவளைப்பிரதி எடுத்தது போல இருந்தது. அவரின் இரண்டுபக்கமும் வசீகரமான ஆண்கள் நின்றிருக்க முன்னாள் ஒய்யாரமாக அவள் அமர்ந்திருந்தது எனக்கு யாரோ ஒரு சீனத்து இளவரசியை நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியது.

மேசை இடைவெளிகளை அலுவலக தாள்களும் கோப்புகளும் சொந்தம் கொண்டாடின. அந்த குளிரூட்டப்பட்ட அறையிலும் இந்த புகையின் ஈரலிப்பு அவளின் அழகிய வதனம் முழுதும் படர்ந்திருக்கும்.

எனக்கும் இன்னும் அந்தநாள் ஞாபகம் இருக்கிறது.

அது ஒரு சனிக்கிழமை என்று நினைக்கிறேன். இரண்டரை அங்குல விட்டமும் இரண்டங்குல உயரமும் உள்ள சாடியில் மூன்று இலைகள் அவிழ்ந்த நிலையில் இருந்தேன்.

கடும் பச்சை நிற இலைகள் ஒரே தண்டில் வெளிவந்திருந்தன. மென்பச்சை நிற தண்டின் வெளியோரம் மெல்லிய சாம்பல் பூசினமாதிரி ஒரு படை இருந்தது. இலைகளின் ஓரம் சுற்றிவர வெந்நிற உரோமம் அழகுக்கு இன்னோர் பரிணாமம் கொடுத்தது. அருகில் இருந்து பார்த்தால் இலையின் நிழல் போல இருந்ததே அதற்கு காரணம்.

எனது அருகில் ஒத்த இனத்திலும் நிறத்திலும் பலர் என்னைப்போலவே சாடிகளில் இருக்க மேலும் கீழுமான தட்டுகளிலும் வரிசையாக வெவ்வேறு நிறங்களில் வகைகளில் பல சாடிகள் குழுக்களாக பிரித்து அடுக்கியிருந்தார்கள். இன நிற முரண்பாடுகள் வாங்குபவர்களை சிக்கல் படுத்த கூடாது என்ற நல்லெண்ணம் போலும்.

குளிரூட்டப்பட்ட காட்சியறை விடுமுறை நாள் என்பதால் பலர் தெரிந்து வாங்க வரிசையில் நின்றார்கள். அவர்களில் அதிகமானோர் பெண்களே. பதின்மவயது அல்லது வயதான பெண்களை விட நடுத்தர வயதானவர்களே அதிகம். உடையலங்காரம், முகப்பூச்சுக்கள், குதியுயர்ந்த காலணிகள், பலர் தூ க்கலாகவும் சிலர் மெலிதான உதட்டுச்சாயங்களுடனும் இருந்தவர்களை பார்த்தால் அநேகமாக அலுவலகங்களில் பணிபுரிபவர்களாகவே இருக்க வேண்டும்.

பலநறுமண வாசனைகள் அந்த இடத்தை நிறைத்திருந்தது. நான் அந்தமயக்கத்தில் இருக்கும் போது அழகிய விரலின் தொடுகையை உணர்ந்தேன். புதுமையாக இருந்தது. பார்வையாளர்களின் தொடுகையை எனது எஜமானர்கள் தடைசெய்திருந்தார்கள். ஆனால் மீண்டும் மீண்டும் அந்த தொடுகை அவளிடம் இருந்து என்னை அழைத்தது. நான் இப்போதுதான் அவளின் முகத்தை அவதானித்தேன். பூரண சந்திரனின் ஒளி என்று சொன் னால் அது மிகையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு தெரியவில்லை. நல்ல உயரமான எடுப்பான தோற்றம். தோள் மட்டத்துக்கு கீழேயே நறுக்கிவிடப்பட்ட கேசம் நேர்த்தியாக அழகாக இருந்தது.

அவளிடம் இருந்து வந்த ரோசா வாசனை எனக்கு நாசியிருந்தால் நிச்சயமாக புரையே ஏறியிருக்கும் ஏனெனில் அவ்வளவு அருகில் இருந்து முகர்ந்து பார்த்தாள்.

என்னை கைப்பற்றிய மகிழ்ச்சி அவளுக்கு இருந்திருக்கவேண்டும். பத்திரமாக வாங்கி தனது அறையில் வைத்திருந்தவள் திங்கள் காலையிலேயே அலுவலகத்திற்கு கொண்டுவந்தாள்.

அப்போதுதான் நான் அதை அவதானித்தேன். அது ஏற்கனவே மடிக்கணனிக்கு பக்கத்தில் என்னைபோல ஆனால் பல இலைகளுடன் இருந்தது. கீழிருந்து நான்கு இலைகள் பழுப்பேறி விழும் தருவாயில் சற்று வாடி நின்றது. அதன் முதுமையின் மேல் அனுதாபத்தை விட இளமையின் உயிர்ப்பு எனக்கு கர்வத்தை தந்திருந்தது.

நான் வந்து சிலநாட்களிலே அதை தூக்கி எறிந்துவிட்டாள். அப்போது அது என்னை பார்த்த பார்வை ஏதோ செய்தது ஆனால் புரியவில்லை.

இந்த நினைவுகளை மீட்டுக்கொண்டிருக்கும் போதே "டொக் டொக்" என்று கதவு தட்டும் சத்தம் கேட்டது.

கதவை தட்டி எட்டிப்பாத்தது சுமன்தான். அவளின் கீழ் பணிபுரிவதால் அதிகம் அவளை சந்திக்க வருவான்.

"உள்ளே வரலாமா?" என்று அவளின் அனுமதியை கேட்டான்.

"ஹாய் சுமன் வாங்க"

உள்ளே வந்தவன் கையில் இருந்த சாக்லேட் பெட்டியை நீட்டினான்.

புருவத்தை உயர்த்தியவள் சில நொடியில் முகம் பிரகாசமாக,

"வாழ்த்துக்கள். மகள்தானே நீங்கள் விடுப்பு எடுக்காமல் இருந்ததால் நானும் மறந்து விட்டேன்."

"இந்த கிழமை நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் நேற்று இரவு பதினோரு மணிக்கு வலி எடுத்துவிட்டது."

"குழந்தையும் தாயும் சுகமா?"

"ஆரோக்கியமாக இருக்கிறார்கள்"

"நல்லது. நீங்கள் எத்தனை நாள் விடுப்பு எடுக்கிறீங்கள்? பக்கத்தில் இருந்து பார்த்துக் கொள்ள வேண்டியிருக்குமே?" என்றாள் வாஞ்சையோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆம் ஒரு கிழமை எடுத்திருக்கிறேன்”

“போதுமா? சாதாரணமா இரண்டு கிழமை விடுப்பு எடுப்பார்கள்”

“எனது மாமியும் மாமாவும் உதவிக்கு ஊரில் இருந்து வந்திருக்கிறார்கள். பிரச்சினை இல்லை” மனைவியின் அம்மாவும் அப்பாவும் வந்ததை அவளுக்கு சொன்னது தேவையில்லாதது என்று உள்மனம் சொன்னாலும் அவளின் குணம் தெரியும் என்பதால் அதை பற்றிய கவலை அவனை பெரிதாக பாதிக்கவில்லை.

சுமன் வெளியே போனதும் என்னை நோக்கி திரும்பினாள். சுமன் சொன்ன செய்தி அவளுக்குள் அமைதியாக அடங்கியிருந்த உணர்வுகளை தட்டி எழுப்பி இருக்கவேண்டும் வழமை போல. மென்மையான சுட்டு விரலால் எனது இலைகளை வருடியது பச்சைக் குழந்தைக்கு தாயின் தொடுகையை ஒத்திருந்தது. அதில் ஏக்கமும் கண்களில் தாபமுமே எஞ்சியதாக உணர்கிறேன்.

செரீனா சீன வம்சாவளி மலேசிய பெண். வயது நாற்பத்தி இரண்டை வரும் ஐப்பசியில் கடந்து விடும். சிங்கப்பூருக்கு வந்து பத்து வருடம் ஆகிறது. தமையன்மார் இருவரும் திருமணம் செய்து குடும்பத்துடன் மலேசியாவில் வாழ்கிறார்கள். அவர்களின் திருமணத்தின் பின் தாயை தன்னுடன் சேர்த்து வைத்திருக்கிறாள்.

இருபத்து நான்கு வயதில் பெரும் எதிர் பார்ப்பில் மலர்ந்த காதல் அடுத்த நான்கு வருடங்கள் வளர்ந்து தேய்ந்து கைவிட்டு போனது. அவனிடம் தன்னை முழுவதா ஒப்புக்கொடுத்து இருந்தவள். இருந்தும் செரினாவின் கல்வித்தரம், பதவி, சம்பளம் என்று எல்லா வகையிலும் அவனை விஞ்சியது மட்டுமில்லை வர வர கூடியது.

கருத்து முரண்பாடுகள் உச்சம் தொட இருவரும் மனமொத்து பிரிந்தார்கள். அந்த காதல் மட்டும் அவளின் ஆழ்மனத்தில் இருந்து அறுத்துக்கொண்டே இருக்கிறது என்று நினைக்கிறேன். முதல் காதல் முடியாது போலும். மெல்லிய சேலை முள்ளில் விழுந்து கிழிந்தால் மறுபடி ஒட்ட முடியாதது போல இதயமும் தாறுமாறாக கிழிந்துவிட்டது அதை அவளால் பொருத்த முடியவில்லை.

சிந்தனைகளை வேறு திசைகளில் நகர்த்தியவள் புதியனவற்றை தன்னுள் இழுக்கும் முயற்சியில் இருப்பது தெரிகிறது. காதலை தவிர. உணர்வுக்கும் பொருளுக்கும் அதுதான் வேறுபாடு.

இயல்பாக அணுக்கமாக பழகும் அவளால் அதற்கு பிறகு புதிதாக இன்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலை மட்டும் ஏற்க முடியாமல் தவித்தாள். ஏதோ ஒன்று அவளை தடுக்கிறது.

காதல் முறிவுக்கு பிறகு சில ஆண் நண்பர்கள் அவளிடம் தெரிவித்த காதலை பக்குவமாக நாகரீகமாக மறுதலித்தது அவர்களை இன்னும் அவள் மேல் அன்பை அதிகப்படுத்தியதே ஒழிய குறைக்கவில்லை.

தாய் பலதடவை திருமணம் பேச்சை எடுத்தும் செரீனா தட்டிக்கழித்தே வந்தாள்.

தற்காலத்தில் பெரும்பாலும் சீனர்களிடம் பேச்சு திருமணம் இல்லாமல் போய்விட்டது. அனைத்தும் காதலை சுற்றியே நடக்கும். திருமணம் என்றால் காதல் திருமணம் மட்டுமே என்று பொதுமைப்பட்டுவிட்டது.

சிறிய பிளாஸ்டிக் போத்தலில் இருந்த நீரை சிறிதளவு என்மேலே தெளித்தவளுக்கு கைபேசியில் வந்த குறும் செய்தி கவனத்தை திரும்பியது. ஓரக்கண்ணால் கைபேசியின் தொடுதிரையை பார்த்தாள்.

வளமையான உடல் ஆரோக்கிய பரிசோதனை முடிவுகளை வந்து பெற்றுக் கொள்ளுமாறு அந்த செய்தி சொன்னது.

ஆறு மாதத்துக்கு ஒருதடவை இரத்தம், சிறுநீர், இரத்த அழுத்தம் என்று தேவையான பரிசோதனைகளை தவறாமல் செய்கிறாள். நாற்பது வயதுக்கு பிறகு அந்த முடிவுகளை பெறப் போகும் போது இனம் தெரியாத பயம் வருவதை அவளால் தவிர்க்க முடியவில்லை. மன அழுத்தமும் ஆரோக்கியமில்லா உணவும் இளமையிலேயே உடலுக்கு சவால் விடத்தொடங்கிவிட்ட காலம் இது. ஊரோட ஒத்த தோட வேண்டியதுதான் வயசான தாயுக்கு அவள்தான் ஆறுதல். தாயும் மகன்களை விட செரீனாவோடு தங்குவதையே விரும்பினாள்.

கூட வேலை பார்ப்பவர்களில் ஜாஸ்மின் இவளுடன் நெருங்கி பழகுவாள். இணையத்தளங்களில் கிடைத்த தகவல்களை வைத்து ஜாஸ்மின் இரண்டு வருடத்துக்கு முதலே தொடர் பரிசோதனைகளை செய்ய தொடக்கிவிட்டாள்.

"தொடக்கத்தில் நானும் இது அவசியமா என்ற சந்தேகத்துடனே இருந்தேன். ஆனால் போக போக எனக்கு தெரிந்தவர்கள் அனேகமாக எல்லோருமே செய்ய தொடக்கி விட்டார்கள் எனக்கும் பயம் பற்றிக்கொண்டது. ஒருநாள் மூச்சு அடைக்கிற மாதிரியும் தலைச்சுற்றும் மாறிமாறி வந்தது. உடனடியாக தொடங்கிவிட்டேன்." என்று தான் எவ்வாறு தொடங்கினதை ஜாஸ்மின் விபரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நெருக்குவாரம் செரீனாவுக்கும் வேறு மார்க்கம் இல்லாமல் செய்துவிட்டது.

செரீனா நிர்வாக அதிகாரியாக கடந்த மூன்று வருடங்களாக இந்த பொருட்களை விநியோகிக்கும் நிறுவனத்தில் வேலை பார்க்கிறாள். முதலில் சாதாரண மேற்பார்வையாளராக பதவிக்கு வந்து படிப்படியாக உயர்ந்து இந்தநிலையை அடைந்ததற்கு ஒரே காரணம்தான். அன்பான அணுகுமுறை. உடன் வேலை பார்ப்போருக்கும் மேலதிகாரிகளுக்கும் அவள் மேல் நல்ல பெயரை சம்பாதித்து கொடுத்தது.

அன்றைய நாள் வேலைகளை துரிதமாக முடித்தாள். கிராப் டாக்ஸியை வருவதற்கு பதிவு செய்ய அது ஐந்து நிமிடங்களில் வரும் என்று காட்டியது. எதுக்கும் நேவிகேட்டரில் வண்டி எந்த இடத்தில் இருகிறது என்றும் உறுதிப்படுத்தினாள். மடிக்கணினியை பையில் போட்டு தோளில் மாட்டிகொண்டு அறையை விட்டு வெளியேறியவள் மின்தூக்கி இருக்கும் லொபிக்கு நடந்தாள். எதிர்ப்பட்டவர்களுக்கு சிறிய புன்னகை உதிக்கவும் மறக்கவில்லை. அந்த தளம் முழுவதையும் அவளின் நிறுவனமே வாடகைக்கு எடுத்திருப்பதால் எதிர்ப்படும் அனேகர் தெரிந்தவர்கள்.

மின்தூக்கிக்கு காத்திருந்த இன்னும் இருவரில் டேவிட் ஒரே பதவி அடுக்கில் இருப்பவன். எனக்கு அவனை தெரியும். செரீனாவின் பின்னால் பைத்தியமா திரிந்தவன். ஒருநாள் இந்த அறையில் ஆசையாக பலவாறு தன் காதலை பவ்வியமாக சொல்லி கண்கலங்கினவன். ஆதரவாக அவனை அணுகி கட்டியணைத்து முத்தமிட்டவள் “காதலை தவிர எதையும் புதிதாக ஏற்றுக்கொள்ள நான் ஆயத்தமாக இருக்கிறேன்” என்றது இன்னும் என் நினைவில் இருக்கிறது.

“ஹாய் செரீனா என்ன இண்டைக்கு வேளையோட கிளம்பியாச்சு?” டேவிட் சாதாரணமாக கேட்டான். அவளை அவன் புரிந்து கொண்டிருப்பான் போலும்.

“மருத்துவ பரிசோதனை இருக்கு அதுதான்” என்றவள் மின்தூக்கியின் இலக்கத்தை பார்த்து தனது கைக்கடிகாரத்தையும் மாறி மாறி பார்த்தாள்.

முப்பத்தைந்து மாடி கட்டடம். இவர்கள் இருக்கும் பதினைந்தாவது மாடிக்கு வர காத்திருக்க வேண்டியதுதான். வேற வழி இல்லை. இந்த நவநாகரீக உலகில் காத்திருப்புகள் எப்போதும் சுகமா இருப்பதில்லை. டாக்ஸி வந்தால் ஓட்டுநர் தொலைபேசியில் அழைப்பார்கள் என்ற நம்பிக்கையில் அவள் நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கவனம் அந்த அறைக்கு திரும்பியது.

மேசையில் ஆப்பிள் கைபேசியின் அடுத்து வரவிருக்கும் புதிய தயாரிப்பின் விபரம் அடங்கிய சிட்டை விரித்தபடி கிடந்தது. இரண்டு வருடத்துக்கு ஒருமுறை புதிய கைத்தொலைபேசி மாற்றும் திட்டம் தொலைத்தொடர்பு நிறுவனத்தால் கிடைப்பதையும் அவள் பயன்படுத்துவதை ஜாஸ்மினுடன் நேற்று பகிர்ந்ததில் புரிந்து கொண்டேன். மேசையில் விரித்து கிடந்த சிட்டையில் புதுவரவு கைபேசி படம் போடப்பட்ட இடம் சிவப்பு கோடுகளால் வட்டமடித்து வைத்திருந்தது என்னை உறுத்தியது.

பக்கத்தில் இருந்த மற்றொரு கள்ளி என்னை பார்த்து சிரிப்பது போல இருந்தது. யாரும் இல்லாத அவளின் அலுவலக அறை புதுமைகளை மட்டும் உள்ளிழுக்க ஆயத்தமாக இருக்கிறது. அவளோ இன்னும் விதிவிலக்குகளுடனே இருக்கிறாள். இருக்கட்டும்.

**தமிழ்வெளி , சித்திரை 2022**

நான் ஆண்களை வெறுப்பதில்லை.வெறுப்பது என்பது எளிதான காரியம். பல ஆண்களும் வேறு துறையில் உழன்று கஷ்டப்படுகிறார்கள். நான் ஆணை வெறுக்கவில்லை. குழந்தைக்கு அப்பா ஆனதும் தன்னை பெரிதாக நினைத்துக் கொள்கிறார்கள். இந்த அகம்பாவத்தைத்தான் நான் வெறுக்கிறேன். பெண் ஆணைக்காட்டிலும் மட்டமானவள் என்ற எண்ணத்தை வெறுக்கிறேன். ஆணுக்கு சில அதிகாரங்கள் கிடைத்திருக்கின்றன. பெண்ணுக்குக் கிடைக்கவில்லை. அவள் வஞ்சிக்கப்பட்டு இருக்கிறாள். ஏனென்றால் அவன் பெண்ணுடைய தலைவன். பலாத்காரத்தைப் பொறுத்துக் கொள்வது எவ்வளவு கடினம். இதைச் சொற்களால் விவரித்துக் கூறமுடியாது. அதன் பிறகு அவள் உயிரோடு இருக்கிறாளே அதுவே பெரிய காரியம். நான் அதைப் போற்றுகிறேன். பெண் இவ்வாறு அலசிப் பார்க்க முடியாமல் திணறினால் நம் சமுதாயத்தில் கோட்பாடுகளே தவறு என்றுதான் சொல்லவேண்டும்.

**- அர்த்தநாரீஸ்வரர் நாவலில் படித்தது. -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கழுகு

மதியம் தாண்டி வெக்கை தணியும் நேரம் கொஞ்சம் மந்தாரக்குணம். இது ஆனித் தூக்கம் வேறு அப்படித்தான் இருக் கும். அருகில் வயல்வெளி இருந்தும் காற்று வர மறுத்தது. வந்தாலும் சுற்றிவர நிற்கும் பனைகள் அடியொற்றி அடர்த்தி யான பற்றை காடு அதை தடுத் தது. காற் றின் ஊட றுப் பே வலுவிழந்து சேடம் இழுக்கும் நிலையில் இன்று இருப்பதை உணர்கிறேன். அவிச்சலான தூக்கம் சொல்லி வைத்த மாதிரி அங் கே நின் றவர் களின் முகங்களில் வேர்வையை தேக்கி வைத்திருந் தது. சிதை எரிய ஆரம்பித்ததும் அதுவரை இருந்த கூட்டம் மெதுவாக கரைந்து ஒடுங்கியது.

சில காகங்கள் சிதறிக்கிடந்த சிவப்பும் வெள்ளையும் நிறத்தில் இருந்த வாய்க்கரிசியை எண்ணி எடுக்கும் முயற்சியில் மும்முரமாக இருந்தன. அவை கரைவது சுவாலை விட்டெரியும் சத்தத்துடன் போட்டி போடுவது போல் இருந்தது. மூச்சு போன உடம்பும் மூசி எரியும் போல ஆனால் அதைவிட இன்னொன்றும் சொல்லுவார்கள் ஊர்வழக்கில் அணையப்போற தீபம் சுடர் விட்டெரியும் என்று. இங்கே அணைந்த தீபமும் சுடர்விட்டு எரிவதுடன் அதன் வாடையும் அப்பகுதி முழுதும் பரவியிருந்தது. உடைந்த தாழிச் சில்லுகள் ஈமக்கடன் முடித்து பெருமூச்சு விடுவது போல அண்ணாந்து கிடந்தன. சிதறிக்கிடந்த சில்லறைகளை புனிதன் ஏற்கனவே எடுத்திருப்பான். அது அவனுக்குரியதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு பக்கத்தில் பெருமூச்சு விட்டபடி அந்தக் குரல், "மனிதரே இப்படி தான் தேவை முடிந்தால் தூக்கி எறிந்துவிடும் கல்நெஞ்சக்காரர்கள் இல்லாட்டில் கவனிக்காமல் இருந்துவிடுவார்கள். தேவைதான் எல்லாத்தையும் முடிவு செய்கிறது போல." என்று சலித்துக் கொண்டது.

"எல்லோரையும் அப்படி சொல்ல முடியாது. அவரை நான் அப்படி நினைக்கவில்லை ஏனென்றால் நாங்கள் கடமைப்பட்டவர்கள். அவருக்கு செய்ய வேண்டிய கடமையை திருப்பி செய்ததோட கணக்கு சரியாகிவிட்டது." எனக்கு குரல் தளதளத்தது. ஆண்டவர் மேல் எனக்கு இருக்கும் அபிமானம் வார்த்தைகளால் செல்லமுடியாது. ஏற்றம் இறக்கம் மகிழ்ச்சி துன்பம் என்று கலவையாக போன வாழ்க்கை. சில வருடங்களாக அருகில் இருந்து பார்த்தனான். ஆண்டவரை தூசிக்க விரும்பவில்லை, மற்றவர்கள் அப்படி செய்வதையும் வெறுக்கிறேன்.

"நாங்கள் கேட்பார் இல்லாமல் கிடப்பதை நினைக்க எனக்கு என்னவோ செய்யுது. இனி கறையானுக்கு இரையாகி மக்கி மண்ணாக வேண்டியதுதான். அவரை எரித்த கணமே எங்களையும் எரித்திருக்கலாம். இப்படி கிடந்து இழுபட வேண்டியதில்லை." அது மீண்டும் தனது வெறுப்பை கொட்டியது. என்னை போல எல்லாரும் இருக்கவேணும், சிந்திக்கவேணும் என்று நினைப்பது எவ்வளவு தவறு? ஐந்து விரலும் ஒரே மாதிரி இல்லைதானே என்ற மனிதர்களின் பழமொழியின் சூட்சுமம் மெதுவாக புலப்படுகிறது.

மூத்தவன் மாறன். அவனுக்கு கொள்ளி வைக்கிற பொசிப்பு இல்லாமல் போனது துரதிஸ்டமே. தலையை தாழப்போட்டபடி முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டே நடந்தான். தந்தை போன சோகத்தையும் தாண்டிய வெறுப்பு யாரையும் சட்டைசெய்ய பிடிமானம் இல்லாமல் நடந்தான். பலநாளுக்கு பிறகு கட்டியிருந்த வேட்டி காலுக்கிடையில் அடிக்கடி தடக்கியது. எட்டுவருசம் சிங்கப்பூரில் வேலை. முந்தாநாள் தகப்பன் கடுமையா இருக்க உடனே கிளம்பி தனியாத்தான் வந்தவன். கொழும்புக்கு வந்திறங்கியதும் ஆண்டவர் போய்விட்ட செய்தியே வரவேற்றது. கடைசியாக ஒருவார்த்தை பேசாமல் போனதுகூட அவனை சிறிதளவே பாதித்திருக்கும். ஆனால் திருமணம் ஆகி மனைவி வயித்தில் ஏழுமாத குழந்தையை சுமப்பது கடமையை செய்ய விடாமல் தடுத்துவிட்டது. நம்பிக்கைகள் கூட கடமையை செய்ய விடுவதில்லை என்று நினைக்கும் போது எனக்கு முரண்நகையாக இருந்தது. பார்த்து பார்த்து வளர்த்த அப்பா அருகில் இருக்கவைத்து நல்லது கெட்டதை சொல்லிக்கொடுத்த மனுஷனுக்கு கடமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாதது அவனை வருத்திக்கொண்டு இருக்கவேணும். நம்பிக்கைகளை மீறமுடியாது கைகள் கட்டப்பட்டதை உணர்கிறான். எனக்கு இருக்கும் திருப்தி கூட அவனுக்கு இல்லையோ என்று நினைக்கத் தோன்றுகிறது. என்னதான் கேட்பாரற்றுக் கிடந்தாலும் நிறைவான நிம்மதியை அடைந்த மகிழ்ச்சி எனக்கு ஆண்டவரின் நினைப்புகளோடு வருகிறது. ஆம் அவரின் ஆசையை நிறைவேற்றிய மகிழ்ச்சி.

சின்னவன் காந்தனுக்கே கொள்ளி வைக்கும் வரம் கிடைத்தது. அவன் ஆண்டவர் போலவே அச்சில் வார்த்தது போல இருப்பான். அதே உயரம் நிமிர்ந்த பார்வையுடன் அவரைவிடவும் திமிர் இன்னும் அதிகமாக இருந்தது. இன்று தகப்பனுக்கு கடமை செய்தது இன்னும் செருக்கை கூட்டியிருக்கலாம். கொள்ளிவைக்க மொட்டை போடவேணும் என்று தாய் தங்கம் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். அதெல்லாம் பழைய சம்பிரதாயங்கள் எனக்கு சரிவராது என்று மொட்டை போடாமலேயே காரியம் பார்த்தான்.

நாளைக்கு காடாத்துக்கு எத்தினை மணிக்கு என்னென்ன பொருட்களுடன் வாறது பற்றி ஊரில் விஷயம் தெரிஞ்ச மயில்வாகனம் ஐயா மாறனுக்கு விளங்கப்படுத்துவது கேட்கிறது. ஆண்டவரும் அபூர்வமாக மயில் வாகனத்தாரிடம் மட்டுமே மரியாதை வைத்திருந்தார். சடங்கு சம்பிரதாயம் செய்யும் முறைகள் அவை நடக்கவேண்டிய காலநேரம் என்ற தகவல்களில் மயில்வாகனத்தாரின் ஆலோசனைகளே ஆண்டவருக்கு பல சந்தர்ப்பங்களில் உதவின என்று கூறலாம். இப்போது மகன்மாருக்கும் அது தொடருகிற மாதிரி இருக்கு. சற்று நேரத்தில் வாயினால் காற்றை கீழ்நோக்கி ஊதி நெஞ்சில் தங்கிய வேர்வையை உலர்த்தியபடியே காந்தனும் அந்த சம்பாஷணையில் இணைந்து கொண்டான். ஒரு முடிவுக்கு வந்திருப்பார்கள் போலும். மகன்மார் இருவரும் வெள்ளை வேட்டியில் வேர்வை ஊறியிருக்க மேல்சட்டை அணியாமல் வெறும் மேலுடன் வாயிலை நோக்கி நடந்தனர். அங்கே படலை தாண்டி வெள்ளைநிற கேம் பிரிச் மகிழுந்து இவர்களுக்கு காத்திருந்தது.

---

இந்த மந்தாரத்துக்கு பின்னேரம் மழை வரும் சாத்தியப்பாடு அதிகம். மழை என்றதும் எனக்கு பழைய ஞாபகம் எங்கோ மறைந்து நின்ற ஊற்று போல பிரவாகம் எடுக்கிறது. அன்றைக்கும் ஒரு மழை நாள் மார்கழி மாதம் என்று நினைக்கிறேன். மூன்று அடி உயரத்தில் நான்கு இலைகள் வெளித்தள்ளி நாங்கள் இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்மையாக இருந்தோம். கரும் பச்சை நிற இலைகள் எமது செழுமையை இன்னும் கூட்டிக்காட்டியது. யாழ்ப்பாணத்தின் புறநகர்ப்பகுதியில் இருக்கும் மானிப்பாய் பட்டினம். மத்தியில் மானிப்பாய் யாழ்ப்பாணம் பிரதான பாதையை ஒட்டி இருந்தது மத்தியசந்தை. சாலையில் இருந்து உள்ளே இறங்கினதும் இடதுபுறம் மரக்கறி சந்தையும் வலதுபுறம் தனியான கொட்டகையில் மீன்சந்தையும் ஆனால் இடைவெளிகள் இல்லாமல் நிரவியிருந்தது. மாரிகாலம் என்பதால் புழுதி அடங்கி சந்தைக்கு போகும் வழியெங்கும் சேறும் சகதியும் மண்டிக்கிடக்க அங்கே சந்தை வாயில் ஓரம் சாத்தி வைக்கப்பட்ட எங்களை ஒத்த பல கமுகுகளுடன் சேர்ந்தே கிடந்தோம். அரையடி உயர கருப்பு நிற நெகிழி பைகளில் செம்பாட்டு மண். நல்ல ஈரலிப்பு. காலையில் சோ என்ற மழை இடியோடு பெய்தது. அதுவும் காரணமாக இருக்கலாம். மதியம் இலேசான தூறல் இருந்தது. அப்போதுதான் அந்த உயரமான கறுவல் மனிதனை கண்டேன். எடுப்பான பார்வையும் திமிரும் எவரையும் கவரும் என்றதை நேரில் பார்த்தேன். ஆண்டவர் என்றுதான் எங்களுக்கு அவர் அறிமுகமானார். அவரின் அரைக்கை மேல் சட்டை இடது பக்க மார்பின் முன்னாள் இருந்த சட்டைப்பை மண்ணிறமாக அழுக்கு படித்து இருந்தது. சட்டைப்பை தையலும் அவிழ்ந்து சற்று பிரிந்திருந்தது. கனமான பணப்பை மட்டுமல்ல ஒரு பீடிக்கட்டும் வலிந்து திணிக்கப்பட்டதால் இப்படியாகியிருப்பதை பிறகே உணர்ந்தேன். அந்த பணப்பை பணத்தைவிட கணக்குகள் எழுதப்பட்ட துண்டுச் சீட்டுகளையே அதிகமாக சுமந்தது. அவரிடம் இருந்த மற்ற இரண்டு சட்டைகளும் சொல்லிவைத்தது போல சட்டைப்பையை அழுக்காக்கியே காட்சி தந்தது எனக்கு முதலில் புரியவில்லை. நாட்செல்லச் செல்ல அதன் காரணம் புலப்பட்டது. வேலைநேரத்திலும் அடிக்கடி பீடியை எடுக்க அழுக்கான கையால் சட்டைப்பைக்குள் விரலை விடுவதே நிரந்தர கறை படிந்ததன் காரணம்.

எங்களை விற்க வைத்திருந்த சுந்தரம் ஆண்டவருக்கு தெரிந்தவர் போலும். ஆண்டவருக்கு முழுப்பெயர் பழனி ஆண்டவன். ஆனால் காலப்போக்கில் சுருங்கி ஆண்டவர் ஆகிவிட்டது. கையில் பீடி பாதி உருகியிருந்தது. அவர் குனிந்து எங்களை தெரியும் போது பீடியின் வாடையுடன் கள்ளும் கலந்து எங்களுக்கு புரையேறுற மாதிரி அருவருப்பாக இருந்தது. அந்த வலிய கரடு முரடான கரங்கள் எங்களை அள்ளி எடுத்து மிதி வண்டியின் பின்னால் கயிற்றால் கட்டும் போது அந்தக்கணத்தில் நான் நினைக்கவில்லை இந்த நிலைக்கும் இந்த இடத்துக்கும் வருவேன் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடுதியாக இரும தொடங்கி காறி துப்பினவரை சுந்தரம் ஏளனமாக பார்த்தான். "என்ன ஆண்டவர் உந்த கசக் குச்சிய தூக்கியெறி உடம்ப நாசமாக்காமல்" அனுதாபத்தை விட ஆனந்தம் அதிகமாக தெரிந்தது அவனின் வார்த்தையில்.

"இருக்கும் மட்டும் மற்றவன் தாலி அறுக்காமல் இருந்தால் போதும். முந்தியோ பிந்தியோ போறத மேல உள்ளவன் பாக்கட்டும். இந்தா உருப்படிக்கு பத்து குறைச்சு நாப்பது படி எண்பது ரூவாய் பிடி" என்ற ஆண்டவர் அவனை சட்டை செய்யாமல் சாதாரணமாக பேரம் பேசி காசை கொடுத்து விட்டு கிளம்பினார். சுந்தரம் அவர் போறதையே பார்த்துக்கொண்டு நின்றான். முகத்தில் பொறாமை இருந்த மாதிரி உணர்வு. அடுத்து வந்த பல சம்பவங்கள்அதனை முடிவே செய்யும் வகையில் அமைந்தது.

நாளடைவில் அவரின் செல்வாக்கும் விலாசமும் புரிந்தது. அதாவது ஆண்டவர் ஊரில் மற்றவர்களால் மதிக்கதக்க மனிதரும்தான் என்பது. வீட்டில் முத்தம் முழுவதையும் நிறைத்திருந்தது கம்மாலை. தச்சுத்தொழில் நுட்பத்தால் வந்த வித்துவச் செருக்கு ஆண்டவரிற்கு அதிகம். அதனாலே பலருக்கு அவர் மேல் மரியாதை இருந்தது மட்டும் இல்லை சிலருக்கு பொறாமை, சிலருக்கு தொழில் போட்டி என்று பலதரப்பட்ட மனிதர்களை அவரை சுற்றி கண்டிருக்கிறேன். நாங்கள் நடப்பட்ட இடம் வீட்டுக்கு ஈசான மூலையை தாண்டி இருந்த கிணற்றடியோரம். எப்பவும் ஈரலிப்புடன் வாய்க்கால் என்னை குளிர்வித்தது. வெடுக்கு தண்ணிபடாமல் இருக்கவேண்டும் என்பதில் அவருக்கு அதிகம் அக்கறை. அது பட்டால் பட்டுவிடும் என்ற ஐதீகத்தை அவரும் நம்பியிருக்க வேண்டும். மனைவி தங்கமும் அந்த விடயத்தில் கரிசனை காட்டினார். தங்கம் நல்ல சிவலையான செந்தழிப்பான குடும்பப்பெண். தலைமுடி வெண்பஞ்சு போல நரைத்து விட்டது. தங்கத்தின் அண்ணனுடன் ஆண்டவர் நல்ல நண்பர் என்பதும் அவர்கள் வீட்டு கம்மாலையில் வேலைசெய்யும் போது மலர்ந்தகாதல் வீட்டைவிட்டு ஓடிவந்ததும் கலியாணம் செய்ததும் எனக்கு பிறகு தெரியவந்தது. நாங்கள் தழைத்து வளரும் இடம் வசதியாக வருவோர் போவோருடனும் வீட்டு வராந்தாவில் குடுப்பத்தினருடன் அளவளாவுவது எனக்கு கேட்டுக்கொண்டே இருக்கும். காலப்போக்கில் ஆண்டவரின் உணர்வுகளை நான் படிக்கத் தொடங்கினேன். மனிதர்களுக்கே உரிய வாழ்க்கைச் சுற்றோட்டம் இன்பமும் துன்பமும் சிரிப்பும் அழுகையும் என்று மாறி மாறி பார்த்தேன்.

புது வாழ்வை அடைந்த அந்த மழை நாள் எனக்கு இன்னும் பல புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களை அறிமுகப்படுத்திவிட்டது.

---------------------------------

இன்றைக்கு இந்த இடத்தில் கேட்பார் அற்று கிடக்கும் நிலைக்கு கொண்டு வரும் என்று கனவிலும் நினைக்கவில்லை. இந்த இடம் மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோவில் எதிரில் நெல் வயல்கள் தாண்டி முன்னூறு மீற்றர் தொலைவில் இருக்கிறது. இதன் பெயர் பிப்பிலி. ஆண்டாண்டு காலமாக மனிதர்களை தீயில் விழுங்கும் வேலையை செவ்வனே செய்கிறது இன்னும் தாகத்துடன். கூரைக்கு போட்ட கப்புகள் நாலும்தான் நீட்டி கொண்டிருக்க தகரங்களை காணவில்லை. அவை களவாடப்பட்டிருக்கலாம் அல்லது வயல் காற்று பெயர்த்து எறிந்திருக்கும். கோவில் கோபுர வாசலில் இருந்து பார்த்தால் பெரும்பாலும் சிதையில் எரியும் சுவாலை பட்டவர்த்தனமாக தெரியும். பிணம் எரியும் வாடை கூட காற்று திசை மாறி அடிக்கும் போது கோவிலில் நிற்பவர்கள் உணரலாம். சுடலை முன்னால் இருந்தாலோ விபூதி பூசினாலோ மனுஷனுக்கு ஞானம் பிறக்கும் எண்டது சும்மா பம்மாத்து. ஆசையோடு தெரியும் விலங்குகள் உதை பெரிதுபடுத்தாது என்ற தெளிவு இப்போ பலருக்கு வந்துவிட்டது.

இன்னும் காகங்கள் வாய்க்கரிசியை தின்று கொண்டேதான் இருந்தன. நிறைய அரிசி போட்டிருக்கவேண்டும் அவருக்கு எவ்வளவு போட்டாலும் தகும்தான் வாழ்ந்து கழிச்ச மனிதரல்லவா?

அப்பதான் லாண்ட் மாஸ்டர் ஒரு லோடு விறகு கட்டைகளை பறித்து விட்டு புகை கக்கியபடி வெளியேறியது. நாளாந்தம் குறைந்தது ஒரு சடலமாவது வரும் போல. அழுகேறிய பொத்தல் விழுந்த முழங்கால் அளவு காற்சட்டையும் வியர்த்து தெப்பமாக நனைந்த மேலாடையுடன் புனிதன் விறகுகளை ஒதுக்குவதிலும் தீயை அணைய விடாமல் தொடர்ந்து எரிவதை உறுதிப்படுத்தினான். குடித்து குடித்து ஒட்டிய வயிறு வயதை அதிக்கப்ப டுத்தினாலும் அவனுக்கு இருபத்தைந்தை விட குறைவுதான். முகத்தில் எந்த சலனமும் இல்லை ஆனால் மந்தாரம் அவனை அச்சுறுத்தியிருக்க வேண்டும். விலகியிருந்த விறகுகளை ஒதுக்கி எரித்து முடிப்பதில் வீச்சாகவிருந்தான். வெக்கைக்கும் சிதை சூட்டுக்கும் ஆள் நல்ல கரு கரு என்று என்றாகிவிட்டான் போல.

“விறுத்தி இல்லாத தொழில் என்று பெண்சாதி திட்டிக்கொண்டாலும் பரம்பரையா செய்து வந்தது விட ஏலாது பாருங்கோ. அப்பரும் தாத்தா கிழவனும் சாகும் மட்டும் கிடந்து உருகினது எனக்கு இப்பவும் கண்ணுக்க நிக்குது. வெளில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் வேல கேட்டால் என்ர முகத்தில முழிக்கிறதே பாவம் எண்டு பழிக்கிறாங்கள். பிறந்த பிறப்பும் பரம்பரையும் அப்படி." என்று ஆண்டவரை கொண்டு வந்த யாரோ ஒருவருக்கு இப்பதான் ஆதங்கத்தை கொட்டினவன். அடிக்கடி காற்சட்டை பையில் இருந்த கால் போத்தல் சாராயம் அவனின் தாகத்தை ஆற்றிக் கொண்டிருந்தது. இல்லை இல்லை நாவை நனைத்துக் கொண்டது என்றுதான் சொல்லவேண்டும்.

அவனையே அவதானித்து கொண்டிருந்த நான் பறையின் மெல்லிய அதிர்வு கேட்டு கவனத்தை திரும்பினேன். வீட்டில் இருந்து வந்து கொள்ளி வைக்கும் வரைக்கும் இரைந்து கொண்டிருந்தது அடங்கி அரைமணி நேரமாவது ஆகியிருக்கும். துணைக்கு வந்த சின்ன மேளம் ஏற்கனவே போய்விட்டது.

சங்கரன் தோளில் தொங்கிய மேளத்தை இறக்கி கேணிக்கட்டில் வைத்து விட்டு இடுப்பில் இருந்த பீடி கட்டில் ஒன்றை எடுத்து மூட்டினான். பரந்த கரும் தேகம். அவனுக்கு முப்பத்தைந்து வயதிருக்கும். முன்னால் துருத்தி கொண்டிருந்த அளவுக்கு மீறிய வயிறு வேர்வையால் மின்னியது. வீட்டில் இருந்து இவ்வளவு தூரமும் நடந்தே வந்தவன். சந்திகளில் நின்று கொஞ்சநேரம் அடிக்கவேண்டும். தனது துணிப்பையில் மேல் சட்டையை எடுத்து உதறி அணிந்தான். வாயில் இருந்த பீடியை எடுத்து பெரிதாக இருமி துப்பினான். அப்போதுதான் கேணியோரம் கிடந்த நாங்கள் அவன் கண்ணுக்கு தென்பட்டமோ? அல்லது வீட்டில் அலங்கரித்திருந்த போதே எங்களை அவதானிக்க தொடங்கிவிட்டானா? தெரியவில்லை. கருமையான சிராம்பு இருவரையும் நல்லா முத்தினதாக காட்டிக் கொடுத்திருக்க வேண்டும்.

எங்களை கண்ட பொழுதில் இருந்தே சங்கரன் முகத்தில் ஒரு விதமான கள்ளம் பரவியிருந்தது. ரஞ்சன் தான் சின்ன மேளம் அடிக்க வந்தவன். இருவரும் கடந்த பல வருடமாக கூட்டாக பறை அடிச்ச ஆக்கள் போல அன்னியோனியமா வந்தவர்கள். எல்லாம் முடிந்ததும் சங்கரன் ரஞ்சனை துரத்துவதில் குறியாக இருந்தான் விபரம் தெரியவில்லை.

சுற்றி முற்றும் பார்வையை ஓடவிட்டு யாராவது தன்னை அவதானிக்க வில்லை என்பதை உறுதி படுத்துவதில் முனைப்பாக இருந்தான். ஆசுவாசமா கேணி கட்டில் இருந்து பீடியை இழுப்பதாக பாவ்லா காட்டியது அப்பட் டமாக தெரிந்தது. கறள் கட்டின தனது மிதிவண்டியையும் கண்களால் அளவிடுவதை ஊகிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன உதில குந்தியாச்சு வீட்ட போற யோசினை இல்லையோ? கால பாதிய அடிச்சிட்டு வெளிக்கிட வேண்டியது தானே" மேடையில் இருந்து இறங்கி வந்த புனிதன் சங்கரனை வம்பிளுக்கிற தொனியில் கேட்டான். பிரதான வீதியில் இருந்து இந்த சுடுகாட்டுக்கு திரும்பும் மூலையில்தான் பார் இருக்கு. அடிக்கடி வந்து போகிறதாலும் புனிதன்ட தகப்பனும் சங்கரனுக்கு பழக்கம் போலும். இருவரின் உடல் மொழியும் அப்படித்தான் நினைக்க தோன்றுது.

"நாதாரி கொஞ்சம் ஆறிட்டு போவம் எண்டு இருக்கிறன். நீ என்னண்டால் துரத்திரதில நிக்கிறா" என்று செல்லமாக கடிந்து நாலு கெட்ட வார்த்தைக ளுடன் மெல்லிய புன்னகையை உதிர்த்தான் சங்கரன். உள்ளுக்குள் கரவு இருந்தது. பிணத்தோட ஏதாவது பெறுமதியான பொருள் இருந்தால் ஆட்டையப்போட யோசிக்கிறான் என்ற கரவுதான்.

"நாசமறுந்த புழுக்கம்" புனிதனும் மேல் சட்டையை கழட்டியபடி கேணிக்கட்டில் இருந்தான். மிச்சமா இருந்த சாராயத்தை உறிஞ்ச தொடங்கினவன் சங்கரனின் பிழைப்பு நிலவரத்தை பற்றி குசலம் விசாரித்தபடி சிதையையும் அவதானிக்க தவறவில்லை. வேர்வைக்கு சொறிந்து சொறிந்து ரஞ்சனின் உடம்பெல்லாம் சாம்பல் பூச்சுக்கள். சட்டைக்கு உள்ளேயா கையை விட்டு சொறிசிருப்பான் போல. அங்கங்கு ஒட்டிக்கிடந்து பல்லிளித்தது.

இவர்கள் இருவருக்கும் பல ஒற்றுமைகள் ஆனால் வயதிலும் அனுபவத்திலும் அது இல்லாமல் போனது. செய்யும் தொழிலும் தோற்றமும் நிரந்தர வறுமை ஆலகாலமாக ஊறியிருப்பதை காட்டியது. இருந்தாலும் சங்கரன் முகத்தில் வெளியில் காட்டிக்கொள்ள முடியாத அந்தரிப்பு அடிக்கடி வந்து போவதை மறுப்பதற்கில்லை. சந்தர்ப்பம் சூழ்நிலை மனிதரை களவு செய்ய தூண்டுவது ஒருபுறம் ஆனால் சிலவேளை அது இயற்கையாகவே வந்துவிடுகிறது. அப்படி வருவதை தவிர்ப்பது மிகவும் கடினம். வறுமையிலும் செம்மையா வாழும் கதைகள் கதைகளாகவே இருக்கிறது. செம்மைக்கு ஆளாளுக்கு விளக்கம் கொடுப்பதும் பிறகு தனது பையை நிரப்ப அங்கங்கே கையேந்தும் கீழ்த்தரமான மனிதர்கள் பலர் இருக்கிறார்கள்.

---------------------

வறுமையில் செம்மைக்கு ஆண்டவரின் இலக்கணம் தான் எனக்கு தெரியும். ஒருநாள் காலை மயில்வாகனத்தார் அவசரமாக ஆண்டவரை பார்க்க வந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் பிள்ளையார் கோவில் திருவிழா அடுத்த மாதம் வரவிருந்தது. பல மாதங்களாக ஒழுகிக்கொண்டு இருந்த கோவிலின் வடக்கு பக்கத்து கூரை திருத்த வேலைக்கான விபரத்தை நீட்டி முழங்கினார். புன்முறுவலுடன் கேட்டுக்கொண்டே கூலி தடிக்கணக்கு என்று ஆண்டவர் மொத்த தொகையை பேசி முடித்தார்.

அடுப்படியில் இருந்து வெளியில் வந்த தங்கம் "பேத்திக்கு என்ன பெயர் வைச்சிருக்கிறீங்கள்" என்று கேட்டபடி கையில் ஆவிபறக்க கொண்டுவந்த தேநீரை முக்காலியில் வைத்தார். ஈடாட்டமாக இருந்த காலால் முக்காலி லேசாக ஆடியது. கேலியாக ஒரு முறுவல் மயில்வாகனத்தாரின் முகத்தில் தோன்றி மறைந்தது. "பன்னக்காரன் வீட்டை படுக்க பாய் இல்லை எண்டது உண்மைதான் போல" ஆண்டவரைப்பார்த்து புன்னகைத்தார்.

"தங்கம் நீ என்னகேட்டனி?"

"பேத்திக்கு என்ன பெயர் வைச்சியிருக்கிறீங்கள்?" தங்கம் இதை அறிந்து கொள்ள ஆசைப்பட்டதுக்கு ஒரு காரணமும் இருக்கு. பக்கத்து வீடு எதிர் வீட்டு பெண்களுடன் அரட்டை அடிக்கும் போது தனக்கு தெரிந்த புதிய தகவல்களால் கெத்து காட்டலாம் பெருமை அடித்துக்கொள்ளலாம் என்பதுதான். ஆனால் ஆண்டவருக்கு இதெல்லாம் பிடிக்காது என்ற பயம் உள்ளூற இருக்கும். யாழ் நகரை அண்டி திருநெல்வேலி பக்கம்தான் மயில்வாகனத்தாரின் மகள் இருக்கிறாள். அவளுக்கு முதல் பிரசவத்தில் இரண்டு கிழமைக்கு முன்னம் தான் பேத்தி பிறந்தது.

"இன்னும் வைக்கேல பஞ்சாங்கம் சொல்லுற எழுத்துக்களில் பெயர் வைச்சால் வாயுக்க நுழையாமல் வருது. அதுதான் நாலுபேரிட்ட விசாரிச்சு வைப்பம் எண்டு இருக்கிறன்".

தங்கத்தின் குணம் அறிந்த ஆண்டவர் கடுமையான தொனியில் பார்வையை அவள் மேலே வீசினார். புரிந்து கொண்ட தங்கம் மேலும் விடுப்பு கேக்காமல் புன்முறுவலுடன் உள்ளே சென்றார். மற்றவன் விவகாரத்தில் மூக்கை நுழைக்காத தன்மை இருக்கே அதுவும் முதிர்ந்த மனிதனின் இயல்புதான் போல. அந்த நேரங்களில் ஆண்டவர் மேல் இருந்த மதிப்பு எனக்கு இன்னும் அதிகமாகும். மயில்வாகனத்தார் தந்த சொந்த வீட்டு வேலைக்கு ஆண்டவரை கேக்கமுடியாமல் இருந்ததுக்கு பின்னால் ஒரு காரணம் உண்டு. ஒருமுறை வெளியாள் ஒராளை அவரின் மருமேன்காரன் கூட்டிவந்து வேலைக்கு வைத்தது ஆண்டவருக்கு வெறுப்பை ஏற்படுத்திவிட்டது. இன்னொருவன் தொட்டவேலையை தொடக்கூடாது என்ற வைராக்கியம் அவருக்கு. தொழில் தர்மம் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடித்த மனிதன். மயில்வாகனத்தார் எவ்வளவோ முயன்றும் ஆண்டவரை சமாதான படுத்த முடியவில்லை. வேறு வேலை இல்லாமல் வறுமையில் தத்தளித்தும் அதற்கு உடன்படாதது என்னை கவர்ந்தது.

நாங்கள் நீண்டு வளர்ந்த பிறகு பாக்குகள் குலை குலையாக வரத்தொடங்கினது ஆண்டவரை ஆனந்தப்படுத்தியது என்று நினைத்தேன். இருந்தும் அந்த ஆனந்தம் அதிக நாட்கள் நிலைக்கவில்லை. ஒருநாள் கடும் வயித்து வலி அவருக்கு. சின்னவன் கடைக்குட்டி தான் வைத்தியசாலைக்கு கூட்டிக்கொண்டு போனான். சாதாரண வயித்து வலிக்கு தரும் மாத்திரை களுடன் வந்த மனுஷன் கொஞ்சம் கொஞ்சமாக உடைவதை அவதானித்தேன். எலும்புகள் வெளித்தள்ள ஆரம்பித்த காலம். ஏற்கனவே இருந்த மூலம் அதிகமாகியது. நடை தளரும் நிலையில் என்னை பிடித்தபடி மலம் கழித்த போது நாலு அங்குல மூலம் வெளிவந்துவிட்டது. அதை சிரமப்பட்டு மரண வலியுடன் என்னை இறுக பிடித்தபடி உள்ளே தள்ளியதும் இன்னும் நினைவில் நிக்கிறது. அந்த வலி என்னையும் ஏதோ செய்தது.

நிலமை கட்டுக்கடங்காமல் போனதும் காந்தனும் இளையவனும் மேலதிக பரிசோதனைக்கு வலுக்கட்டாயமாக ஆண்டவரை கொண்டு போனார்கள். அப்போதுதான் இடிபோல அந்த செய்தி வந்தது. அதை கேட்ட தங்கம் நிலைகுலைந்தார். சுற்று வட்டாரத்தில் இருக்கும் கோவில்களில் தன்னால் இயன்ற மட்டும் அரிச்சினை பூசை கட்டுவதில் தொடர்ந்து நம்பிக்கையை இழக்காமல் பார்த்துக்கொண்டார். அக்கம்பக்கத்து சனத்தில் முக்காவாசி உள்ளே அழுதது. இரைப்பையில் புற்று கட்டி பெரிதாக வளர்ந்து விட்டதாம் என்ற செய்திதான்.

இனி மின்சாரம் பிடிச்சும் வேலையில்லை. இருக்கும் மட்டும் இருக்கட்டும் என்று மருத்துவர்கள் கைவிட ஆண்டவர் இந்த உலகத்தில் தன்னை எங்கோ தனியாக விட்ட உணர்வில் கிடந்தார். உடல் வேதனை ஒருபுறமும் மரண பயம் இன்னொருபுறமும் வாட்டியது. ஒருநாள் என்னை தழுவிய கரம் கரடுமுரடை தொலைத்தது போல மிருதுவாக இருந்தது. "டேய் சின்னவனே" கம்மாலையில் வேலையா இருந்தவனை வலுக்கட்டாயமாக கூப்பிட்டார். "என்னப்பா? உதில ஏன் தலையை தொங்க போட்டுக்கொண்டு நிக்கிறீங்கள்? கிறுதி வந்து விழாமல் உள்ள போய் படுங்கோ" என்றான்.

"இதை பார் இந்த இரண்டிலும் என்னை கொண்டு போயிடு சொல்லிப் போட்டன்"

அதைக் கேட்ட தங்கம் உள்ளிருந்து வீறிட்டு கத்தியது அந்த ஊர்முழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டிருக்கும்.

"சரி சரி அதைப்பற்றி ஏன் இப்ப யோசிக்கிறீங்கள்" என்று அவரை பரிதாபமாக பார்த்தான் சின்னவன்.

------------------------------

கன்னத்தை ஒட்டி காதின் மேல் சொறிய பொடுகு காற்றில் பறக்காமல் கீழேயே உதிர்ந்தது. சங்கரனுக்கு நான்கு நாட்கள் மளிக்காத தாடி வேறு இடையிடையே அரித்துக்கொண்டு இருந்தது. தனது நோக்கத்துக்கு புனிதன் இடையூறு தருவானோ என்ற பயம் உள்ளூற உறுத்தியதுடன் கேட்கவும் வெட்கம் தடுத்தது போல. அவனை எப்படி அனுப்புவது? இல்லாவிட்டால் கேட்டுவிடுவமா? என்ற குழப்பம் சங்கரனுக்கு. மற்றவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள். மயானம் அமைதியை சுவைக்க காத்திருந்தாலும் எரியும் சிதையின் வீச்சு அதை தொந்தரவு செய்தது.

"ஏண்டா அவன் பார் காரண்ட பெட்டய கலைச்சுக்கொண்டு திரிஞ்சனி பிறகு என்ன மாதிரி?" வலுக்கட்டாயமாக புனிதனின் கவனத்தை தன்பால் திருப்பி அலுப்படிக்க கேட்டான் சங்கரன்.

"அவளிண்ட கதையை ஏன் கேக்கிறா. எல்லாம் முடிஞ்சாப்பிறகுதான் தெரியுமாக்கும் நான் வெட்டியான் எண்டு. திமிர்பிடிச்சவள். காறித்துப்பிட்டு போட்டாள். வெடுக்கென்று வார்த்தைகளை விட்டவன் முகம் சிவந்துவிட்டது.

"நீ காரியத்தை முடிச்சிட்டு நடிக்கிறாய் நாதாரி" சங்கரன் இன்னும் உசுப்பேத்தினான்.

"அவளெல்லாம் ஒரு ஆளு எக்கேடு கெட்டு போனால் எனக்கென்ன" என்று மறுபடியும் திட்டிவிட்டு எழுந்து கையில் இருந்த வெறும் போத்திலை தூக்கி கேணிக்குள் வீசினான். விறுவிறெண்டு நடந்தவனை மெல்லிய புன்னகையில் சங்கரன் பார்த்தான். இன்னொரு பீடி மூட்டி உறுஞ்சி இழுக்க தொடங்கிவிட்டான்.

நேற்று தான் தறித்ததால் இன்னும் ஈரம் காயாமல் பாரம் அப்படியே இருந்தது. எங்கள் இருவரையும் தனித்தனியே தூக்கமுடியாமல் தூக்கி மிதி வண்டியின் பாருடன் இரண்டுபக்கமும் சேர்த்து காட்டினான். அப்போது தான் தெரிந்தது அவனின் எண்ணம். நன்றியை ஆண்டவருக்கு செலுத்தியதோடு எல்லாம் முடிந்தது என்று நினைத்தேன். ஆனால் இன்னும் எத்தினை பிரேதங்கள் காவப்போகிறோமோ என்ற அருவருப்பே இப்போது என்னை வாட்டத்தொடங்கிவிட்டது.

**தமிழ்வெளி ( ஐப்பசி 2022)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை மஞ்சரி
# அனைத்துலக வாசகர் வட்டம்

*மஞ்சரியினை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் முகமாக கனக தீபகாந்தன் அவர்களின் முயற்சியில் உருவாக்கப்பட்ட சிறுகதை மஞ்சரி அனைத்துலக வாகர் வட்டம் மஞ்சரியில் வெளிவரும் கதைகள் பற்றிய கலந்துரையாடல்களில் 15-10-2023 நடைபெற்ற நிகழ்வின் விபரம்*

சிறுகதை மஞ்சரி அனைத்துலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (15.10.2023) இரவு 7.30 மணி - 10.30 வரை நிகழ்நிலை மூலம் நடைபெற்ற எழுத்தாளர் **ந.ஜெயரூபலிங்கம் எழுதிய பஞ்சவர்ணம்** சிறுகதையானது உரையாடலுக்கும் விமர்சனத்துக்குமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் சிறுகதை பற்றிய தமது பார்வையிலான விமர்சனங்களை திருமதி.க.மங்களேஸ்வரி (இராவணத் தமிழச்சி)- தமிழாசிரியை அவர்களும் திரு. வேலையா சதீஸ்குமார் -பொறியியலாளர் அவர்களும் தெளிவுற முன்வைத்தனர். பெண்ணியம்,அழகியல்,கலாசார விழுமியங்கள்,சமுதாய கட்டுப்பாடுகள்,தனிமனித ஒழுக்கம், நன்றி என்னும் அறம்சார் கோட்பாடுகள் நிறைத்து ஒரு படைப்பு. கலந்து கொண்ட எழுத்தாளர்கள்,வாசகர்கள் தம் பார்வையில் சிறுகதை பற்றிய வெளிப்பாடுகளை பகிர்ந்தனர். சிறுகதை மஞ்சரி ஆசிரியர், அழகியல் பாங்கில் சிறுகதை நகர்ந்தாலும் சிறுகதை நீளமாக இருந்தபோதும் சிறுகதையை தவிர்க்க முடியவில்லை என்பதற்கான காரணத்தை விளக்கினார்.

ஒருசில கதாபாத்திரங்களை கொண்டு கதை நகர்ந்தாலும் வாசகனை நகரவிடாது கட்டிப்போட்ட சிறுகதையாக பஞ்சவர்ணம் மனங்களை கவர்ந்து சென்றது. "கூடுகளை சிறைக்கான அடையாளமாக ஏன் கருதவேண்டும், வாழ்வியல் ஒழுக்க விதிகளுக்கான ஒரு அடையாளமாகவேனும் எண்ணலாமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடைச்சல்



நானும் இங்கே பொறியி யலாளராக இருந்தாலும் எனக்கும் பிரச்சினைகள் இருக்கும் என்று முதலாளி நினைக்கவில்லை. அன்று முதல் நாளாக வேலைக்கு வந்தான். அரபுதேசம் புதிது என்றாலும் என்னைப் போல சில இலங்கையர்கள் குறிப்பாக தமிழர்கள் இருந்தது அவனுக்கு தெம்பாக இருந்திருக்கும். அவன் தான் முரளி. 20 வயசு என்று நம்ப இயலாத உயரமும் உடம்பின் சுற்றும் இருந்தது. சிவலையும் இல்லாமல் கறுப்பாயும் இல்லாமல் பொது நிறத்தேகம். நெஞ்சை நிமிர்த்தி நடக்கும் அவனுக்கு தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும் என்று நினைத்தேன். இரண்டு கைகளிலும் முழங்கைக்கு கீழே புரியாத வடிவங்களில் பச்சை குத்தியிருந்தான். அவ்வளவு ஆடம்பரமான பெடியன் நவநாகரீகம் தெரிஞ்சவன் ஏன் வந்தான் என்பது கேள்விக் குறியாகவே இருந்தது. பெரும்பாலான நேரங்களில் முகத்தை உம்மென்றே வைத்திருந்தான். இந்தவயதில் பெடிகள் அரபு நாட்டுக்கு வேலைக்கு வருவது குறைவு. அப்படி வரும் ஒருசிலருக்கு இனியில்லையென்ற கஸ்டம். அதாவது நல்ல தமிழில் சொல்லும் கூடாத வார்த்தையென்றால் வறுமையாகவும் இருக்கலாம். வறுமை என்பதை யாரும் எழுத்திலும் பேச்சிலும் பயன்படுத்துவதில்லை. அது கொடுமையானதா? வலியானதா? தெரியவில்லை. ஆனாலும் தயக்கம் இருப்பது உண்மைதான். ஊரில் அதிகம் வெயிலில் திரிந்திருக்கமாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான் போல இளங்காலை வெயிலுக்கே கண்ணை துருத்திப் பார்த்தான். வேலைத்தளத்தில் நடுவில் வாகனங்கள் கட்டட பொருட்கள் அதாவது கல், மண், சீமெந்து, இரும்புக்கம்பிகள் பலகைகள், தீராந்திகள் போன்ற சாமான்களை ஏற்றிப் பறிக்க வரும் பாதை வெண் புழுதியால் போர்த்திருந்தது. அதில் பளிச்சென்ற வெயிலின் தெறிப்பும் கூட அவனை தொந்தரவு செய்திருக்கலாம். இங்கு வேலைக்கு வந்து ஒருசிலர் போதுமடா சாமி என்று ஒரு சில மாதங்களில் ஓடினவங்களும் இருக்கிறார்கள். வருடக்கணக்கில் பொறுமையா உழைச்சவனும் ஏதோ ஒரு நிலையில் மேல வந்தவர்களும் இருக்கிறார்கள். இவன் எப்படி இருப்பானோ ஆருக்கு தெரியும். எனக்கு சோலி இல்லாமல் குடைச்சல் கொடுக்காமல் இருந்தால் போதும். வந்த கொஞ்ச நாளிலையே தங்கள் குரங்கு சேட்டைகளை காட்டத்தொடங்கினால் வேற வழியில்லை. எனக்கு சில வழிமுறைகள் இருக்கிறது. அதன் படி நடக்கவேண்டும். ஏன் எதுக்கு என்று கேள்விகேட்டு தொந்தரவு செய்யாத ஆளாக இருக்கவேண்டும். வருபவர்களிடம் முதலே சொல்லிவைத்துவிடுவேன்.

மொத்தமாக 15 இரண்டு மாடி வீடுகள் கட்டும் வேலைத்தளம். புதிதாக வாறவர்களுக்கு வேலையை ஒழுங்குபடுத்துவதும் சொல்லிக் கொடுப்பதும் முதலாளி எனது தலையில் போட்டுவிட்ட மேலதிக வேலைகள். ஏதோ நான் மிகவும் சந்தோசமாக இருப்பதாக நினைத்திருப்பார். நான் கத்தார் வந்து நாலரை வருடம் ஆகிறது. இதுவரை புதிதாக வந்த இரண்டு பேர் கொடுத்த தொல்லைதான் இன்னும் உளைச்சல் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. நல்ல காலம் முதலாளியிடம் சொல்லி வெளியேற்றிவிட்டேன். இது பெரிய நிறுவனம் என்றதாலே வேறு வேலைத்தளத்துக்கு அவர்களை மாற்றி விட்டார்கள். ஆனால் இன்னும் நினைவில் நிற்கிற மாதிரி அவர்கள் இருவரின் தொல்லைகள் இருந்தது.

முரளியின் அடர்ந்த கேசம் நெற்றியில் வழிந்து கிடந்தது. காலை வெயிலொடு வீசிய கூதல் குளிர் காற்றுக்கு அலைந்து ஆடியது. கையை தலையில் வைத்து தலைக்கவசத்தை போடு என்ற சமிக்கையை காட்டினேன். அதே வாகனத்தில் வந்திறங்கிய சில வங்காளிகளும் வடநாட்டு இந்தியர்களும் நமட்டுச்சிரிப்புடன் சொல்லி வைத்தமாதிரி அவனையே பார்த்தனர். இந்தக் கட்டுமான வேலைத்தளத்தில் அனைவரும் தலைக்கவசம் அணியவேண்டும் என்பது கட்டாயம். அவனுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லைதான். என்னை ஒருமாதிரி பார்த்தவன் வெறுப்பாக உதட்டை சுளித்தபடி மஞ்சள் நிற தலைக்கவசத்தை அணிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஓரளவுக்கு விளங்கினாலும் போகப் போக விளக்கம் வந்திடும் பழகிடுவான் என்று நினைத்தேன். இந்த வயதில் அனுபவம் இருக்காது சொல்லிக் கொடுக்கவேண்டும். நமது நாட்டில் சிறிய அளவிலான வேலைகளில் இந்த கட்டாயங்கள் இருப்பதில்லை. அதுதான் நாம் விட்ட தவறு. ஊர்ல வேலை இல்லாத நிலைக்கு மாற்று இப்படி வெளிநாடு போவது. கட்டாயம் இல்லாத பழக்கத்தை புதிய இடத்தில் செய்யச் சொல்லும் போது போதுமானவரை பயிற்சி கொடுக்கவேண்டும். அல்லது தொடர்ந்து அறிவுறுத்தவேண்டும். திரும்ப திரும்ப ஒழுங்குகள் சட்டங்களை ஞாபகப்படுத்தல், அதை மீறுவதை பெருமளவில் தடுக்கும் என்று அப்போது எனக்கு தோன்றவில்லை. யாரும் அதை சொல்லித்தரவுமில்லை. ஆறறிவு படைத்த மனிதன் தானே ஒன்றுக்கு இரண்டு தடவை சொன்னால் புரிந்து கொள்வான். அதை ஏன் திரும்ப திரும்ப சொல்வது வேண்டாத வேலை என்று நினைத்தேன். நானும் முதல்நாளே அவனைப்பற்றி விசாரிக்க வேண்டாம் என்று இருந்துவிட்டேன்.

"கேதீஸ் அண்ண இவன் புதுசு. உங்களோட கம்பி கட்டுற வேலைக்கு வைச்சிருங்கோ." சாப்பாட்டு பாசலை ஏற்கனவே முதல் தள வேலைகள் முடிந்த வீட்டுக்குள் வைத்துவிட்டு வந்தவர் என்னையும் முரளியையும் பார்த்தார்.

ஏளனச்சிரிப்பை முகத்துக்கு நேராகவே உதிர்த்தவர், "என்ன சின்ன பெடிகளை வேலைக்கு வைச்சால் எப்படி முடிக்கிறது? இதுவரைக்கும் வேலை செஞ்ச சிங் எத்தின வருச அனுபவம் தெரியுமே. அவனுக்கு பதிலா வேலை தெரியாத இளம் பெடிகளை வைச்சு என்னெண்டு ஒப்பேற்றுறது." என்று வழமைபோல வினவினார், வெத்திலை ஒன்றில் சுண்ணாம்பை பூசி பாக்கு சீவலை வைத்து மடித்து வாயிற்குள் தள்ளினார். ஆட்காட்டி விரலில் இருந்த சுண்ணாம்பையும் பல்லில் தடவி எஞ்சியதை இரும்பு துரு ஏறிய நீள காற்சட்டையில் துடைத்தார். கிழமைக்கு ஒருநாள் அதாவது வெள்ளியில் விடுமுறை அன்றைக்கு வேலையாட்கள் சேரும் தலைநகர் தோகாவுக்கு அருகில் சில கடைகளில் வெற்றிலை இரகசியமாக விற்பார்கள். கேதீஸ் அண்ண எப்படியாவது வாங்கி வந்துவிடுவார். ஒருகிழமைக்கு தேவையானதை வாங்கி வைத்து நாளுக்கு மூன்றுதரம் வாய்க்கு அரைக்கும் பழக்கம் உள்ளவர். பஞ்சாபியான சிங் திரும்பி போனதில் இருந்து கடுமையான வேலை அவருக்கு. மற்றவர்களை மாற்றி உதவிக்கு அனுப்ப முடியாத நிலை. வேற வழியில்லாமல் முரளியை அவருக்கு உதவியாக விட முடிவெடுத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி தம்பி வா. என்ன பேர்? ஊர்ல எவடம்?" என்று கேட்டவாறே கம்பிகள் வளைக்கும் இடத்துக்கு போனார். முரளியும் அவரைத் தொடர்ந்தான்.

"மத்தியானம் என்னோட சாப்பிட வா. நடந்து போற தூரம்தான். சாப்பாட்டுக்கடை அடுத்த சந்தியில இருக்கு." என்று உரக்கச் சொன்ன என்னை திரும்பி பார்த்து தலையாட்டி விட்டு நடந்தான்.

முதல் நாள் என்பதால் முரளிக்கு வேலையாட்கள் விடுதியில் சமையல் ஆயத்தங்கள் இல்லை. அவனுக்கு கடையில் சாப்பாடு வாங்கி கொடுக்க முதலாளி என்னிடம் மேலதிக தொகையை தந்திருந்தார். அவசர தேவைகளுக்கு கையில் பணம் தந்து வைத்தால் போல அவ்வளவு நல்லவர் என்று சொல்லமுடியாது. மிச்ச காசை கறாராக வாங்கினபின்னர் தான் அவர் முகத்தில் சந்தோசக்களையே வரும். அதுவரை ஏதோ பறிகொடுத்த மாதிரி திரியும் ஆள்.

வேலைத்தளத்துக்கு சுற்றி தகர வேலி அடைக்கப்பட்டிருந்தது. கிழக்குப்பக்க வேலியை அண்டித்தான் கம்பிகள் வளைக்கும், துண்டு போடும் இடம் இருந்தது. அந்த வேலிக்கு அணுக்கமாக இருபது அடி தள்ளி அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய மதில். அதில் எட்டு அடிக்கு ஒரு மின்குமிழ்கள் வரிசையாக பொருத்தப்பட்டிருந்தன. இரவில் வேலை செய்வதில்லை என்பதால் அவற்றின் முழுஅழகையும் இரசிக்க முடியவில்லை. சில வேளைகளில் காலையில் அணைக்காமல் ஒளிர்ந்தபடி இருக்கும். ஆனால் புலர்ந்த பிறகு அதன் ஒளிக்கு பயனும் இல்லை அழகும் இல்லைதானே. மூன்று அடுக்குகள் கொண்ட வீட்டை பாதுகாக்கும் மதில் அது. இரண்டாம் தளத்தில் இந்தப்பக்கம் பார்க்க கூடிய வகையில் ஒரு இரண்டு வெளி ஜன்னல் இருந்தது. அதன் கதவுகள் திறந்து திரைமட்டும் மறைத்திருந்தது. ஆட்கள் நடமாட்டம் இருப்பது போன்ற அசூசையை உணர்ந்தேன். உற்றுப்பார்த்தால் வீட்டில் உள்ளவர்கள் கோபத்துக்கு ஆளாக நேரும். கவனத்தை வேறு திசைக்கு திருப்பினேன். முன்னர் கலைக்கப்பட்ட இருவரும் அந்தவீட்டை உற்றுப்பார்த்தார்கள். உற்றுப்பார்த்தது மட்டும் இல்லை எமியுடன் தப்பாக நடக்க முயன்றிருக்கிறார்கள். தன்னுடன் விரசமாக கதைத்து சீண்டியதை தனது கத்தாரி அரபி வீட்டுக்காரரிடம் அவள் சொல்லவில்லை.

"வீட்டு பணிப்பெண்ணாக வரும் பெண்கள் என்றால் காசைக்காட்டி பணிய வைக்கலாம் என்று தான் அநேகமானோர் நினைக்கிறார்கள். எனக்கு நிம்மதியாக வேலைசெய்ய முடியவில்லை. அந்த இருவருக்கும் சொல்லி புரிய வையுங்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கலங்கியவாறு ஆங்கிலத்தில் சொன்னாள். என்னிடம் மட்டும் சொன்னாள். என்மேல் அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தாள். எமி பிலிப்பைன்ஸ் நாட்டு பெண். வீட்டு பணிப்பெண்ணாக இருக்கிறாள். இயல்பாகவே சிரிப்பாள். தனது நாட்டுக்கே உரிய நல்ல நிறம் அவளின் அழகை இன்னும் கூட்டியது. அவள் காலையில் மதிலுக்கு வெளியில் நிற்கும் இரண்டு வெள்ளை நிற லேண்ட் குரூஸரை கழுவ வருவாள். அடிக்கடி பார்த்து பேசியதால் பிடித்திருந்தது. இங்கே வேலை முடிய இன்னும் இரண்டு வருடங்கள் ஆகலாம். அதற்கு முன் நான் அவளை விரும்புவதை சொல்லவேண்டும். அவளுக்கும் என் மீது விருப்பம் இருக்கும் என்று நினைக்கிறேன். கடைசியாக அவள் சொல்லி உடைந்தபோதே முடிவெடுத்தேன். எப்படியாவது இவர்கள் இருவரையும் இங்கிருந்து வெளியேறவேண்டும் என்று.

அவர்கள் இருவரும் அடிக்கொருதடவை தனது வீட்டை நோட்டம் விட்டதை வீட்டுக்காரர் கண்டிருக்க வேண்டும். அதனால் வீட்டுக்காரர் நேரடியாக எங்கள் முதலாளியிடம் புகார் சொல்லியிருந்தார். இதுவும் எனக்கு வாய்ப்பாக அமைந்தது. நான் எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் அவர்கள் இருவரையும் நிறுத்த முடியவில்லை. வீட்டுக்காரன் காவல் துறைக்கு போனால் நிறுவனத்துக்கு கெட்ட பெயர் வரும். இப்படி பல காரணங்களை சொல்லி இருவருக்கும் இடத்தை மாற்றிவிட்டேன்.

முரளிக்கு இப்பவே சொல்லிவைக்க வேணும். முதல் தரம் ஆள பார்த்தவுடனேயே இவனும் அவர்கள் போல நடப்பானோ என்ற சந்தேகம் வந்தது உண்மை. இருந்தாலும் புதிதிலயே சொல்லி வைக்கிறதும் தொடர்ந்து ஞாபகப்படுத்திறதும் நல்லது. கேதீஸ் அண்ண அந்தப்பக்கம் திரும்பாமல் வேலையில் மட்டும் கவனமாக இருப்பார். அன்று மதியம் சாப்பிட போகும் போதே சாட மாடயா சொல்லி வைத்தேன். நான் சொன்னதை அவன் பெரிதாக காது கொடுத்து கேட்கவில்லை என்று புரிந்து கொண்டேன். இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு கடுமையானது என்பதையும் சேர்த்து தெரியப்படுத்தினேன். சாப்பாட்டு கடைக்காரன் ஒரு நல்ல சிவலையான நெடுவல் மலையாளி. பெயர் தெரியாது. தொடர்ந்து வந்து போறதால பழக்கம். இரண்டு ரியால் சேர்த்து ஒவ்வொரு கறிக்கும் போட்டு பில்லை வாங்கினேன். அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்கு முரளியை அவதானித்தேன். ஜன்னலை பார்க்காமலே வேலை பார்த்தான். மனதுக்கு சற்று நிம்மதியாக இருந்தது. இளம் வயதில் மனதுக்கு கட்டுப்பாடு வருவது உண்மையில் மெச்சத்தக்க விடயம். இருந்தாலும் ஏமியிடம் இருந்து ஏதாவது தகவல் வந்தால் மேற்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசிக்கலாம். விடுமுறை நாளில் கைபேசியில் அழைப்பெடுத்து பேசுவாள்.

"அண்ண என்ர ஊர் கோண்டாவில். ஊர்ல வேலைவெட்டியும் இல்லை தெரியும்தானே. இஞ்ச கொஞ்சம் உழைச்சுப்போட்டு பிரான்சுக்கு பாய்வம் எண்டு பாக்கிறன்" முரளி நேற்று சொல்லும் போது எனக்கு வெக்கமாக போய்விட்டது. இவ்வளவுநாளும் நான் அடுத்த நிலைக்கு போறதை பற்றி சிந்திக்காமல் இருந்ததே அதற்க்கு காரணம். இப்படியே காலம் முழுக்க இருந்திட்டு ஊரில போய் கொண்டுபோற காசை கரைக்கிற வேலை செய்யப்போறன். இந்த கண்ராவிக்க எமியை ஒருதலையாக காதலிப்பதும் இரண்டுவருடம் முடிய காதலை சொல்லி திருமணம் செய்யவேண்டும் என்ற எண்ணமும் இருப்பதை நினைக்க வெட்கம் வராமல் வேற என்ன வரும்.

இன்று வெள்ளிக்கிழமை விடுமுறை நாள். இன்னும் கொஞ்சநேரம் உறங்கலாம் என்று கிடந்தேன். வெளியில் வேலையாட்கள் விடுதியிலும் யாரும் எழுந்திருக்கவில்லை. விடுமுறைநாளில் பெரும்பாலோருக்கு பிந்தியேழும்பும் பழக்கம் இருந்தது. அந்த அமைதியை கிழித்து எனது கைபேசி அலறியது. வழமையாக மதியம் சாப்பாட்டுக்கு பிறகுதான் அழைப்பாள். இப்போ நேரம் காலை எட்டு மணி. என்ன அவசரமாக இருக்கும் என்று தெரியவில்லை. முன்னரும் சில தடவைகள் இப்படி அவசரமாக அழைத்தவள். அப்படி இருக்க கூடாது என்று நினைத்துக் கொண்டேன்.

"இன்றைக்கு லீவு நாள் நான் வெளியில போக வீட்டுக்காரர் நீண்டநாளுக்கு பிறகு அனுமதி தந்திருக்கிறார். பிறகு உங்களுக்கு கோல் எடுக்க இயலாது சகோதரர். எனது ஆண் நண்பருடன் பொழுதை கழிக்க போகிறேன்." என்றாள் குதூகலமாக.

எனக்கு தூக்கு வாரிப்போட்டது. "இவ்வளவு நாளும் நீ ஏன் உனக்கு ஆண் நண்பர் இருப்பதை சொல்லவில்லை?" என்று அவள் சொன்னதை ஜீரணிக்க முடியாமல் கேட்டேன்.

"அந்த ஆண் நண்பர் புதிதாக பழக்கமானவர். சொல்லவேண்டும் என்று தோன்றவில்லை. அவரும் அதை விரும்பவில்லை."

மேற்கொண்டு அவளுடன் பேச விரும்பவில்லை. இணைப்பை துண்டித்தேன்.

**காலைக்கதிர், 08 தை 2023**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாமரத்தின் கதை



எனக்கு ஒரு இறுமாப்பு இருந்தது. கேட்கும் குண்டுகளின் அதிர் விலும் வீட்டுக்கு நான்தான் காவலாளி என்ற இறுமாப்பு. ஏனெனில் இருக்கும் உயிருள்ள ஜீவன்களில் பலமானவனாக இருந்தது கூட அதற்கு காரணமாக இருக்க லாம். வீடு யாருமே இல்லாமல் வெறிச்சோடி கிடக்கிறது. என் நிழலும் தேடுவாரற்று கிடக்கிறது. பெரிய கொப்பில் கட்டப்பட்ட ஊஞ்சல் அதிர்வு களை பொறுக்க முடியாது ஆடுகிறது. இந்த 12 வருடங்க ளில் இது முற்றிலும் புதிய சூழல்.

பின்சாம நேரம் 2.30 இருக் கும் சடுதியாக துப்பாக்கி சூட்டு சத்தங்கள் கேட்க தொடங்கின. பொதுவாக இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னே ஊகிக்க கூடிய மாதிரி இருக்கும். ஆனால் இந்தமுறை எந்த முன்னெச் சரிக்கைகளும் இல்லை. கந்தரோடை உடுவில் சங்குவேலி மானிப்பாய் பகுதிகள் அமைதியாக உறங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி இரவு. துப்பாக்கி சூட்டை தொடர்ந்து குண்டுகள் வெடிக்கும் சத்தம் காதை செவிடு படுத்தியது. புகைகூட்டுக்கு கீழேயும் கட்டிலுக்கு கீழேயும் பலர் தமது வீடுகளிலே தஞ்சம் புகுந்தனர். சிலர் சாமான்களை கட்டிக்கொண்டு முன்னேறி பாய்தல் நடவடிக்கை ஆரம்பமான அன்று இரவே யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியை நோக்கி நகரத் தொடங்கிவிட்டார்கள். அடுத்த நாளும் அகோரமான செல் வீச்சுகள். அந்த பிரதேசம் முழுவதும் அதிர்ந்தது. அளவெட்டி வரைக்கும் இராணுவம் முன்நகர்ந்து நிலையெடுத்து நின்றதை துப்பாக்கி சூட்டு சத்தங்கள், ஆட்களை விசாரித்ததில் முகிலன் அறிந்து கொண்டார். முதல் நாள் சண்டை தொடங்கியதும் ஆயத்தமாக இருந்த உடைகள் பாத்திரங்களை கட்டிக்கொண்டு வெளிக்கிட்டார். யாழ்ப்பாணம் நகருக்கு அண்மையில் நல்லூர் பக்கம் ஒரு சொந்தக்காரர் வீட்டுக்கு அவரின் குடும்பம் போய்விட்டது.

தம்பி தகப்பனின் சைக்கிளில் போக அவள் தாயை தனது சைக்கிளில் ஏற்றிச்சென்றாள். அவரவர் சைக்கிளில் பின் கரியலில் கட்டக்கூடிய சாமான்களை ஏற்றிக் கொண்டு போனார்கள். காலையிலேயே குண்டு வெடிக்கும் சத்தம் அருகில் கேட்டதால் அரக்க பரக்க சாமான்களை கட்டிக் கொண்டு அக்கம் பக்க சனங்களும் வெளியேறிவிட்டார்கள்.

---

நல்ல மனிதர்களை எப்படி கண்டடைவது என்ற குழப்பம் பலகாலமாக இருந்தது. அவர்களுக்குத் தனியான அடையாளங்கள் இருக்கிறதா? அல்லது சாதாரணமானவர்கள் போல் இருப்பார்கள் இருந்தும் நடவடிக்கைகளில் அந்தக்குணங்கள் வெளிப்படுமா? இவ்வாறு நான் சிறியவனாக இருக்கும் போதே என்னுள் கேள்விகள் வரத்தொடங்கிவிட்டது. சில நேரங்களில் இது தேவையற்ற ஆராய்ச்சி போலத் தோன்றும். ஆனால் புதிது புதிதாக ஆட்களை காண்பதும் அவதானிப்பதும் பொழுதுபோக்காக மாறியது. அவதானிப்புகள் எங்களை உறுத்தும். விரும்பத்தகாத அவதானிப்புகள் அதிகமாக அறிவை தூண்டிடும் வாதத்தை உண்டாக்கும். விடைகாண துடிக்கும். எனக்கும் பிறந்த இடம் புகுந்த இடம் என்று இருவேறு சூழல். வாங்கி வந்து இந்த முற்றத்தில் நடப்பட்டபோது இரண்டடி உயரம் இருப்பேன். நான்கு காணிகள் தள்ளித்தான் இருந்தது நீர் நிறைந்த நெல் வயல். அங்கிருந்து வரும் மிருதுவான இளங்காற்று என்னை அடிக்கடி வருடியது. கதிர் வெளிவரக்காத்திருக்கும் பச்சை வயல் எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ச்சியானது. யாழ்ப்பாணத்தின் பெரிய குளம் இந்த சங்குவேலி கிராமத்தில் தான் இருக்கிறதாம். கேரன்காமம் என்ற அந்த குளத்தை வழுக்கி ஆற்றுடன் இணைக்கும் பல சிறிய குளங்களால் இந்த வயல்கள் செழிப்பாகியது அதிசயமில்லைதான். எனக்கோ புதிய அனுபவம். இயற்கையும் மனிதர்களும் புதிய சூழலை ஏற்படுத்திவிட்டார்கள். அண்மையில் தான் வீடு கட்டப்பட்டிருக்க வேண்டும். சாதாரணமான இரண்டறை வீடு. குசினியும் ஹாலும் முன்னால் நீளமாக ஒரு விறாந்தை என்று அளவாக இருந்தது.

அப்போது மூத்தவள் வதனிக்கு ஆறு வயது இருக்கும். அவளுக்கு நான்கு வயதில் ஒரு தம்பியும் இருந்தான். தகப்பன் முகிலன் வங்கி ஒன்றில் காவலாளி வேலை. காலையில் வேலை பின்னேரம் வீடு என்று சோலி இல்லாத நல்ல மனிதன். தாய் பூரணிக்கு காலையில் இருந்து மாலை வரை சாமி தரிசனம் தான் முக்கியம். சமையல் துப்புரவு சாப்பாடு இவையெல்லாம் இரண்டாம் பட்சம்.

என்னை நட்டு ஒரு மாதம் புதிதாக இளம் பச்சை நிறத்தில் புது இலைகள் வெளிவரத் தொடங்கி விட்டது. எனக்கு இன்னும் அந்த நாள் ஞாபகம் இருக்கிறது. அவள் அழுது நான் பார்த்த நாள். நான் அறிந்தவரையில் மனிதர்கள் இயற்கையில் மென்மையானவர்கள். வாழ்வும் சுற்றமும் கடுமையாக்கலாம் அல்லது இன்னும் மென்மையாக்கலாம். தாயும் தந்தையும் இரண்டாவது வகையினர். அவர்கள் இதுவரை கடுமையான வார்த்தையோ செயலோ செய்யாதது என்னை வியப்பில் ஆழ்த்தியது. இன்னும் அந்த வியப்பு இருக்கிறது.

பள்ளியால வந்தவள் படலையை தாண்டும் வரை சாதாரணமாகவே இருந்தாள். திடீரென்று அடித்து விழுந்து ஓடி வந்தவள் என்னை தொட்டு குளறி அழுதாள். அதுவரை அந்த ஒருமாதமும் அப்படி அழுது நான் பார்க்கவில்லை. எனது வலியை விடவும் அவளின் அழுகை என்னை காயப்படுத்தியது. காலை ஒன்பது மணியளவில் தம்பிக்காரன் எனது கிளை ஒன்றை முறித்துவிட்டான். இருந்த மூன்று பிஞ்சு கிளைகளில் ஒன்றின் காலம் முடிந்துவிட்டது என்று நானும் பேசாமல் இருந்து விட்டேன். இழந்ததை நினைத்து வருந்தும் மனநிலை எனக்கில்லை. ஆனால் அவளின் அழுகை எனது மன இறுக்கத்தை தவிடு பொறியாக்கியது. என்னையே இழந்ததை போல உணர்ந்தேன். எனக்கு நீர் ஊற்றுவது தனது உரிமை என்று மற்றவர்கள் அதில் பங்கெடுக்க விடாதவள் அந்த உரிமையில் தம்பியையும் தாயையும் வசை பாடியது இன்னும் என் காதுகளில் ஒலிக்கிறது. மனிதர் பாசத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பை சக மனிதர்கள் செல்லப்பிராணிகளுடன் மட்டும் இல்லை என்னை மாதிரி செடிகள் மரங்களுடனும் பகிர்ந்து கொள்ளுவார்கள் என்ற உண்மை புறப்பட்டது அப்போதுதான்.

---

முதல் நாள் மாதிரியில்லை விட்டு விட்டுத்தான் செல் வீச்சு நடந்தது. சிலர் வீடுகளுக்கு திரும்பி எடுக்க கூடிய சாமான்களை கட்டிக்கொண்டு வெளியேறினர். சிலர் தமக்குள்ள நம்பிக்கையை தாக்குப்பிடிக்க உரத்த குரலில் பக்கத்து வீட்டுக்காரருடன் பேசிக்கொண்டே தமது உடுபுடவை பாத்திரம் பண்டங்களை சைக்கிள்களிலும் வண்டிகளிலும் கட்டிக்கொண்டு இருந்தார்கள். ஒருதடவையில் ஐந்து அல்லது ஆறு செல்கள் வரிசையாக வந்து விழும் சத்தம் காதை செவிடுபடுத்தியது. சில நூறு மீட்டர் தூரத்தில் விழுவதை யூகிக்க முடிகிறது. காலை 8 மணியளவில் ஒரு குண்டு வயலில் விழுந்தது. அதை தொடர்ந்து வந்தது என்னில் விழும் என்று கனவிலும் நினைக்கவில்லை. இவ்வளவு அண்மையென்பது இன்னும் ஒரிரு நாட்களில் இராணுவம் இந்தஇடத்துக்கு வந்துவிடும் போல. இல்லாட்டி இயக்கம் திருப்பி அடிச்சு கலைக்கவேணும். அன்றும் விதி விலக்கில்லாமல் ஆட்கள் இறந்திருக்க வேண்டும் அல்லது இரத்தமும் சதையுமாக காயமோ முறிவோ ஏற்பட்டிருக்கும். அழுகைகளும் ஒப்பாரிகளும் கேட்கத்தான் செய்தது.

எனது பருத்த கிளை அதுதான் ஊஞ்சல் கட்டியிருந்த கிளை அடியோடு முறிந்து விட்டது. வலிகள் எப்போதும் பொதுவானது தான். நான் என்வலியை வெளியில் சொல்லாமல் உள்ளே அழுகிறேன். யாரோ முகிலனை கூப்பிடுவது கேட்கிறது. யாரென்று தெரியவில்லை. பக்கத்து வீட்டு மாணிக்கத்தாராகத்தான் இருக்கும். அவரின் குரல் இப்போது சற்று கேரியே கேட்டது. பாவம் அவரும் சாமான்களை எடுக்க வந்திருக்கவேண்டும். பக்கத்தில் இன்னும் நாலு சனம் இருப்பதை உறுதிசெய்ய வேண்டிய சூழல். முகிலனின் பதில் கிடைக்காதது அவரை தொந்தரவு செய்யவில்லை. மனதுக்கு ஒரு உறுதுணை போதும் என்று நினைத்திருக்கலாம். முகிலன் அவருடன் வந்திருக்கலாம். வரும் வழியில் அவரை கண்டிருக்கலாம். வயதான மனிதர் பலதடவை இந்த வீட்டுக்கு வந்து முகிலனுடன் பேசியது எனக்குத் தெரியும். நல்ல நட்பும் பழக்கமும் இருவருக்கும் இடையில் இருந்ததால் நானும் அதை பெரிதுபடுத்தவில்லை. உடைந்த கிளையின் காயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து சிறிது நேரத்தில் சீழ் வழியத்தொடங்கிவிட்டது.

மாலை நாலுமணியளவில் செல்வீச்சுகள் அடங்கி மயான அமைதி நிலவியது. மக்கள் வசிக்காத பிணங்களின் வாசஸ்தலங்கள் மயானங்கள் என்றுகூறுவது ஒருபுறம் இருக்க தொந்தரவான அமைதிக்கும் இந்த அடைமொழி சேர்ந்துவிட்டது.

எனது செவிட்டில் அறைந்த மாதிரி அடித்து அவள் அழத்தொடங்கினாள். சற்றுமுன் படலையை தாண்டி வரும்போது அவளை பார்த்தனான். வதனி இரண்டாவது தடவை பதறிக்கொண்டு வந்தாள். அப்படி வந்தவள் என்னை பார்த்த பார்வையில் கவலையை விடவும் அதை மீறிய கோபமே வியாபித்திருந்தது. மிகுந்த களைப்பு இரண்டு நாட்கள் யாரோ ஒருவரின் வீட்டில் தங்கியிருந்ததால் போதிய உணவு உறக்கம் இல்லாதது அவள் முகத்தில் தெரிந்தது. எனது பருத்த கிளையொன்று முறிந்து கிடந்தது. அதே வலி வெளியில் சொல்லமுடியாத வலி. காற்றில்லாத தூக்கம் முட்டிய நாள். வார்த்தைகள் வராத அழுகை மட்டும் அதுவும் அவளின் அழுகை மட்டும் அந்த முத்தத்தை நிறைத்திருந்தது. அவளுக்கு சத்தமாக அழத்தெரியாது. ஆனால் அழுகிறாள்.

கடைசிவரை சடைத்திருந்த கிளையை இழந்த துக்கத்தை விட அவளின் கவலையை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. காரணத்தை தேடிய எனக்கு இரண்டு சோடி செருப்புகளும் முகிலனின் சைக்கிளும் மட்டுமே தெரிகிறது அந்த சடைத்த கிளையின் மறைப்புகளில் இருந்து. காலையில் இருந்து அவர்கள் நீண்ட உறக்கத்தில் இருக்கவேணும். நான் அவர்களை அவதானிக்கவில்லை. எனக்கு இருந்த வலி அவர்களை மறைத்துவிட்டது என்ற குற்றவுணர்வு மட்டும் தான் எஞ்சியிருக்கிறது.

என்னை வருடிய பட்டுப்போன்ற கைகள் இப்போது அறைந்துகொண்டிருக்கிறது. இனி ஒருபோதும் வருடாது கைகளால் மட்டும் இல்லை மனதாலும்தான்.

**தீம்புனல் , 01 ஐப்பசி 2022)**

---

சிறுகதை என்பது சின்னனாக எழுதுவது அல்லது பெரிதாக எழுதுவது என்பதல்ல பிரச்சினை. சிறுகதையானது ஒரு வரியிலும் இருக்கலாம் இருபத்தொன்பது பக்கங்களிலும் இருக்கலாம். இரண்டு அல்லது மூன்று பாத்திரங்களோடு கதைக்கான சம்பவம் நகர்ந்து செல்லவேண்டும். அப்போதான் சம்பவம் சிறுகதையாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு தடவைகள் ஒரு மணித்தியால இடைவெளியில் குண்டுகள் வீசப்பட்டிருக்க வேண்டும். அந்த விமானங்களின் சத்தத்தை வைத்தே புக்காறாதான் என்பது புனிதனுக்கு தெரியும். இடைத்தர அளவான விமானங்கள் அதிகம் வேகமாக பறக்காது. ஆறுதலாக வட்டமடித்து குண்டு வீசும் போது மட்டும் சற்று கீழ் இறங்கி தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை கச்சிதமாக முடிக்கும்.

சோடியாக வந்து பேசிப் பறைஞ்சு தலா ஆறு குண்டுகளை வீசியதை எண்ணிக் கொண்டு கிடந்தவன் அதிர்வுகளை வைத்து மிருசுவில் பக்கம் என்று கணித்தான். அண்ணாந்து படுத்திருந்து தலையை சரித்து ஜன்னல் இடைவெளியில் வானத்தை பார்த்தான். தெளிந்த வானத்து நட்சத்திர சிமிட்டல்களை இன்று ரசிக்கும் மனநிலை வந்துவிட்டது.

புனிதனுக்கு மெல்லிய கரும் தேகம். ஆனால் தைரியம் அதிகமாக இருந்தது.

# பெட்டிக்கடை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரின் எள்ளி நகையாடல் மத்தியில் பெட்டிக் கடைக்கு இடம் தேடி அந்த இடத்தை சாவச்சேரி பிரதான சாலையில் கண்டுபிடித்தான். அது அவனுக்கு பரிச்சயமான தொழில்.

செய்யும் தொழிலால் அவனுக்கு உறுத்தல் சிறிதும் இல்லை. சில இறப்புகளும் புதிய பிறப்புகளுக்கு அடிநாதமாக அமைந்து விடும். பழமை இறந்து புதுமை பிறப்பது போல.

கடைக்கு நான்கு மாத வாடகை கட்டாமல் தொக்கி நிக்கிறது. கடை உரிமையாளர் வெளிநாடு சொன்னால் கேக்க கூடிய மனிதர் பரவாயில்லை. ஆனால் இருக்கிற வீட்டுக்காரருக்கு தவணை சொல்லேலாது. ஆள் சரியான கறாள் பேர்வழி. என்ன பாடுபட்டும் மாதக் கடைசியில் கொடுத்துவிடுவான். இந்த பிரச்சனையில் துணிமணி எடுக்கிறதையும் தள்ளி வைத்திருந்தான். இப்பதான் தீபாவளியும் வந்து போனது. ஆனால் மனைவி ரேகாவுக்கு நிலமை தெரிந்து எதுவும் கேட்கவில்லை. மகன் ஆதிக்கு சாவச்சேரி சந்தையில நடைபாதையில் குவித்து வித்தவனிடம் மலிவா உடுப்பு வாங்கியிருந்தான்.

கடும் வருத்தக்காரரும் அவசர சிகிச்சை பிரிவுக்கும் சனம் யாழ்பாணம் பெரியாஸ்பத்திரிக்குதான் போகும். அங்கேயே பக்கத்தில் சில பெட்டிக்கடைகள் இருப்பதால் இவனுக்கு சாவச்சேரியில் பெரிதாக வியாபாரம் நடக்காது. வயதானவர்கள் போனால்தான் உண்டு. ஆனால் இப்படி செல்லடி விமான குண்டு வீச்சு நடந்தால் வருமானம் கொட்டும்.

அந்த சத்தம் கேட்ட பிறகு அவனுக்கு தூக்கம் வரமறுத்தது. பக்கத்தில் தனக்கு மேல் ஒருகையை போட்டபடி கிடந்த ஆதியின் மெல்லிய குறட்டை கீச் என்ற ஒலியை எழுப்பியது. சளி கட்டியிருக்க வேணும். முந்தைய நாள் பள்ளி விடுற நேரம் மழை தூறினது. இலேசா நனைந்தவனை தோயவாக்க சொன்னவன். ரேகா தடிமன் வந்திடும் வேண்டாம் என்று தடுத்துவிட்டாள். அடைமழையில நனைந்தால் பரவாயில்லை ஆனால் தூறல் ஆபத்து என்று எவ்வளவு சொல்லியும் கேக்காத அவள் மேல் கோபம்தான் வந்தது.

நேற்று கடை திறக்கேக்க பக்கத்து கடை துரையர் கேட்டது இப்பவும் நினைவிருக்கு.

"என்ன வர வர பிந்தி திறக்கிறா? வேளையோடு ஆக்கள் வந்தால் எண்டைதான் கேப்பாங்கள். நான் சுத்தமா சாம்பிராணி போட்டு மஞ்சள் தெளிச்சு கடை திறந்து வச்சிருக்கிறன். இதெல்லாம் அரியண்டம்." என்று கடுப்பாக சொன்னார்.

துரையர் ஆச்சாரம் கூடி ஆள். வயசு அறுபத்தேழு. பலசரக்கு கடையென்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவாடு விக்கமாட்டார். நெற்றி நிறைய விபூதி பூசி சந்தானப் பொட்டு வைச்சு முகம் பளிச்சென்று இருக்கும். பஞ்சு போல நரைத்த தலைமுடிக்கு போட்டியா இமைகள் கூட வெளிறிவிட்டது. மெல்லிய வாடலா இருந்தாலும் நல்ல சிவலை. கலர் சாரம் கட்டாமல் வெள்ளை வேட்டி அரைக்கை சேட்டு அதுவும் மத்தியானம் வெக்கை கூடினால் சேட்டை கழட்டி வைத்துவிட்டு வெறும் மேலோடதான் வியாபாரம் பார்ப்பார். கழுத்தில் சின்னி விரல் அளவில் அச்சரக்கூடு பளிச்சென்று தொடங்கும்.

புனிதன் வாடகைக்கு எடுக்க முன்னம் கடை உரிமையாளர் வெளிநாடு போகும் வரை மோட்டார் சைக்கிள் உதிரிபாகங்கள் விற்றவர்.

துரையருக்கு அப்போதே அவர்களிடம் பிரச்சினைகள் வாய் தர்க்கங்கள் இருந்தது. இளவட்ட பெடிகள் மோட்டார் சைக்கிளில் முறுக்கி கொண்டு கடைக்கு வாறதும் முகப்பில் நின்று தம் அடிப்பதும் போற வாற குமார் பிள்ளைகளுடன் சொறியிறதும் துரையருக்கு பிடிக்கவில்லை. சண்டை போட்டு பார்த்தார் சரிவரவில்லை. காவல் துறையில் என்றி போட்டு தண்ட பணம் கட்ட வைத்ததால் அதுக்கு பிறகு கடை உரிமையாளர் வாசலில் பலர் கூடுவதை தவிர்த்தாலும் துரையரின் நச்சரிப்பு தொடர்ந்தது.

இதுக்கு முடிவுகட்டி பழிவாங்க முடிவெடுத்து விட்டார் அந்த உரிமையாளர் போலும். பலர் கேட்டும் கொடுக்காமல் புனிதன் கேட்ட பெட்டி கடைக்கு ஒப்புக் கொண்டு வெளிநாட்டிற்கு போய் விட்டார்.

துரையர் நேற்று கேட்டதும் புனிதனுக்கும் தான் சோம்பேறி ஆகின உணர்வு மெல்ல எட்டிப்பார்த்தது. ஒரு மாசத்துக்கு முன்னம் அடிச்சு வச்ச பத்து பெட்டியில இப்பவும் ஆறு விலைப்படாமல் கிடக்கு மிச்சமா. அவனுக்கு புதுசா செய்யவும் மனமில்லை.

விடிய சில மணித்தியாலங்களுக்கு முதல் அயர்ந்து போனான்.

புனிதனுக்கு வவுனியாதான் சொந்த இடம். அனாதை. சின்ன வயதில் இருந்தே யாரோ ஒருவரின் பெட்டி கடையில் வேலை பழகியிருக்கிறான். நாட்டு பிரச்சினைகள் வவுனியாவை விட்டு வெளியேறி சாவச்சேரில் சந்தையில் மரக்கறி கடைகளில் எடுபிடி வேலை என்று காலம் கடந்தது.

அருகே இருந்த புடவை கடையில்தான் ரேகாவின் அறிமுகம். அவள் கொஞ்சம் கருப்பு களையான முகம். கண்களில் ஏழ்மையின் சோகம் எப்போதும் இருக்கும். அளவாகவே சிரிப்பாள். சாதாரண சுடிதார் அணிந்தாலும் சுத்தமாகவே கடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேண்டும் என்பது கட்டாயம். வரும் வாடிக்கையாளர்கள் முகம் சுளிக்காமல் நடந்து கொள்வது அவசியம்.

அடிக்கடிகொரு தடவை அந்த புடவைக்கடை வழியே திரியும் புனிதன் தொடக்கத்தில் எதேச்சையாகவே பார்த்தான். மெல்லிய புன்னகையுடன் தொடங்கி வளர்ந்த நட்பு இருவரும் அறியாமலே காதல் என்ற எல்லைக்குள் நுழைந்து விட்டது.

திருமணம் செய்ய முதல் இந்த கடையை பேசி முடித்து முன்பணம் கொடுத்தவனுக்கு அந்த கடையையாலே காதலில் சிக்கல் வந்தது.

ரேகா வீட்டில் எதிர்ப்பு.

"பெட்டி விக்கிறவனை கட்டி எங்கள் மரியாதையை கெடுக்காத" என்றார் ரேகாவின் அப்பா.

"அதில் என்ன பிரச்சினை? எந்த கெட்ட பழக்கமும் இல்லை தெரியுமோ?

"பெட்டி வாங்க வாறவன் பறிகொடுத்த சோகத்தில் இருப்பான். என்ன சந்தோஷம் இருக்கும்? நாலு சனம் எங்கட முகத்தில முழிக்கவே கூச்சப்படும். தயவு செய்து அவனைக் கட்டினால் இந்தப்பக்கம் வந்திடாத" பொரிந்து தள்ளினார் தேப்பன்காரன். மற்ற பிள்ளைகளின் எதிர்காலம் இதனால் பாதிக்கும் என்ற கவலை அந்த ஏழை தந்தைக்கு இருந்ததில் வியப்பில்லை.

கடைசியில் காதல் வென்றது. தன் விருப்பப்படி கலியாணம் கட்டினாள். நகரை விட்டு தள்ளி மட்டுவில் பக்கம் ஒதுக்காக இருந்த சாதாரண இரண்டறை வீடு வாடகைக்கு எடுத்து வாழத்துவங்கினார்கள்.

ஆதி பிறந்த பிறகும் சில வருடங்கள் வியாபாரம் பரவாயில்லை. பிறகு சமாதான பேச்சுவார்த்தை என்று இழுபட்டது. இப்பதான் திரும்ப சண்டை தொடங்கி நடப்பது புனிதனுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

பொழுது விடிந்ததும் விடியாததுமா எழுந்தவன் முகம் கழுவி சாமி படத்துக்கு வைக்க மொட்டவிளாதா செம்பரத்தை பூக்களை புடுங்க தொடங்கினான். படத்துக்கு வச்சு கும்பிட்டது போக மிச்ச பூக்களை பிளாஸ்டிக் பையில் போட்டு வைத்தான். இந்த சச்சரவுகள் ரேகாவையும் எழுப்பிவிட்டது. அவளுக்கும் புரிந்திருக்கும். சில வேளை புனிதன் இப்படி கெதியா வெளிக்கிடும் காரணம். கதிரையில் இருந்தவனுக்கு தேத்தண்ணியை குடித்தாள்.

"என்ன ராத்திரி சத்தம் பலமா கேட்டது. யாவாரம் நடக்கும் எண்டு நம்புறீங்களோ?" உள்ளூர அவளுக்கு இருந்த ஆசை முகத்தில் தெரிந்தது. வாராத தலை முடிகள் கன்னத்தில் வழிந்து தோடில்லாத காதை மறைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதான் வேளைக்கு திறக்கவேணும். காலங்காத்தால வாறவங்கள் ஆளில்லாட்டி திரும்பி யாழ்பாணம் போயிடுவாங்கள்" புனிதனின் கவலை வார்த்தையில் இருந்தது.

நன்றாக விடிந்து விட்டது. துரையர் பாண் மற்றும் நாளிதழ் வியாபாரத்தில் மும்முரமாக இருந்தார். பள்ளிக்கூட பிள்ளைகள் வரிசை கட்டி நடந்து கொண்டிருந்தனர். தங்களுக்குள் அளவளாவும் அவர்களில் சத்தமும் வாகனங்களின் இரைச்சலும் புனிதனுக்கு இன்று சந்தோஷ ஒலியாக இருந்தது.

கடையை திறந்து கூட்டி படத்துக்கு பூக்களை அடுக்கினான். மூன்று சாம்பிராணி குச்சிகளை மூட்டி செருகி விட நறுமணத்தில் அவன் உடல் சிலிர்த்தது. அவனது பிரார்த்தனை மனிதனாலும் ஏன் கடவுளாலுமே ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கவேணும்.

உள்ளிருந்து ஒவ்வொரு பெட்டியா வெளியில் இழுத்து வந்து முன் பக்கத்தில் அடுக்கினவனை ஓரக்கண்ணால் பார்த்தார் துரை.

"நெடுகலும் இப்பிடி வந்திடு எனக்கு அலுப்பு குடுக்காமல். கண்ட கண்ட துகளில முழிக்கவேண்டி இருக்கு விடிஞ்சா" என்றார். வெளியில் வந்த துரையர் முகத்தில் அருவருப்பு கலந்த மகிழ்ச்சி இருந்தது.

புனிதன் மாலை ஆகுமட்டும் காத்திருந்தான். ஒரேயொரு பெட்டி அதுவும் கனநாளா சேடமிழுத்த கிழவி போயிட்டுதாம் என்று எடுத்துக்கொண்டு போனாங்கள். புனிதனும் போற வாற ஆக்களிட்ட விசாரிச்சான். எல்லா குண்டுகளும் வயல்வெளிகளில விழுந்ததாம்.

எதிர்பார்ப்பு வீணான வெறுப்பு அவனின் கண்களில் இருந்தது. அடிக்கடி பிடரியை சொரிந்து கொண்டே நேரத்தை கழித்தான். ஏமாற்றத்தால் வந்த சோர்வு. அதிகம் எதிர்பார்க்கக் கூடாது ஏதோ கடவுள் விட்ட வழி என்று உச்சுக் கொட்டிக்கொண்டான்  மாலை கடையை சாத்திவிட்டு கிளம்பினவனுக்கு எதிர்பார்ப்பு நிறைவேறாத கவலை. அதை பார்த்த துரையரும் நாளை விரும்பத்தகாத முழிவியளம் தொடரும் என்ற கவலையுடன் இருந்தார்.

**தீம்புனல் ,19 பங்குனி 2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிப்பிலி

மேற்கு வானம் சிவந்திருந்தது. பனைகளின் ஊடே அடிவாரத்தில் கதிரவன் இறங்கிக் கொண்டிருந்த மாலை மங்கிய நேரம். சிதிலம் அடைந்த கேணிக்கரையில் வெளிறிய ஆறங்குல தாடியுடன் அந்த முதியவர் இருந்தார். இதுவரை காலமும் நான் அவரை கண்டதில்லை. தெரிந்தவர்கள் சொல்லித்தான் எனக்கு தெரியும். கணேசர் செக்கலில் இந்த கேணிப்படியில் இருந்து சுருட்டு பத்துவார் என்ற செய்தி.

சுருட்டு புகையை சீராக ஊதுகிறதுடன் கேணியையும் தூரத்தில் வயல் தாண்டி அப்பால் இருக்கும் பனைகளையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தார். தோற்றத்தை பார்த்தால் என்னவோ இவராகதான் இருக்கவேண்டும் என்று உள்மனம் சொன்னது. அவருக்கு பத்து அடிகள் தள்ளி நானும் அமர்ந்தேன்.

“நண்பனை எரிச்சிட்டு வந்திருக்கிறா போல?” தாடிக்கும் மீசைக்கும் இடையில் புதைந்து திருந்த வாயில் புகையை உமிழ்ந்த படி கேட்டார்.

கணேசர் என்றால் தெரிந்திருக்க வாய்ப்பிருக்கு என்பதில் அவனுக்கு சந்தேகம் இல்லை. எல்லாம் அவரின் பார்வையில்தானே நடக்கிறது என்ற நம்பிக்கை இருந்தது.

“ஓம் கனசனம். மூண்டு மணி ஆகிட்டு எடுக்க. நீங்கள் கணேசர்தானே?” எதுக்கும் நிச்சயப்படுத்தி கொள்ள வினவினேன்.

“பேர் தெரிஞ்சிருக்கு நல்லது. அது நான்தான்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் வருவதை கேள்விப்பட்டிருக்கிறன். இண்டைக்கு தான் முதன் முதலா பார்க்கிறன்".

இரண்டு கால்களையும் தொங்க விட்டு இருந்தவர் இப்போ வலது கால் முழங்காலை மடக்கி இருக்கும் முதல் படியில் பாதத்தை தூக்கி வைத்தார்.

இடுப்பில் இருந்த பச்சை நிற சாரம் கொஞ்சம் பழுப்பேறியிருந்தது. மேற்சட்டை அணியவில்லை. தோளில் ஒரு சால்வை மட்டும் இருந்தது. சுருட்டை இப்பதான் மூட்டியிருக்க வேண்டும் முழு நீளமும் விரல் இடுக்கில் நின்றது.

அவரின் பார்வை தாமரை மொட்டுகளை எண்ணுவதை போல் உணர்ந்தேன். சுற்றிவர தூர்ந்திருக்க கேணியின் நடுப்பகுதியில் இருந்த நீர்ப்பரப்பு முழுதும் தாமரை இலைகளும் பாசியுமே படர்ந்திருக்கும். இடையிடையே கூம்பிய பூக்கள் சூரியனை வழியனுப்பியதும் மீண்டும் மொட்டுகளாகிவிட்டன. ஓரளவு இருண்டு விட்டாலும் அருகில் இருந்த மின்குமிழ் வெளிச்சம் அதை வெளிக்காட்டியது.

"கண்கள் வீங்கிய மாதிரி இருக்கு நண்பன் போனதுக்கு நல்லா அழுத்திருப்பா போல?" பொடிவைத்து கேட்பது மாதிரி இருந்தது.

"பழைய நினைவுகள், அவனுடன் திரிந்தது, கதைத்தது, உண்டது இதெல்லாம் பகல் முழுக்க அழுது கழிச்சிட்டன்" என்றேன்.

கேணிக்கு அந்த பக்கம் நெல் வயல்கள் மெல்லிய குளிர் காற்று முகத்தில் அடித்தது. அதனுடன் கலந்த கணேசர் அடிக்கும் புகையிலை வாடையும் என்னை உறுத்தியது.

கேணியின் இந்தப்பக்கம் இருந்த மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோவில் காண்டா மணிச் சத்தம் கணீர் என்று காதை பிளந்தது. தலையில் மூன்று குட்டு குட்டிவிட்டு அவரை பார்த்தேன். என்னையே பார்த்தவர் நக்கலா சிரித்தார். எனது அறியாமையை எண்ணும்போது அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது.

பின்னேர பூசை தொடங்கி விட்டது.

"நான் வெளியில் இருக்கிறேன். உள்ளே பூசை நடக்கிறது. இது முரண் நகைதானே?" பெரிதாக சிரித்ததால் புகை புரையேறி சிறிதுநேரம் இருமினார்.

"அவர்களுக்கு தெரியவில்லையாக்கும்" என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கு தெரிகிறதே?"

"எல்லார் பார்வையும் ஒன்றில்லைதானே?"

அதை கேட்டு புன்முறுவலுடன் "உனது நண்பனை பற்றி சொல்லு கேப்பம்" என்றவர் ஒரு நீளமான இழுவை இழுத்து மேல் நோக்கி ஊதினார்.

"சின்ன பெடிகளாக இருக்கேக்கயே நான் அவனுடன்தான் இந்த வீதில அதிகம் நடந்திருக்கிறன் தெரியுமோ. நீங்கள் இருக்கிற கேணிபடியில் ஊர் புதினம் பள்ளிக்கூட கதைகள் எண்டு இரண்டு பேரும் அலம்பித் தள்ளியிருக்கிறம். ஊர் பெடிகள் பெட்டைகளின்ட காதல்கள் அலசப்பட்டதும் இதிலதான். மனம் இளக்கமாக இருந்த தருணங்கள். திருவிழா காலம் குலம், லிங்கம் ஐஸ்க்ரீம் கடைகள் விசேஷம். ஸ்பெஷல் குடிக்க அதுவரைசேர்த்து வைத்த காசு ஐஸ்போல தண்ணியா கரையும். இப்ப கட்டாந்தரையா கிடக்கு இந்த வீதி. அப்ப மூஃடு படிக்கேக்க எண்டு நினைக்கிறன். திருவிழாவுக்கு ரெண்டு கிழமைக்கு முதல் சுத்தி மணல் பறிப்பது தெரியும்தானே. அதை பரவ இரவிரவா நிண்டு கொண்டலடிச்சம்."

"ஒரே பம்பல் எண்டு சொல்லு. வருங்காலத்தில இந்த கேணியையும் மூடி கோயில இடிச்சு கட்டுவாங்கள்" என்று சொல்லி இருமி காரி துப்பினவர் "அப்ப அதுக்கு பிறகு வேலை, காதல், கலியாணம் என்னமாதிரி?" அவர் ஆர்வமாக கேட்டு சுருட்டை உன்னி இழுத்தார். அது அணைந்திருக்க வேண்டும். மீண்டும் பற்றவைத்தார்.

"சில நேரம் அந்த பனைகளூடு தெரியும் பிப்பிலி சுடலையில பிணம் எரியுறது எங்களின் பேச்சை வேறு திசைக்கு மாத்தும். எனக்கு எப்பவும் ஒரு சந்தேகம் இருந்தது. கோயில் வாசலில் நின்று பார்த்தால் பிப்பிலில எரியும் சவம் தெரியும். வேண்டுமெண்டு இப்படி செய்தார்களோ? தற்செயலாக அமைந்ததோ? என்ற கேள்வி. நிலையாமை மனிச வாழ்வு என்ற இறுக்கமும் பேச்சில தொத்திடும். படிச்சு முடிஞ்சதும் நான் அப்பரோட மேசன் வேலைக்கு போனான். அவன் காந்தோரில போஸ்மன் வேலை செய்தான் அதனால காணுறதும் குறைவு."

"சுடலை முன்னாலை இருந்தாலோ விபூதி பூசினாலோ மனுஷனுக்கு ஞானம் பிறக்கும் எண்டது சும்மா பம்மாத்து. ஆசையோடு தெரியும் விலங்குகள் உதை பெரிதுபடுத்தாது. அப்ப வெள்ளிகிழமையிலதான் இந்தப்பக்கம் வாறது போல?" தொடர்ந்து கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம். ஆனால் நாலு மாதத்துக்கு முன்னம் திடீரென்று அவன் வாறத நிறுத்திட்டான். ஃபோனும் ஆஃப் பண்ணி இருந்தது. வீட்டுக்கு போய் விசாரிச்சு பார்த்தன். தாயும் தேப்பனும் சரியான பதில் சொல்லேல. ஏதோ மறைக்கிற மாதிரி எனக்குப் பட்டது."

"ஏன் ஒளிச்சுட்டான்? எங்கேயாவது வெளிநாடு போயிட்டானோ?"

"நானும் தெரிந்தவங்களிட்ட விசாரிச்சன். எதுவும் தெரியேல. ஒரு விசயத்த சொல்ல மறந்திட்டன்."

"என்னது?"

"அவன் ஒரு பெண்ண காதலிச்சவன். கொக்குவிலில பள்ளிக்கூட டீச்சர். பெயர் மலர். நான் மலரிட்டையும் அவனை பற்றி கேட்டன். தன்னை பார்க்க வழமையா வாறவன் இப்ப கொஞ்ச நாள் வரவில்லை என்றும் சொன்னாள். கடைசியாக அவன் அனுப்பின மெசேஜ்யையும் காட்டி அதோட என் தங்கச்சிக்கு நடந்ததை பற்றியும் விசாரிச்சாள்.

கடைசிவரை அவனைப்பற்றி எந்த துப்பும் இல்லை. எனக்கு பெரிய மர்மமாகவும் நம்புவது கடினமாகவும் இருந்தது. இந்த காலத்தில் இப்படி மனிதர் தொடர்பு இல்லாமல் தனித்து இருப்பது கஸ்டம் என்று என் உள்ளுணர்வு சொல்லிக்கொண்டிருந்தது.

முந்த நாள் இரவுதான் ஒரு வானில அவன் உடம்பை வெறும் ஜட்டியோட கொண்டந்து வீட்டுக்கு முன்னாள் போட்டிருக்கிறாங்கள்." என்று நீண்ட வரலாற்றை சொல்லி முடித்தேன்.

எனது முகத்தில் தெரிந்த மாற்றத்தை பார்த்தவர், "வேறேதோ சொல்லாமல் மறைக்கிறாய். உன் தங்கை என்ன ஆனாள்?" அவருக்கு எல்லாம் தெரியும். நான் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

அவரின் கண்களை பார்த்தேன். அதில் தெரிந்த உஷ்ணம் என்னை சுட்டது.

"அவள் இறந்து ஆறு மாதம் ஆகிது. இறக்கும் போது நாலுமாதம் முழுகாமல் இருந்தது பிறகு அம்மா சொல்லித்தான் தெரியும். நான் அதைப்பற்றி சொல்ல விரும்பல. அவள் அப்பா மாதிரி பொது நிறம். மேல் உதடும் அண்ணமும் பிளந்தே பிறந்தாள். அவன் வேலை செய்த கந்தோரிலதான் வேலை செய்தவள்." எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே பேச முடியவில்லை. நாக்கு தழுதழுத்தது. கையில் இருந்த வெறும் நஞ்சு போத்திலை காட்டினேன்.

"என்னது? கண்ணை துரித்தியபடி கேட்டார்.

"இதில் அரைவாசி மிச்சம் வைச்சிருந்தவள்" என்றேன்.

கணேசர் பெருமூச்சு விட்டபடி கடைசி இழுவை இழுத்து புகையை ஊதி கட்டையை கேணிக்குள் விட்டேறிந்தார். அது கடைசி மூச்சு விட்டு அணைந்தது.

"நம்பிக்கைத்துரோகம்" என்றவர் அதற்கு பிறகு எதையும் கேட்கவில்லை.

இருவரும் பிப்பிலியை தொடர்ந்து பார்த்தோம் எந்த சலனமும் இல்லாமல்.

காற்று கொஞ்சம் வேகமாக வீசியது. இரவு எட்டுமணிக்கு மேல் இருக்கும். நல்ல இருட்டு அந்த பனைகளை மூடியிருந்தது. இதுவரை புகைத்து கொண்டிருந்த நண்பனின் சிதை சுவாலை விட்டு எரிய தொடங்கியது.

மாலை நான்கு மணியில் இருந்து பல மணித்தியாலங்கள் அசைவற்று கேணி கரையில் கிடந்த என்னை சுற்றி பலர் நிற்கிறார்கள். கையில் இன்னும் அந்த நச்சுப் போத்தல் வெறுமையாக இருக்கிறது.

இதையெல்லாம் கோபுரத்தில் இருந்து கணேசர் பார்த்துக் கொண்டே இருக்கிறார்.

**தீம்புனல், 16 சித்திரை 2022**

---

மக்களுக்கான எழுத்து என்பது அவர்களின் ஏழ்மையையோ அல்லது அவர்களிற்கிடையில் உள்ள சாதிப்பாகுபாடுகள் பற்றி எழுதுவதல்ல. ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஒழிந்துகிடக்கும் மனிதம்பற்றி எழுதுவதுதான் மக்கள் சார்ந்த எழுத்தாக இருக்கமுடியும். அவன் வாழ்வியலில் தோன்றும் வறுமையை எழுதுவது அவனைக் கிண்டல் செய்வது போலாகிவிடும். அதைவிடுத்து வறுமையின் பின்னே ஒழிந்துகிடக்கும் வறுமைக்கான காரணத்தை தேடிக்கண்டு பிடித்து அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகளோடு எழுதுவதுதான் மக்கள் சார்ந்த எழுத்தாக முடியும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பு

"வாங்கோ. என்ன சாப்பிடுறீங்கள்? மூண்டு இட்டலியும் தேத்தண்ணியும் சீனி குறைவாய் போட்டு தானே? நீங்கள் வழமையா சாப்பிடுறது எனக்கு தெரியும் எண்டாலும் கேக்க வேண்டியது முறையெல்லே. ஏனெண்டால் இண்டைக்கு இடியப்பமும் இருக்கு ஆனால் உங்களுக்கு இட்டலிக்கு பிறகுதான் மற்றதுகள் . உலகின் மிகச்சிறந்த காலமை சாப்பாடு என்று அடிக்கடி சொல்லுறனீங்கள்"

"இந்த வயசிலையே சீனி குறைச்சு குடிக்க பழகிட்டிங்கள் அது தான் புதினம். இப்பத்த ஆட்களுக்கு உடம்பில கவனம் கூடத்தான். சாப்பாட்டில கட்டுப்பாடு இருக்கவேணும் எண்டுதான் அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு எண்டு சொல்லியிருக் கினம் எங்கட பழைய ஆக்கள். ஏன் நிக்கிறீங்கள் உந்த வாங்கில இருங்கோ."



"நேற்று வழமையா பாண் கொண்டுவாற துரையர் உங்களைப்பற்றி கேட்டவர். நீங்கள் என்னை விட பத்து வயசாவது இளமையாக இருப்பீங்கள் போல இருக்காம். எனக்கு சிரிப்புதான் வந்தது. அதுசரி இந்த வெக்கேக்க நிக்கிற எனக்கு நிறமும் குறைஞ்சு கறாளை வத்திப் போச்சு. நானும் கொஞ் சம் கறுப்பு. கிட்டத் தட்ட ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயசுக்காரர் என்றால் ஆர் நம்புவாங்கள். நீங்கள் யுஃடு வந்தபிறகு எப்பாலும் இருந் திட்டு இங்க கடையில சாப்பிட வந்தீங்கள் ஆனால் இப்ப ஏழு எட்டு படிக்கிற பெடிகளே சாப்பிட வருகிறாங்கள்."

சந்திரனின் கடைக்கு வரும் தினேஷ் கிழமை நாட்களில் தின வாடிக்கையாளர். வீதியில் ஆரவாரம் அதிகரித்துவிட்டது. பாடசாலைக்கு போகும் தொடக்க நிலை மாணவர்களில் இருந்து இடைநிலை அதுதான் சாதாரண தரம் படிக்கும் பிள்ளைகள் அவர்களின் கலகலப்பு பேச்சுக்கள் தான் அதிகம். உயர் நிலை மாணவர்கள் ஒருமாதிரியாக இறுக்கத்தில் முகத்தை வைத்திருப்பது இயல்பாகிவிட்டது. கண்கள் மட்டும் அங்கும் இங்கும் அலைபாய்ந்து கொண்டிருந்தது குயவன் கையில் வழுக்கும் களிமண்ணை போல. தங்களை கடக்கும் எதிர்ப்படும் மாணவிகளை மட்டும் அல்ல இளவயது ஆசிரியர்களையும் பார்த்துத்தான். இதமான இளம் வெயிலில் சாலை பளிச்சென்றிருக்க இடையிடையே செல்லும் உந்துருளிகள் மூலம் புழுதி அந்த வெயிலை மாசுபடுத்திக்கொண்டிருந்தது.

தினேஷ் படிக்கும் போதே சந்திரனுடன் பழக்கம். பழக்கமெண்டால் இந்த கடைக்கு வந்து சாப்பிடும் தேநீர் அருந்தும் பழக்கம் மட்டும் தான். மற்றபடி அதிகம் வம்பளக்கும் வாடிக்கை இல்லை. தினேஷ் கொஞ்சம் திமிர் பிடிச்சவன் என்று நினைத்து சந்திரனும் தனக்கு வியாபாரம் நடக்கட்டும் மேற்கொண்டு விசாரிச்சு என்னத்தை பழகுவது என்று அளவோட இருந்து விட்டான். இப்ப கொஞ்சகாலமா மெதுவா விசாரிக்க தொடங்கிவிட்டான். வயசாகிட்டு என்றதால கூட துணிவு வந்திருக்கலாம். இன்னுமொரு விசயம் தினேசும் அண்மைக்காலமாக தனது சொந்த தகவல்களை அவனுடன் தானாகவே கதைக்க தொடங்கிவிட்டான். படிச்சவன் இப்ப படிப்பிக்கிறான். அவனா வந்து சொல்லுறான். கேட்கும் போது சுவாரசியம் கூடுவதால் சந்திரனுக்கு துணிவும் வந்துவிட்டது.

"துரையர் உங்களைப்பற்றி விசாரிச்சுப் போட்டு ஒரு பெண்பிள்ளை இருக்காம். டீச்சர் தானாம். பேசி முடிக்கலாமோ என்று கேட்டவர். என்ன பள்ளிக்கூடம் போறது மட்டும் வாழ்க்கை எண்டிருந்தால் சரிவராது வயசும் போகுது. கலியாணம் கட்டி கரைசேருற வழிய பாருங்கோ" சிறிய அலுமினிய பானையில் இருந்த இட்டலி மாவை கரண்டியால் துளாவியபடி அவனை பார்த்தான். தட்டில் ஆறு இட்டலியை கரண்டிக்கு ஒன்றாக ஊற்றி அடுப்பில் கொத்தித்துக்கொண்டிருந்த இட்டலிச்சட்டியின் மேல் வைத்து மூடியால் மூடினான். "நீங்கள் பள்ளிக்கூடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற நேரம் அதுதான் உயர்தரம் படிக்க தொடங்கேக்க அம்மா என்னை இந்த கடைக்கு போட்டுட்டு. குறுக்கால போவார் அப்பாவை போட்டதால நான் இப்படியே கடையில கிடந்ததுதான் உங்களுக்கு தெரியுமே"

"உங்களுக்கு தெரியாத இன்னொன்று இருக்கு. அந்த நேரம் நீங்கள் A/L படித்துக்கொண்டிருந்தனீங்கள் என்று நினைக்கிறேன். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இன்னும் சில பெடிகளுடன் காலையில் காணுறனான். நான் கடையை திறந்து வெளிப்பக்கம் பாதையோரம் வேலி பூவரசம் சருகும் இனிப்பு கவரும் பழைய பேப்பர் துண்டுகளை கூட்டிக்கொண்டு நிப்பன். இஞ்ச பாருங்கோ நல்லகாலம் உங்களோட கதைச்சுக்கொண்டே நான் சீனியை அள்ளிப் போடப் பாத்தன்."

"அவன்தான் வதனன் நீங்கள் மறந்திருக்க மாட்டியள். மறந்திருந்தாலும் சிலநேரம் பெயர் சொன்னால் ஞாபகம் இருக்கும். எனக்கு தெரிஞ்ச மட்டில நல்ல பெடியன். உங்களுக்கு மட்ஸ் காரரோட பழக்கம் கூட எண்டதால கொமஸ் படிச்சபெடிகளை அதுவும் இவ்வளவு காலத்தில மறந்திருப்பீங்கள். கிரனைட் கொண்டு திரிஞ்சவன் என்று பிடிச்சுக்கொண்டு போய் ஒருமாதம் விசாரணையில விட்டாலும் பிறகு கொஞ்சநாளில் ஆள காணேல எண்டு தாய் தேப்பன் தேடி தெரிஞ்சதுகள். அந்தநேரம் தெரியும் தானே இடம்பெயந்து போய் திரும்பி யாழ்ப்பாணத்துக்கு இராணுவ கட்டுப்பாட்டுக்க வந்தம். அதுவரைக்கும் இருந்த கட்டுப்பாடு வேற வந்தாப்பிறகு எல்லாமே சனத்துக்கு புதுசாக இருந்தது. புதுசு வியப்பை விட பயத்தை தான் அதிகமா தந்தது. கடையை விட்டுட்டு தென்மராட்சிக்கு போனாலும் திரும்பி வந்தவுடனேயே அம்மா மறுபடியும் திறக்க சொல்லிட்டா. உங்களுக்கு தெரியும் தானே மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோவில் திருவிழா எண்டால் கடைக்கு கூட்டம் வரும். வருடத்தில் அந்த 18 நாட்கள் திருவிழா நேரம் கூட்டம் அள்ளும். மற்ற நாட்களில குறிப்பிட்ட சனம் தான் நீங்கள் ஆசிரியர் ஆனபிறகுதான் என்ர கடைக்கு தொடர்ச்சியா வரத் தொடங்கினீங்கள். வதனன் A/L படிக்கேக்கையே ஒவ்வொருநாளும் வந்தவன். சிலநேரம் நீங்கள் போகேக்க உங்களை காட்டியும் அந்த பெடியன் நல்லா படிப்பான் எண்டு சொல்லுறவன். அதனால அப்பவே எனக்கு தெரியும். அவன் சரியான துணிஞ்ச ஆள். அந்தநேரம் எங்களுக்கும் எவன் ஆயுதத்தோட திரிஞ்சாலும் துணிஞ்சவன் எண்டே நினைச்சிடுவம். எல்லாத்துக்கும் பயம்தான் காரணம் என்றது இப்ப விளங்குது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சட்டினியோட சாம்பாரையும் பக்கமா விடவோ? இல்லாட்டி தனியா சட்டினியோட சாப்பிடுறீங்களோ? புதுசா வைச்சது சுடச்சுட இருக்கும் சும்மாவே சாப்பிடலாம். எதுக்கும் தனியா சட்டினியையும் சாம்பாரையும் தனித்தனியா தாறன். நீங்கள் வேணுமெண்டால் சேத்து சாப்பிடுங்கோ."

"செம்பில தண்ணிய கொடுக்க இஞ்ச ஒருத்தன் இல்லாட்டி எனக்கு நாரி முறிஞ்ச வேலை. வேலைக்கு ஒரு சின்ன பெடியன் நிண்டவன் நேற்று தாய்க்கு ஏதோ மூச்செடுக்க ஏலாத வருத்தம் எண்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனவனாம். இண்டைக்கு வரமாட்டான் நான்தான் எல்லாத்தையும் பாக்கவேணும். கவனம் தேத்தண்ணி சுடுகுது தட்டி ஊத்துப்படாமல் தள்ளி வைக்கிறன். உங்களுக்கு சூடா குடிச்சால் தான் பொச்சம் தீரும் எண்டனீங்கள். ஒண்டு சொல்லவேணும் சூடா குடிக்கிறது உண்மையில உடம்புக்கு கூடாது. உங்களுக்கு தெரியாதது ஒன்றுமில்லை. அதுவும் வெக்கையா கொதிக்கிற இந்த மண்ணுக்கு உடம்புக்கையும் சூடா ஊத்தக்கூடாது."

"சொய், இஞ்ச மிச்ச சொச்சங்களை தின்ன வாற காகங்களும் அடுகொடையா உந்த மதிலிலயே இருந்து பீச்சுதுகள். மெல்லிய கம்பி ரெண்டு வரி ஓடி விட்டால் நல்லம் எண்டு பார்த்தால் பக்கத்து வீட்டுக்காரர் ஒத்து வருதுகள் இல்லை. நான் ஏதோ மதில பிடிக்கப்போறன் எண்ட பயம். முந்திதான் நோட்டீஸ் ஒட்டுறவங்கள் குத்தகைக்கு எடுத்தமாதிரி றோட்டுக்கரை மதில்களை சொந்தம் கொண்டாடுவாங்கள். ஒண்டுக்கு மேல ஒண்ட ஒட்டி மதிலும் அலங்கோலமா கிடக்கும். இப்ப மதில்காரர் நேர பொலிஸிட்ட போகுதுகள் என்ற பயம் வந்திட்டு."

"பிறகு வதனன் தேப்பனையும் தாயையும் காணேல. நீங்கள் பேராதனையில் பிஸிக்கல் சயன்ஸ் படிக்க போயிட்டீங்கள் என்று கேள்விப்பட்டனான். அதுக்கு பிறகு வழமையா இஞ்சவாறதால கொஞ்சம் உரிமையோட கேட்கிறன். என்னை பாருங்கோ கலியாணம் கட்டி மூத்த பெட்டை பெரிசாகிட்டாள். மற்ற இரண்டு வாலுகளும் படிக்குதுகள். நீங்கள் உடுவிலோ கந்தரோடையோ எண்டு சரியா தெரியாது. கலியாணம் கட்டேல எண்டத போன கிழமை நீங்களே சொல்லேக்க உண்மையில நானே திடுக்கிட்டு போனன். நிறத்துக்கும் வடிவுக்கு உத்தியோகத்துக்கும் என்னகுறைச்சல்?"

"சட்டினி முடிஞ்சுதா இன்னும் ஒரு இட்டலியும் வைக்கிறன். தனியா இருக்கிறதால உடம்ப கவனிக்க மாட்டீங்கள். சுவர் இருந்தால் தான் சித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையலாம் எண்டு என்ர அப்பர் அடிக்கடி சொல்லுவார். அப்பரும் சரியான திடகாத்திரமான ஆள் கொஞ்சம் வீராப்பு கூடின மனுஷன். வீராப்பு இருந்தால் தானே புரட்சியும் துணிவும் வரும் போல. நான் ஒரு பயந்தான் கொள்ளி. சிலநேரம் அம்மாவே என்னை பேசேக்க வாய் தடுமாறி சொல்லிக்காட்டும். கொப்பற்ற கால்தூசிக்கும் நீ வரமாட்டாய் என்று. நான் சின்னன் எண்டதால அம்மாவும் மறைச்சிட்டு. அவரும் எதோ ஒரு இயக்கத்துக்கு பின்னால திரிஞ்ச மனுஷன் அந்த கடுப்பில மாற்று இயக்கம் ஒன்றுதான் போட்டுத்தள்ளினதா அரசல் புரசலா கேள்விப்பட்டனான். அம்மாவுக்கும் தெரியுமோ தெரியாது. இல்லாட்டி எனக்கு தெரிய கூடாது எண்டு மறைச்சுதோ தெரியல. ஒற்றைப்பிள்ளை எண்ட பயம் இருந்திருக்கும் தானே."

"இதைப்பார் ஏதோ சொல்ல வந்திட்டு என்ர விசர் கதைகளை சொல்லிக் கொண்டிருக்கிறன். கோப்பைய உதிலையே விடுங்கோ. முந்தின மாதிரி இல்லைதானே. இப்ப நீங்கள் மனசுவிட்டு கதைக்கிறதால மற்ற ஆக்கள் செய்யவேண்டியதுகள நீங்கள் செய்யவேண்டாம்."

"டேய் நாறல் பயலே கைகழுவுற சிங்குக்கு துப்பாதையடா. உன்ர கொப்பரே வந்து கைவைச்சு கழுவுறது. உனக்கு எத்தின தரம் சொல்லிட்டன்"

"உவன் உப்பிடித்தான். பாவம் என்று காலமேல சாப்பாடு கொடுக்கிறனான். இந்த வருஷம் O/L எடுக்கப்போறான். வழமையா வெறு வயித்தோட போனவன். அண்டைக்கொருநாள் பள்ளிக்கூடம் விட்டு போகேக்க உதில பாங்குக்கு முன்னால மயங்கி விழுந்திட்டான். உவனோட வந்த இன்னொருத்தன் சொன்னான் பள்ளிக்கூடத்திலும் பலதடவை விழுந்திருக்கிறான் என்று. சரி விடியவில வந்து சாப்பிட சொல்லிட்டன். கஸ்டம் எண்டால் துப்பரவா இருக்கக்கூடாது என்றில்லை தானே. இப்படித்தான் என்னட்ட அடிக்கடி பேச்சு வேண்டுறவன்."


"முறைக்காமல் வெளிக்கிடு பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்செல்லே"

"அவன்ர கதைய விடுங்கோ. துரையர் நாளைக்கு விடிய வருவார். கேட்டால் என்ன சொல்லுறது? பொம்பிள படத்த வாங்கி வைக்கவே? இதுக்கும் சிரிப்பு தானா? இந்தாங்கோ மிச்சக்காசு."

**தீம்புனல் ,10 மார்கழி 2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாலாட்டு

வருடம் தவறாமல் இந்த திக தியில் மாலையில் நினைவி டத் துக்கு வரும் மற்றவர்களுக்கு அந்த வயதான பெண்மணியை மறந்திருங்க வாய்ப்பில்லை. நினை வேந்தலுக்கு கூடும் மக்களில் அவர் மட்டும் வித்தியாசமாக தெரிவார்.

இது ஜப்பான் ராணுவத்தால் கொலை செய்யப்பட்டவர்களின் நினைவாலயம்.

அவரின் பெயர் மேடம் லிம் யி சுவன். எண்பத்தைந்து வயது, கையில் ஊன்று கோல், முதுகு கூன் விழுந்தி ருந்தது. சுருங்கிய தோல் குழிவிழுந்த கண்களை நிரவியிருந்தது மூக்குக் கண்ணாடி. எதிலும் ஒட்டாத பார்வை. பளிச்சென்ற வெள்ளை நிறத்தில் முழுநீள பாவாடையும் சட்டையும் அணிந்திருந்தார். தள்ளாடும் வயதிலும் இந்த நாளை என்றுமே தவிர்த்ததில்லை.

நடுங்கும் கையில் சிறிய பூங்கா கொத்து. அதை நினைவிடத்தில் வைத்து சிறிது நேரம் கண்மூடி துதித்து கண்களை திறக்க சில கண்ணீர் துளிகள் கன்னத்தில் வழிந்தது. ஆனால் முகத்தில் கவலையோ சோகமோ இல்லாத விகாரம்தான் விழுங்கியிருந்தது. நாட்பட்டதாலோ என்னவோ நடந்த துன்பத்தை நினைத்து கலங்குவதை கூட பலர் தவிர்த்து இயல்பாகவே வந்து போகிறார்கள்.

ஊன்று கோலை வலக்கையால் பிடித்தபடி மெதுவாக குந்தியிருந்தவரின் இடது கைவிரல்கள் மேடையில் அதைத் தேடியது. கண்களைத் துருத்தி வரிசையாக கல்லில் பதித்திருந்த பெயர்களை ஆராய்ந்து செல்ல மூன்றாவது நிரலில் பத்தாவதாக இருந்த எழுத்துக்களில் பார்வை குத்தி நின்றது.

மீண்டும் மீண்டும் விரல்கள் அந்த பெயரைத் தடவும் போது அதில் படிந்திருந்த தூசி விலகி டான் லிம் என்ற எழுத்துக்கள் தெளிவாக துலங்கியது. பக்கத்தில் வயசு ஒன்பது மாதங்கள் என்று பதியப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஒரு பெயர் மட்டுமே மாதங்களில் சொல்லப்பட மற்றவர்களின் இறந்த வயதுகள் ஆண்டுகளில் பொறித்திருந்தார்கள்.

சிறிது நேரம் அந்த பெயரை பார்த்துவிட்டு எழுந்தவரை பணிப்பெண் மேகா கைகளை பற்றி நடந்தாள். மேடம் லிம்மின் வாயில் இருந்து வார்த்தைகள் பட்டும் படாமல் வெளிவந்து கொண்டிருந்தது.

“இல்லை. என் மகன் என்னுடன் தான் இருக்கிறான். என்னை விட்டு எப்போதும் விலகவில்லை. அவனை யாரும் கொலை செய்யவில்லை” போன்ற வார்த்தைகள் துண்டு துண்டாக வந்தது.

மேகா இந்தோனேசிய பெண். கடந்த நான்கு ஆண்டுகளாக அவரின் வீட்டில் பணிபுரிகிறாள். சீன மொழி தெரியும் என்றாலும் தடைப்பட்டு வந்த வார்த்தைகள் முழுதாக காதுகளில் விழவில்லை.

முன்னரும் மேடம் லிம்முடன் இந்த இடத்துக்கு வந்திருப்பதால் இதை அவள் பெரிது படுத்தவில்லை. அவரை சமாதானப்படுத்தவும் முயலவில்லை. அவரிடம் கேள்வி கேட்க அல்லது அன்பாக பேச யாராலும் முடியாது.

அது கோபமா? இயலாமையா? குற்றவுணர்வா? எதை பொருத்திப்பார்ப்பது என்பதில் இன்னும் அவரைத் தெரிந்தவர்களுக்கு சிக்கல் இருக்கிறது. யாரும் இலகுவில் நெருங்கி பழக முடியாத ஜீவன்.

சிங்கப்பூர் அரசின் உதவியில் பணிப்பெண் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளாள் மேகா. சமைத்தல், துப்புரவு செய்வது, நடை பயிற்சி போன்றவற்றில் ஆதரவாக இருப்பதோடு சரி. குளிப்பதற்கும் அவள் உதவியை நாடமாட்டார். தனிப்பட்ட அவரின் விடயங்களில் மூக்கை நுழைக்க முடியாது.

அவரின் அறைக்கு யார் உள்ளே வருவதையும் கண்டிப்பாக எதிர்ப்பார். அங்கே துப்புரவு செய்வதை தவிர மேகா எதையும் தொட முடியாது.

அது முதியோருக்கு வழங்கப்பட்ட ஓரறை வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு. மேடம் லிம் தன்னால் முடியுமான மட்டும் தனியாகவே கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகள் அந்த வீட்டில் வாழ்ந்தார்.

சில முதியவர்களுக்கே உரிய மற்றவர்களிடம் இருந்து கிடக்கும் அனுதாபத்தை வெறுப்பதாக கூட இருக்கலாம் அல்லது வேறு என்ன காரணமோ தெரியாது.

கடைசி நான்கு வருடங்கள்தான் மேகா துணைக்கு இருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவிடம் இருக்கும் இடத்தில் புல் வெளியை தாண்டி சாலையோரம் டாக்ஸிகள் வரிசையாக பயணிகளை எதிர்ப்பார்த்திருந்தது.

மேகா கையை அசைத்து ஒன்றை தாங்கள் நிக்கும் இடத்துக்கு அழைத்தாள்.

முன்னால் நின்ற நீல நிற டாக்ஸி மெதுவாக அருகில் வரவும் குனிந்து ஓட்டுநரிடம் பெடோக் என்றவள் பின் கதவை திறந்து அவர் ஏறுவதற்கு உதவினாள். டாக்சி கண்ணாடியால் தூரத்தில் எதையோ பார்த்தபடி,

“நேரமாகுது குழந்தைக்கு பசிக்கும். பால் குடுக்க வேணும். சீக்கிரம்போ” என்று ஏதோ அவர் பிதற்றுவது மேகாவின் காதில் மெலிதாக விழுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளை போல் இல்லாமல் இப்போது பிதற்றல் அதிகமாவதை மேகா உணர்வுகிறாள்.

---

கிட்டத்தட்ட ஒருவருடம் இருக்கும். அன்று ஒருநாள் மேடம் லிம்மை உடம்பு முடியாமல் சிறுநீரக பிரச்சினைக்கு மருத்துவமனையில் தங்க வைக்கவேண்டி வந்தது. அன்றிரவு மேகா தனியே தங்கவேண்டி இருந்தது. பாத்திரங்கள் கழுவி வீட்டை கூட்டி சுத்தம் செய்தாள். மேடத்திற்கு இரவு பணிவிடைகள் செய்யும் தேவை இல்லை ஆதலால் விரைவாகவே வேலைகள் முடிந்தது.

சாவதானமாக சோபாவில் அமைந்திருந்து கைபேசியை நோண்டிக் கொண்டிருந்தவள் ஏதோ நடமாட்டமோ சத்தமோ உள்ளே கேட்கும் உணர்வு இடையிடையே எழுந்தது. பூட்டப்பட்டிருந்த அவரின் அறையை அடிக்கடி நிமிர்ந்து பார்த்தபடி சோபாவில் அமர்ந்திருந்தாள். அதன் சாவி எப்போதும் அவருடனே வைத்திருப்பார்.

நேரம் இரவு பதினொரு மணி. கண்கள் சற்று அசர மேகாவையும் அறியாமல் தூங்கம் தழுவியது. அந்த தாலாட்டு இதமாக கேட்டது. அழகி மிருதுவான பூக்கள் போன்ற குழந்தையை உறங்க வைக்கும் மந்திரம். இடையிடையே குழந்தையின் அழுகையும் தாலாட்டுடன் கலந்து வந்தது. ஒரு கட்டத்தில் குழந்தை வீறிட்டு பெரிதாக கத்தவும்

“சனியனே செத்து தொலை நீ பிறந்து என்னை கழுத்தறுக்கிறாய்” என்று அதிர்ந்து கத்திய பெண்ணின் சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்தாள் மேகா. தன்னை மூட வந்த இருள் விலகுவதாக உணர்ந்தாலும் உள்ளிருந்து கேட்கும் தாலாட்டு கிணத்தின் ஆழத்தில் இருந்து அந்த அமைதியை கிழித்துக்கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் உடல் தெப்பமாக வியர்த்து இதயம் வேகமாக துடிக்க அந்த அறையை பார்த்தாள். இது கனவுதான் என்று தன்னை ஆசுவாசப்படுத்தினாலும் தொடர்ந்து தூங்க முடியவில்லை. இன்னும் அந்த ஒலி கேட்கும் பிரமை அவளுக்கு.

வழமையாக இரவில் நீண்ட நேரம் மேடம் லிம்மின் மெலிதான தாலாட்டு பாடல் நடுச்சாமம் வரை கேட்கும். ஆனால் அன்று அவர் இல்லை. அப்போது நேரம் பன்னிரண்டை தாண்டி கொண்டிருந்தது.

ஹாலில் இரவு மின்குமிழ் மங்கலான வெளிச்சம் சூழ்ந்திருந்தது. அவளால் தனியே இருக்க முடியவில்லை. வேகமாக எழுந்தாள் ஒரு நொடியில் கதவை திறந்து வீட்டுக்கு வெளியே வந்து கதவை பூட்டினாள். ஏதோ ஒரு அமானுஷ்யத்தை உள்ளே வைத்து பூட்டிய நிம்மதி வந்தது. இருந்தும் பயம் முழுதாக விலகவில்லை.

மின் விளக்குகள் வரிசையில் கொரிடோர் பிரகாசமாக இருந்தாலும் தனிமை அவளை லிப்டில் ஏற தடுத்தது. லிப்டில் மூன்று பக்கமும் இருக்கும் கண்ணாடியில் தேவையில்லாமல் சில அசைவுகளை மனம் கற்பனை செய்யும். முன்னர் பல தடவை அவளுக்கு அந்த அனுபவம் உண்டு.

வீடு ஆறாம் மாடியில் இருந்ததால் விறு விறு எண்டு படிகளில் இறங்கி கீழ்த்தளத்தை அடைந்தாள்.

“என்ன இந்த நேரத்தில வருகிறா? தூக்கம் வரவில்லையா?” அந்த அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் ரீட்டா ஆன்டி ஓரத்தில் பெஞ்சில் இருந்தபடி அதிசயமாக அவளை பார்த்து கேட்டார்.

அவருக்கு ஐம்பது வயது இருக்கும். கையில் ஒரு புத்தகம். அரைவாசி படித்திருப்பவர் போல மடியில் விரித்தபடி கிடந்தது. அவர் இருந்த இடத்துக்கு அப்பால் படிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட சில காங்கிரீட் மேசைகளும் இருக்கைகளும் வெறிச்சோடி இருந்தது. ஆளரவமற்ற இடம் படிக்க வசதியாக இருக்கலாம்.

அவரை பார்த்ததும் மேகா பெரு மூச்சு விட்டாள். அவரின் முகம் அவளுக்கு பரிச்சயமானதுதான். பக்கத்தில் இருக்கும் வயோதிகர் உடற்பயிற்சி கூடத்தில் வாரத்தில் மூன்று நாட்கள் மேடம் லிம்மை அழைத்து கற்கள் பதித்த தரையில் நடக்க வருவாள். அப்போது இந்த ரீட்டா ஆன்டி அவரை பார்த்து ஹலோ சொல்லி புன்முறுவல் செய்வார். ஆனாலும் மேடம் லிம் அதை பொருட்படுத்துவதில்லை. ஆனால் சில மாதங்களாக ஆன்டியை பார்க்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தனியாக இருக்க ஒரு மாதிரியாக இருக்கிறது. தூக்கமும் வரவில்லை. அதுதான் வெளியில் கொஞ்சம் நடக்க வந்தனான்". என்றாள் மேகா பதட்டத்தை வெளிக்காட்டாமல்.

"மேடம் லிம் வைத்திய சாலையில் என்று கேள்விப்பட்டன்"

"ஆம் அதனால் தான் இன்று தனியாக இருக்கிறேன். ஸ்கேன் செய்து நாளைக்கே வந்து விடுவார்."

"எப்பிடி அவருடன் உனக்கு ஒத்துப்போகுது? ஒரு போக்கான மனிசி"

"நான் எனக்கு தரப்பட்ட வேலையை செய்கிறேன். அவரின் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்வதில்லை கேட்பதில்லை"

"உனக்கு அவரை பற்றி அவரின் கடந்த காலம் பற்றி ஏதாவது தெரியுமா"

"இல்லை"

"எனது அம்மா அவரைப்பற்றி நிறைய சொல்லியிருக்கிறார். இந்த பகுதியில் இருக்கும் பழைய சிங்கப்பூர்களுக்கு மேடம் லிம்மின் கடந்த கால சம்பவங்கள் நன்றாக தெரியும். அவர் முற்றிலும் வித்தியாசமான பெண். அவரை யாரும் இலகுவில் நெருங்க முடியாது. சிலர் அவருக்கு மனப்பிறழ்வு இருப்பதாகவே நம்பினார்கள். ஆனால் வைத்தியர்கள் பரிசோதித்ததில் பிரச்சினை இல்லை என்பதாலே தனியாக தங்க சம்மதித்தார்கள்" என்ற ஆன்டி தான் கேள்விப்பட்ட சம்பவங்களை சொல்ல தொடங்கினார்.

ஜப்பான் சிங்கப்பூரை ஆக்கிரமித்திருந்த காலம்.

மேடம் லிம் கையில் ஒன்பது மாத ஆண்குழந்தையுடன் ஒரு சிறிய வீட்டில் வசித்தாள். அப்போது அவளின் கணவன் உயிருக்கு பயந்து தலைமறைவாக இருந்தான். உறவினர் எதிப்புடன் இளம் வயதில் தனக்கு பிடித்தவனுடன் ஓடி வந்ததால் உதவிக்கு யாரும் இல்லை. மற்றவர்களும் தம்மை பாதுகாக்க மறைவாகவும் ஓடிக்கொண்டும் இருந்த துர்பாக்கியமான நேரம்.

இதனால் மனஉளைச்சலுக்கு ஆளாகியிருந்தவள் பிள்ளை பால் கேட்டு நச்சரித்து அழுவதையும் அதை உரக்க திட்டுவதையும் சுற்று வட்டாரத்தில் தினமும் பலர் கேட்டு இருக்கிறார்கள்.

ஒருநாள் காலை ஜப்பான் ராணுவம் அந்த பகுதி வீடுகளில் தேடுதல் நடத்தியது. அந்த நேரம் மேடம் லிம் பிள்ளையை தூங்க வைத்துவிட்டு தூரத்தில் வயல் கரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றில்

தண்ணீர் எடுக்க போயிருக்கிறாள். வேட்டு சத்தங்களால் அந்த பகுதியே அதிர்ந்தது. அவள் வீட்டுக்கு திரும்பி வரும் போது ஊரே ஒப்பாரி வைத்து கொண்டு இருந்தது. வழமைபோலவே அன்றும் பலரை ராணுவம் சுட்டுக் கொன்றது.

உயிரோடு இருந்தவர்கள் பெரும்பாலும் பெண்களே. அதில் கற்பழிக்கப்பட்ட சிலரும் பிறகு தற்கொலை செய்து கொண்டார்கள்.

மேடம் லிம் இந்த சச்சரவுகளுக்கு வீட்டில் இருந்து வெளியே வரவில்லை. மதியம் அளவில் தன் குழந்தையை தூக்கி கொண்டு குளறியபடி வெளியே வந்தாள்.

"ராணுவம் என் குழந்தையை கொன்றுவிட்டது" என்று திரும்ப திரும்ப கத்தி இறந்தவர்கள் பிணங்களுடன் மரக்கட்டையாக இருந்த தனது குழந்தையையும் கிடத்தினாள்.

ஊரில் உள்ளவர்கள் இறந்தவர்களின் பெயர் விபரம் எடுத்து உடல்களை ஊரின் ஒதுக்கான இடத்தில் அடக்கம் செய்தார்கள். மக்களை அரைவாசிக்கு மேல் பலிகொடுத்த ஊர் வெற்றிச்சோடியிருந்தது.

சிலகாலத்தின் பின் ஊர் சனத்துடன் தானும் வேறு இடத்துக்கு நகர்ந்தாள். சில மாதங்கள் சித்த பிரமை பிடித்த மாதிரி இருந்தவள் குழந்தையின் உடல் தாட்ட இடத்துக்கும் வந்து போனதாக சிலர் பார்த்ததையும் அம்மா சொன்னார். அந்த இடத்தில் நிறுத்திய அன்ரி கொட்டாவி விட்டு மேகாவை பார்த்தார்.

மேகாவின் கண்கள் பனித்திருந்தது.

"ஆனால் உனக்கு தெரியுமா நானும் குழந்தையாதான் இருந்தேன் எனது வீட்டுக்கும் ராணுவம் வந்ததாம். மற்ற எந்த குழந்தையும் அன்று கொலை செய்யப்படவில்லை. முதலில் மேடம் லிம்மை நம்பியவர்கள் பின்னர் சந்தேகிக்கவும் தொடங்கினர் இப்போது வரையும்.

இந்த கதையை கேட்ட மேகா மிகுதி இரவை அந்த பெஞ்சிலே கழித்தாள். அயரும் போது தாலாட்டும் குழந்தையின் அழுகுரலும் மீண்டும் மீண்டும் கேட்டது.

விடிந்து சனநடமாட்டம் தொடங்க கண்விழித்த மேகா சுற்றும் முற்றும் பார்த்தாள். பக்கத்து பொது மண்டபத்தில் வெள்ளை நிற பிளாஸ்திக் விரிப்புகளில் சுற்றிக்கட்டி ஒரு இறந்தவரின் உடல் வைக்கப்பட்டிருந்தது. சீனர்களின் மரணச்சடங்குகள் சிங்கப்பூரில் இவ்வாறான பொது மண்டபங்களில் நடப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையானது. இறந்தவர் ஒரு பெண்ணாக இருக்கவேணும். மேகாவால் உடலின் முன்னாள் வைக்கப்பட்டிருந்த புகைப்படத்தை சரியாக அடையாளம் காண முடியவில்லை.

தூக்கக் கலக்கத்தில் சற்று கிட்ட போனவளுக்கு அதிர்ச்சி. புலராத கலைப்பொழுதிலும் மண்டபத்தில் பொருத்தப்பட்ட மின்குமிழ் வெளிச்சத்தில் ரீட்டா ஆன்டி சிரித்துக்கொண்டு இருந்தார். இரவு தனது ஞாபகத்தில் இருந்ததை அவளால் நம்ப முடியவில்லை. அன்றிலிருந்து பிறகு வந்த இரவுகள் மேடம் லிம் இருந்தாலும் இந்த நினைப்புகளால் நரகமாகவே மாறிவிட்டது

--------------------------

டாக்சிக்கு மேடம் தந்த பணத்தை கொடுத்து விட்டு அவரின் கையை பற்றி இறங்க உதவினாள்.

நேரே தள்ளாடி தள்ளாடி தனது அறையில் சென்று பூட்டி கொண்டவர் சிறிது நேரத்தில் தாலாட்டு பாட தொடங்கினார். மேகாவுக்கு இது புதுமையாக இருந்தது. வளமையாக இரவில் பாடுபவர் இப்போது மாலை ஆறு மணிதான் ஆகிறது. அவள் இரவு உணவை செய்ய தொடங்கினாள்.

தாலாட்டு நின்று விட்டது. இரவு எட்டு மணியாகியும் அவர் கதவை திறக்கவில்லை. சற்று பயம் இருந்தாலும் தைரியத்தை வரவழைத்து கதவை தட்டினாள். எந்த பதிலும் இல்லை. ஒரு மணித்தியாலம் அவள் முயன்றாள் பக்கத்து வீட்டாரையும் உதவிக்கு அழைத்தும் பயன் இல்லை. ஒருவர் காவல் துறைக்கு அழைத்து விபரத்தை சொன்னார்.

விரைவாக வந்த காவல்துறையும் அவசர உதவி மருத்துவரும் அறைக்கதவை உடைத்து உள்ளே சென்றனர். மெத்தையில் மேடம் லிம் ஒருங்கழித்து படுத்திருந்தார். அவரின் நாடியை பரிசோதித்த மருத்துவர் இறந்து விட்டதை உறுதி செய்தார்.

அவரின் கையை தூக்கி போர்வையை விலக்கவும் அங்கே குழந்தை ஒன்றின் எலும்புக்கூடு அவரை பார்த்தபடி ஒருங்கழித்துக் கிடந்தது. அதன் திறந்த வாயில், முதுமையில் ஒட்டியிருந்த அவரின் வலது பக்க முலைக்காம்பு செருகி இருந்தது. என்றுமில்லாமல் இன்று கறள் கட்டிய பழைய றங்குப்பெட்டியின் பூட்டு திறந்திருந்ததை மேகா வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

**கனலி (திகில் குற்றம் துப்பறிதல் சிறப்பிதழ்) 13 ஆனி 2023**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்பவலயம்

"தண்ணி" "தண்ணி" "தண்ணி"

படலையடியில் யாரோ தீனமான குரலில் கூப்பிடும் சத்தம் அந்த நடுநிசியின் நிசப்த்தத்தைக் கிழித்து கொஞ்ச நேரம் கேட்டது. பின்னர் அதுவாகவே நின்றிருக்க வேண்டும் சத்தம் கேட்டு அரைத் தூக்கத்தில் கண் விழித்த முகிலன் மூலை யில் சிணுங்கும் குப்பி விளக்கை வியர் வைக்கு விசுக்கி ஓரமாக கிடந்த கடதாசி மட்டை யால் இன்னும் மறைத்து வைத்து விட்டு திரும்பிப் படுத்தான். காற்றோட் டத்தைத் தொலைத்த அறை. மேற்குப்பக்கமாக இருந்த ஒரே ஒரு ஒற்றை வெளி ஜன்னலும் அடைக் கப் பட்டிருந்தது. விடியும் வரை உறங்கும் இவர்க ளின் மெல்லிய சூடான மூச்சுக்கு காற்றுத்தான் உள் அமுக்கத்தை குறைக் கிறது.



காதை இன்னும் கூர்மையாக்கி தாகத்தில் தொய்ந்த குரல் இப்போது கேட்கவில்லை என்பதை நிச்சயம் செய்தான். வேறு ஒலி எதுவும் கேட்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிசப்தமாகதான் இருந்தது. சில நாட்களாகவே சருகுகளில் ஆட்கள் நடக்கும் சத்தமும் நாய்களின் குரைப்பும் அந்த பிரதேசம் முழுதும் பரவியிருக்கும். பயமும் ஒரு கட்டத்தில் பழக்கப்பட்டுவிடும் என்பது வாழ்க்கையின் இந்த அத்தியாயத்தில் உண்மையாகிவிட்டது. உலகின் எங்கோ ஒரு மூலையில் தங்களைப் போல இன்னும் மனிதர்கள் வாழ்கிறார்கள் என்று அவனுக்கு தெரியும். தன்னை ஆசுவாசப்படுத்த காரணம் தேடினவனுக்கு கடவுள் பலம் உள்ளவனை தான் சோதிப்பான் என்ற சப்பைக்கட்டு போதுமானதாக இருந்தது. பரந்து விரிந்த வானத்து உடுக்களை பார்த்தே பலநாட்கள் ஆகிவிட்டது. அதை நினைத்து வருத்தப்படும் அளவுக்கு முக்கியத்துவம் இல்லை என்றமுடிவுக்கு அவனது குடும்பமும் சுற்றமும் வந்துவிட்டார்கள். எல்லாம் கிடைக்கவேண்டும் என்ற ஆசையைத் தொலைத்தவர்கள்.

முன்பெல்லாம் நடுநிசியில் ஏதாவது கெட்டகனவு கண்டு முழித்தால் சில நிமிடங்கள் அந்தக் கனவைப்பற்றிய சிந்தனை அழையா விருந்தாளியாக மனத்தில் குடையும். மறுபடியும் அயர்ந்தால் மீட்டும் கனவு புதிய களத்தில் தொடரும். காலையில் மனைவிக்கு வரிவரியாக சொல்லுவான். அவள் தான் நல்லது கெட்டது என்று முடிவுரையும் கொடுப்பாள். “நீங்கள் அது செய்யக்கூடாது இது செய்ததால் வந்த வினை” என்று பாடமெடுக்க தொடங்கிடுவாள். தனது திடகாத்திரமான தேகத்தை சற்று உலுக்கி அவள் சொன்னதை ஆமோதிப்பான். ஆனால் “பெரிய அறிவாளி மாதிரி தீர்ப்பு சொல்ல வந்திட்டாள்” என்ற நினைப்புத்தான் உள்ளே இருக்கும். நிகழ்காலத்தில் தூக்கம் தொலைவதால் கனவுகளின் தொந்தரவு இல்லாமல் இருக்கிறான். பயமா? எச்சரிக்கையா? நோயா? எதுவென்று திருத்தமாக சொல்லமுடியாத அலைக்கழிப்பில் அவன் மனம்.

அறையில் வேப்பம் மரத்தில் செய்த மரக்கட்டில்கள் இரண்டு அருகருகே வைத்து கீழே மூலைகள் கிழிந்த பனையோலை பாய்கள் விரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் மூன்று அடி அகல மரக்கட்டில்கள் தான் ஆனால் சாதாரண மறைப்பு கூட பாதுகாப்பு உணர்வை அவர்களுக்கு தந்திருக்கலாம்.

முகிலன், அவன் மனைவி, மூன்று பிள்ளைகள் என ஐந்து பேர் வரிசையாக படுத்திருந்தார்கள். பிள்ளைகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். இடையிடையே நாய்கள் குறைப்பதற்கும், ஆட்கள் நடமாடும் சருகு சத்தத்துக்கும் விழித்துக்கொள்வான். இப்போ கொஞ்ச நாளா நடுச்சாமத்தில் அந்த குரல் கேட்டது. மெல்லிய குரல் விட்டு விட்டு அழைத்தது தாகத்துடன். தூக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் போது மட்டும் அழைக்கிறதா அல்லது பாதி விழித்த போதும் அழைக் கிறதா? என்று மட்டுப்பிடிக்க முடியாமல் இருந்தது. இல்லை எனது மனப்பிரமையா? என்ற குழப்பம் வருவதை அவனால் தவிர்க்க முடியவில்லை.

முகிலன் பலசாலியாக மட்டும் இல்லை மனவலிமையும் அதற்கு இணையாக இருந்தது. அக்கம் பக்கத்து வீட்டாக்களுக்கு அவனைப்பற்றி நன்றாக தெரியும். கிரீஸ் பூதம் என்று யாழ்ப்பாணத்தில் திருடர்கள் திரிந்த நேரம் உதவிக்கு கூப்பிட்டால் பயப்படாமல் முதல் ஆளாக போய் நின்றவன். ஒருதடவை அப்படி பூதமாக வந்தவனை பிடித்து அடித்து துவைத்து அனுப்பின கதையெல்லாம் முகிலனுக்கு இருக்கிறது.

என்னதான் பழைய விலாசங்கள் இருந்தாலும் உயிர், பிள்ளைகள், குடும்பம் என்ற பயம் இப்போது எதையும் செய்யவிடவில்லை. வீரன் எப்போதும் வீரனாகவே இருந்துவிடுவதில்லை. மூச்சுக் காற்றையே மெதுவாக விட வேண்டும் என்ற கட்டாயம். சின்னவன் ஒண்டுக்கு போனாலும் கழுவ, துணி மாத்த விடியும் வரை காத்திருக்கும் இரவுகள்தான் அதிகம். நாற்றம், பிசுபிசுப்பை மீறிய சகிப்புத்தன்மையை இந்த உயிர் அச்சுறுத்தல் தந்திருக்கிறது. மரணம் முடிந்த முடிவு ஆனால் எப்பவரும் என்பது யாருக்கும் தெரியாது என்ற காலம் போய் இப்படித்தான் வரும் என்று திடமாக நம்பும் மனிதர்கள் அவர்கள். ஆகவே தப்பும் வழிகளை தேர்ந்து எடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளவர்கள்.

இரவு எட்டு மணிக்கு பிறகு கூரை ஓட்டு இடை வெளியில் வெளிச்சம் வெளியே தெரியாமல் இருக்க வேண்டும். ஊரடங்கு அமல் படுத்த பட்ட நேரமது. இது **1989** யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பகுதிகள் இந்திய அமைதிகாக்கும் படையின் கட்டுப்பாட்டில் வந்திருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக புலிகளால் இராணுவம் மேல் மறைந்திருந்து தாக்குதல்கள் நடைபெறும். போராட்டங்கள் முதலில் மறைவில் இருந்துதான் தொடங்கியது. கால மாற்றத்தில் இளைஞர்கள் குழுக்களாக ஆயுதங்களுடன் முளைக்க பழைமையும் அனுபவமும் கொஞ்சம் கொஞ்சமாக அஸ்தமிக்க தொடங்கிவிட்டது.

---

பால் நிலா சற்று தாமதமாக கிழக்கில் உதிக்கும் முன்னிருட்டு நாள். அதன் மம்மல் வெளிச்சம் மரங்களின் கிளைகளை தாண்டி அந்த ஒடுக்கமான உள்ளூர் வீதியில் பரந்திருந்தது. வீடுகள் எல்லாம் வெறிச் சோடியிருந்த மனிதர்கள் அற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூனியப்பிரதேசம். மக்கள் இடம்பெயர்ந்து தூரத்து கிராமங்களில் அல்லது யாழ் தீவுப்பக்கங்களில் தஞ்சமடைந்த காலம். மரங்கள், பறவைகள், சில மெலிந்த குட்டை நாய்கள் மட்டுமே சஞ்சாரிப்பது அச்சத்தை ஏற்படுத்தும். பறவைகளும் மரங்களும் இயற்கையுடன் வாழும் போது நாய்கள் மட்டும் இப்படி ஒடிந்து போய்விட்டன. நன்றி காட்டி மனிதனை நம்பியதால் நடுத்தெருவில் நிற்கும் நிலைக்கு வந்ததை இப்போதாவது புரிந்து கொள்ளுமா தெரியாது.

சந்திரண்ணையின் சந்திக்கடை பக்கமாக மதிலின் மேலாக இரண்டு சோடி கண்கள் சுற்றும் முற்றும் பார்த்து கொண்டு இருந்தது. இரண்டு பக்கத்து பாதைகளும் நேராக பிள்ளையார் கோவிலுக்கு போகும் பாதையும் என முச்சந்தியை கண்காணித்தன. மதில் ஓரமாக நின்ற நித்திய கல்யாணி மரம் நல்லா சடைச்சு இருந்ததால் இரண்டு சட்டி தொப்பியைகளையும் மறைத்து வைத்திருந்தது.

நிலவின் ஒளியில் நிறமில்லாத பூக்களை சுமந்து நிற்பது கூட அதற்கு சங்கடம் தான். விடியும் வரை அந்த சங்கடம் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே நாளுக்கு நாள் இடம் மாறி நிக்கும் அந்த இரு இராணுவத்தினரும் இன்று அங்கே பதுங்கி இருப்பது கூட அதற்கு தொந்தரவாக இல்லை.

தூரத்தில் ஒரு நாய் குரைக்கும் சத்தம் மெல்லியதா கேட்டது. உடற்பலம் நாள்வீதம் குறையும் போதும் நாய்கள் இன்னும் குரைப்பதை நிறுத்தவில்லை. வலது பக்க பாதையில் இருவரின் கவனமும் ஒன்றிக்க காதை கூர்மையாக்கி கொண்டார்கள். ஒருவன் தவறினாலும் மற்றவன் இலக்கை அழிக்கவேண்டும் இல்லாவிட்டால் இருவருக்கும் அதுதான் கடைசி தருணமாகும். பிழை சரி என்பதற்கு அப்பால் ஒரு கடமையை செய்ய பணிக்கப்பட்டவர்கள். கடமைக்கு கொலை செய்வது, காசுக்கு கொலைசெய்வது, கொள்கைக்கு கொலை செய்வது, பழிக்கு கொலை செய்வது இப்படி கொலைக்கு வியாக்கியானம் தேடும் உலகம். இவர்களையும் சில காரணங்களுக்காக இந்த வேலைக்கு அமர்த்தியுள்ளது. கையில் இருந்த துப்பாக்கிகள் ஆயத்தமாகின பல நாளுக்கு பிறகு வேட்டையாடும் ஆவலில். நிலை எடுத்து நின்றால் அடுத்த நாள் காலை வரை நகராமல் இருக்கவேண்டும். ஏனெனில் மற்ற சந்தியில் நிக்கும் சக இராணுவ வீரனே ஆள் தெரியாமல் போட்டு தள்ளிவிடுவான். பயம் மனிதனை கொலையாளி ஆக்கி விடும் நிலமை. மக்கள் வெளியேறி விட்ட நிலையிலும் கெரில்லா பாணியில் இராணுவத்தின் மீது தாக்குதல்கள் தொடர்ந்தது.

-------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப இரண்டு கிழமைக்கு முன்தான் முகிலன் குடும்பம் அயலட்டையோடு ஊர் திரும்பியிருந்தது. அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாது. எதிர்காலம் பற்றிய பிரக்ஞை இல்லை. ஊரோடு ஒட்டிவாழ்ந்தால் சரி என்று மற்றவர்கள் போலவே அவனும் நினைத்தான்.

சில நாட்களுக்கு முன் ஊர் கூடி கதைக்கும் போது ஒரு விடயம் புலப்பட்டது. அவனின் வீட்டு முன் காணிப் பற்றைக்குள் சில எலும்பு துண்டுகள், பாதி எரிந்த மண்டையோடு இருந்ததை கண்டிருக்கிறார்கள். முன்னமே வந்த சில அயல் வீட்டுக்காரர்கள் சிதைந்து நாற்றமெடுத்த பிணம் ஒன்றை எரித்து விட்டார்களாம் என்று ஒரு கதை பரவியிருந்தது. அதை முகிலனும் நாலுபேரிடம் விசாரித்து தெரிந்து கொண்டான். பன்னையும் நெருஞ்சியும் மண்டி இருந்த பற்றைக்காணி. முகிலனும் ஆவலுடன் விடுப்பு பாக்க போனான்.

கொஞ்சம் பற்றை செடிகள் எரிந்து கரிக்கட்டியாக கிடந்தது. ஓரத்தில் மண்டையோடு அண்ணாந்து பார்த்தது. அரை குறையாக எரிந்த கை கால் எலும்புகள் சிதறி அன்கொன்றும் இன்கொன்றுமாக கிடந்தது. நெஞ்சில் கிலியுடன் மூன்று தரம் துப்பி விட்டு வேகமாக வீட்டுக்கு திரும்பினான் . பிணங்களும் எலும்புகளும் மலிந்து இருந்த நேரம். அறிமுகம் இல்லாத முகங்களுடன் தேடுவாரற்ற பிணங்கள் அவர்களுக்கு புதியவையல்ல. இருந்தாலும் தங்கள் வசிப்பிடத்துக்கு அருகாமையில் கிடப்பது பெரும் தொந்தரவாகவே இருக்கும். கெட்டவை தூரத்தில் அழகாகவும் சுவாரசியமாகவும் இருக்கும். அருகாமையில் கசக்கும் எனது முகிலனுக்கும் சரியாக பொருந்தியது. செய்தி பரவினாலும் ஊரார் யாரும் அதை பெரிது படுத்தவில்லை. பாதை ஓரம் என்பதால்

அந்த வழியால் போய் வாறவர்கள் திரும்பி பார்க்க தவறவில்லை. முகிலனின் கண்களும் விதிவிலக்கு இல்லாமல் அதை தேடும்.

அவசரமாக வீட்டுக்கு வந்தவன் சற்று பதட்டமாகவே இருந்தான். முன்னமெல்லாம் பதட்டம் இல்லாமல் காரியம் பார்க்கும் ஆள். அதை பார்த்ததும் கொஞ்சம் மாறித்தான் போனான்.

“இரவில படலைக்கு முன்னால வாளில தண்ணி வை எண்டு கோயில் ஐயா சொன்னவர்” என்று மனைவிக்கு சொல்ல அவள் முகிலனை பாத்து,

“செய்து பாருங்கோ எதாவது விஷயம் இருக்கும். சரி வராட்டி களிப்பு இல்லாட்டி பூஜை செய்து பாப்பம். நானும் நினைக்கிறன் அந்த ஆவி தான் திரியுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு" என்றாள் சற்று கிலியுடன். அவளுக்கு இன்னும் இந்த ஆவிகள் மேல் நம்பிக்கை இருந்தது.

"பிள்ளைகளுக்கு இந்த விஷயம் தெரியாமல் பாத்துக்கொள்" என்றான் கொஞ்சம் எச்சரிக்கையுடன்.

அவனும் இந்த ஆவி கதையை மெல்ல மெல்ல நம்பத்தொடங்கி விட்டான். பிள்ளைகளுக்கு அந்த நினைவுகள் இரவில் கெட்ட கனவுடன் திடுக்கிட்டு எழுப்பி அழவைக்கும் என்ற பயம் வேறு. வெளில ரோந்து போற இராணுவம் சந்தேகப்பட்டு வீட்டுக்க இறங்கி விடும் இல்லாட்டி கண்மூடிதனமா சுட்டுத் தள்ள வாய்ப்பிருந்தது. அவ்வாறான நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டிருந்த தருணம் என்பதால் இந்த எச்சரிக்கை.

எதாவது தாக்குதல் நடந்தால் அதிகம் சுற்றி வளைப்பும் சந்தேகத்தில் கைதுகளும் நடக்கும். அந்த நாட்களில் முகிலன் குடும்பம் மற்றும் பக்கத்தில் உள்ள சில குடும்பங்களுடன் சேர்ந்து இரவில் தங்குவார்கள். கூட்டமா இருந்தால் ஆளாளுக்கு உதவியும் கொஞ்சம் துணிவும் இருக்கும்.

அன்றில் இருந்து ஒரு மாதம் படலைக்கு வெளியே தண்ணி வாளி இரவில் வைக்க கொஞ்சம் கொஞ்சமாக கூப்பிடுவது நின்றது. சில வேளைகளில் பிரமைக்கும் பிரதியுபகாரம் தேவைப்படுகிறது.

---------------------

இடுப்பில் சாரத்தில் செருகியிருந்த கைக்குண்டு வயிற்றில் உராய்ந்தது. பலநாட்கள் அதை கொண்டு திரிந்ததால் அவனின் அடி வயிற்றுப்பகுதி சிவந்து கன்றியிருந்தது. அஞ்ஞான வாசம். மறைந்து வாழ்வது தேவை பட்டால் வெளிப்பட்டு தாக்குவது. முடிந்த அளவு தாக்கி விட்டு மீண்டும் ஓடி ஒளிந்து கொள்ளும்வது அவன் சார்ந்த போராட்ட குழுவின் தந்திரம்.

அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். பலநாள் நித்திரையை தொலைத்த சோர்வு முகத்தில் தெரிந்தது. சொந்தம் என்று சொல்லுவதற்கு அம்மா மட்டும்தான் இப்போது உயிருடன் இருக்கிறார். எறிகணை வீச்சில் தகப்பனும் தங்கையும் அற்பாயுளில் போய் சேர்ந்தே போயிவிட்டார்கள். விரக்தியுடன் திரிந்தவனை அதாவது சந்தர்ப்பம் இக்குழுவில் இணைக்க தூண்டிவிட்டது. தனிமையில் திரிவதை தவிர்க்க குழு ஆலோசனை வழங்கினாலும் இன்று அவனுக்கு வேறு தெரிவும் இருக்கவில்லை. ஏற்கனவே அவனுடன் வேவு பார்க்க நகருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனவர்கள் திரும்பி விட்டதால் வேறு வழியில்லாமல் ஒற்றையில் வருகிறான்.

இரவு பிந்தினால் ஆமி இறங்கிடுவான். வேகமா சைக்கிளை மிதித்துக் கொண்டு மற்றவர்கள் மறைந்ததிருந்த இடத்தை நோக்கி போனான்.

முச்சந்தியை நெருங்க கால் இடறி பெடல் கணைக்காலை பதம் பார்த்தது. வலியில் துடித்தவனுக்கு உள்மனம் ஏதோ உறுத்தியது. இது வளமையான பாதைதான் என்று தனக்கு தானே சமாதானம் செய்து சைக்கிளை வேகமாக உதைத்தான்.

சந்தியை கடந்து கொஞ்சம் துரம் போக "பட" "பட" என்று சத்தம் தோட்டாக்கள் அவன் முதுகை சல்லடையாக துளைத்தன. நிலை குலைந்து சைக்கிளுடன் கீழே விழுந்தவன் இடுப்பில் இருந்த கைக்குண்டை தேடினான். அது தவறி விழுந்து பாதையின் மற்ற பக்கம் போய்விட்டது. வேறு வழியில்லாமல் தவண்டு பக்கத்து காணியில் உள்ள பற்றைக்குள் சென்று விட்டான். இரத்தம் பீறிட்டு கொண்டிருந்தது. தோட்டாக்கள் பாய்ந்த உடல் வெப்பம் தாங்காமல் துவண்டது. வாய் தண்ணி தண்ணி என்று அனுங்கி கொண்டிருந்தது.

**தீம்புனல், 08 தை 2022**

---

"எனக்கும் அவருக்கும் இடையில் உள்ள சம்பந்தத்தை அன்பு என்று அழைத்தாலும் சரி. இது ஆராய்ச்சியாளரின் பணி. நாங்கள் சில சமயம் சண்டையும் போட்டுக் கொள்வோம். பல நாட்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாமலே இருந்திருக்கின்றோம். எங்களைச் சமாதானம் செய்ய கிருஸ்ணன் வரவேண்டி இருக்கும். எங்களுக்குள்ளேயே ஒருவர் கிருஸ்ணர் ஆகிவிடுவோம். நாங்கள் இருவரும் ஒருவர் மற்றவருக்காக வாழ்ந்தோம். வேறு ஒருவர் அந்த ஸ்தானத்தில் இருக்க முடியாது. இதை ஒருவர் உணரத்தான் முடியும். சொல்லாலோ படிக்கவோ முடியாது. கண்ணுக்கும் காதுக்கும் இடையே மனம் பிணைக்கப்பட்டிருந்தது. பொருள் தெரிந்து கொள்வதற்காக இந்த மனதை நான் ஏவி விடுகின்றேன். மொழி இதை விளக்க முடியாது. அது ஊமை மனம். ஊசலாடும் தன்மை கொண்டது."

**அர்த்தநாரீஸ்வரர் நாவலிலிருந்து**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை எப்படி அமைய வேண்டும்?

வாழ்க்கையின் ஒரு சின்னஞ்சிறு காட்சியோ, மின்னல் போன்ற நிகழ்ச்சியோ, மெல்லிய அசைவோ, சூறாவளியின் சுழற்சியோ, நீர்க்குமிழியின் வட்டமோ, ஏதாவது ஒரு அணுவின் சலனமோ சிறுகதையாக இடமுண்டு.

சிறுகதைக்கு இலக்கணமோ, வரைமுறையோ, பண்போ கிடையாது என்று கூறுவோரும் உண்டு. ஆனால் சிறுகதைக்கு, பண்போ தனி இலக்கணமோ இல்லை என்று கூறிவிட முடியாது என்போரும் உண்டு. சிறுகதைக்கென இரண்டு நூற்றாண்டு காலப் புதிய மரபு தோன்றிவிட்டது. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிறுகதையின் பொதுவான தன்மைகள் குறித்து ஆய்வுக் கருத்துகள் வெளிவந்துள்ளன. இதன் அடிப்படையில் ஆய்வாளர்கள் சிறுகதைக்கெனச் சில வரைமுறைகளைச் சுட்டிக் காண்பித்துள்ளனர்.

1) தனிமனித அல்லது சமுதாய வாழ்க்கையைச் சுவையோடு பிரதிபலிக்க வேண்டும்.

2) சிறுகதையில் ஒரு மனிதர் அல்லது ஓர் உணர்வு, ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு சிக்கல் தான் தலைதூக்கியிருக்க வேண்டும்.

3) அளவுக்கு அதிகமான கதைமாந்தர்களுக்கு அங்கு இடமில்லை.

4) விரிவான வருணனைக்கும், சூழ்நிலைக்கும் சிறுகதை இடம்தரல் கூடாது.

5) பாத்திரங்களின் உரையாடல்களில் சொற்செட்டு அவசியம்.

6) சிறுகதை நம்பக் கூடிய உண்மைத் தன்மையினைக் கொண்டு விளங்குதல் வேண்டும்.

7) நல்ல சிறுகதை ஆல விதையைப் போல் விரிவாகக் கூடிய கதைக்கருவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒரு நல்ல சிறுகதை என்பது ஒரு சுவைமிக்க மாம்பழத்தை இறுதிவரை விரும்பிச் சுவைப்பது போன்றதாகும். அவ்வாறு இன்றி, மாம்பழத்தை முதல் கடியிலேயே வீசியெறிந்து விட வேண்டும் என்ற எண்ணத்தை ஒரு சிறுகதை ஏற்படுத்தினால், அச்சிறுகதையினால் பயன் ஒன்றும் இல்லை என்பது தெரியவருகிறது.

ஒரு சிறுகதைக்குப் பின்னே உள்ள படைப்பாளரின் கலை ஆற்றல், கற்பனைத் திறன், சொல்லாட்சி, அவர் மறைமுகமாகக் கூறும் செய்தி - இவையனைத்தும் இலக்கண வரம்புகளை விட முக்கியமானவை.

**சிறுகதையின் ஆரம்பம்**

சிறுகதையின் தொடக்கம் குதிரைப் பந்தயம் போன்று விறுவிறுப்பாய் அமைதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். சிறந்த சிறுகதைக்குச் சிறப்பான தொடக்கம் இன்றியமையாததாகிறது. அப்பொழுது தான் அதன் தொடர்ச்சி நெகிழ்ச்சியின்றி அமையும். படிப்போரின் கவனத்தை ஒருமுகப்படுத்தவும் உதவும். சிறுகதையின் தொடக்கம் வாசகர்களை ஈர்த்து, படிக்கத் தூண்டுவதாய் இருத்தல் வேண்டும். சிறுகதையில் ஒவ்வொரு வரியும் முக்கியம். அதில் அநாவசியத்திற்கு இடமில்லை என்பதிலிருந்து தொடக்கம் சிறப்பாக அமைய வேண்டியதன் அவசியத்தை உணரலாம்.

**சிறுகதையின் முடிவு**

சிறுகதையின் தொடக்கத்தைப் போன்றே முடிவும் முக்கியத்துவம் பெறல் வேண்டும். சிறுகதையின் முடிவு இறுதிவரை படிப்போரின் கவனத்தைக் கவரக் கூடியதாய் இருக்க வேண்டும். சிறுகதையில் முடிவு கூறப்படவில்லை எனில் அது மனத்தில் நிலைத்து நிற்காது. கதையின் முடிவு உரைக்கப்படல் அல்லது சிந்திக்கச் செய்தல் ஆகியவற்றின் மூலமே படைப்பாளரின் ஆற்றல் உணரப்படும். ஆகவே சிறந்த சிறுகதைக்குச் சிறப்பான முடிவு அவசியம் என்பது உணரப்படுகிறது.

**சிறுகதையின் உச்சநிலை**

உச்சநிலை என்பது, வாசகர்கள் எதிர்பாராத வகையில் அல்லது உணர்ச்சிக் கொந்தளிப்பின் உச்சியில் கதையை முடித்தலாகும். சிறுகதைகளில் உச்சநிலைக்கு இடமில்லை எனில் அது சாதாரணக் கதையாகவே கருத இடமளிக்கும். படைப்பிலக்கிய நிலைக்குத் தகுதியுடையதாகாது. உச்சநிலையே படைப்பாளரின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதாயுள்ளது. படைப்பாளரின் மறைமுகக் கருத்துகள் சில வேளைகளில் உச்ச நிலைக்கு இடமளிப்பதும் உண்டு.

**சிறுகதையின் அமைப்பு**

சிறுகதை விறுவிறுப்பாய்த் தொடங்கி, அதன் தொடர்ச்சியில் நெகிழ்ச்சி இல்லாமல் இயங்கி, உச்சநிலைக்குச் சென்று முடிவுவரை படிப்பவரின் கவனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும். படிப்பவர்களைச் சோர்வடையச் செய்யக் கூடாது. கதை உணர்ச்சியோட்டம் உடையதாய் அமைதல் வேண்டும். கதையமைப்பானது சங்கிலித்தொடர் போன்று கதைமாந்தர்களிடையே பின்னிப் பிணைந்து காணப்பட வேண்டும். கதையின் கருப்பொருள் எளிமையானதாய் இருக்க வேண்டும்.

சிறுகதை மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாய் அமைதல் வேண்டும். சமுதாயத் தேவையை நிறைவு செய்யும் பாங்கிலும் அமைதல் வேண்டும்.

ஒரு பக்கத்தில் முடிந்த சிறுகதைகளும் உண்டு. அறுபது பக்கம் வரை வளர்ந்த சிறுகதைகளும் உண்டு. பொதுவாக, கதையின் கருத்துக்குப் பொருந்துகின்ற நீளம்தான் உண்மையான நீளம். இதைப் படைப்பாளர்தான் தீர்மானிக்க வேண்டும். சிறுகதைகள் எளிய நடையமைப்பில் அமைதல் வேண்டும்.

நன்றி : இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மஞ்சரி 39 ஒரு பார்வை

தன் வேலைப் பழுவிற்கிடையிலும் எம் அன்பான வேண்டுகோளை ஏற்று எழுத்தாளர்களை ஊக்குவித்தும் அவர்தம் பிழைகளைச் சுட்டிக்காட்டியும் மாதந்தோறும் உங்களை மகிழ்விப்பவர்
**பேராசிரியர்**
**செ. யோகராசா**

**உன்னாஸ்கிரி - கேணிப்பித்தன்**
மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் ஆசிரியப்பணி அப்பிரதேச வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்த ஆசிரியர்பற்றிப் பல கதைகள் வந்துள்ளன. இச் சிறுகதையும் அத்தகையதாயினும் மொழி வளம், கதைக்களம், தளம், காரணமாக கவனத்திற்குரியதாகிறது.

**சேர்க்கை- ரஜிதா அரிச்சந்திரன்**
போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு பிடுபடும் இளைஞர்கள் பற்றிய கதைகளில் இதுவுமொன்று. பழைய கருவெனில் புதிய முறையில் எழுதுக என இப்பகுதியில் பல முறை குறிப்பிட்டும் ஆசிரியர் அதனைக் கருத்திற் கொள்ளாமல் கரு, கதைப் பின்னல் போன்றவைபற்றி தெளிவின்றி எழுதியிருப்பது விமர்சனத்திற்குரியது.

**நேரந்தப்பிய பொழுது - சாய்ந்த மருது எம். சீ. ஏ. பரீத்**
கருபற்றியோ சிறுகதைக்கான பிரக்ஞை பற்றியோ அக்கறையின்றி எழுதப்பட்ட படைப்புகளின் வரிசையில் இதுவு மொன்று.

**கச்சை - சுரேந்திரன் தர்சித் ராகுல்**
முற்றிலும் புதிய கரு. எழுதும் முறையும் சிறப்பாக உள்ளது. பாராட்டுகள். ( இச் சிறுகதையின் ரிஷிமூலம் பற்றி அறிய வாசகர்கள் முனையலாம்)

**சீனத்தும்மாவும் வாங்காமத்துக்காரியும் - இரண்டாவது விசுவாமித்திரன்**
முஸ்லிம் பெண்கள் இத்தா அனுஷ் டிப்பதுபற்றி பல கதைகள் வந்திருப் பினும் முற்றிலும் புதிய கோணத்தில் நுட்பமான முறையில் உயிர்த் துடிப் பான மொழி நடையில் எழுதப்பட்டி ருப்பதோடு வாசகர்பலருக்கு புதிய தொரு பார்வையையும் தருகிறது.

**பணத்தாசை - காரைக்கவி கந்தையா பத்மானந்தன்**
மேலே சேர்க்கை, நேரந்தப்பிய பொழுது ஆகியவற்றுக்கு எழுதிய குறிப்புகள் இக்கதைக்கும் பொருந்தும்.

**சஜ்ஜாத் நானா - கஸ்ஸாலி அஷ்ஷம்**
ஒரு காலத்தில் முஸ்லிம் சமூகத்தினருக்கு தேவையாக இருந்தவரது தற்போதய வாழ்க்கை நிலை என்ற வகையில் புதிய கரு. மேலும் இக்கதை சிறப்பாகச் செதுக்கப்பட்டிருந்தால் சிறந்த கதைகளில் ஒன்றாக இது அடையா ளப்படுத்தப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LUXMI
EDUCATION CENTRE
LEC

# ENROLLING NOW
2022 / 2023

REGISTER
NOW

www.leconline.co.uk
0208 573 0368
07852 810 285

## WHAT WE OFFER

01.
KS1 & KS2
Maths
English
Science

02.
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

03.
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அற்புதமான அழகுமிகு
வடிவங்களில் குறைந்த
விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது
வெஸ்டேர்ண் ஜுவல்லர்ஸ்.

# WESTERN
JEWELLERS

Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, HA0 4YA

SPECIALISED IN 22ct GOLD, WHITE GOLD, PLATINUM & DIAMOND JEWELLERY

Tooting Branch:
230 Upper Tooting Road
London, SW17 7EW

## SILK EMPORIUM

122 Upper Tooting Road
London, SW17 7EN

FIRST JEWELLERY SHOP IN UK

WWW.WESTERNJEWELLERS.COM
TEL : 020 8903 0909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org